# எரிமலை

ஆடி 1994



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்புடைய ஆசிரியருக்கு!

சித்திரை இதழில் திருத்தங்களுடனும் விடுபட்டுப்போன வரிகளுடனும் வெளிவந்த காவிரிநாடானின் "பூங்கரம் நீட்டும் பிள்ளை" கவிதை படித்தேன். அடக்க முயன்றும்.... முடியாமல் அழுதே விட்டேன். விடுதலைப் புலிகள் குறித்த இந்தியா டுடேவின் கட்டுரையொன்றில் இளம் விடுதலைப் புலியிடம் கேட்கப்பட்ட வினாவிற்கு "தாய் மண்ணை நேசிக்க மீசை முளைக்க வேண்டிய அவசியமில்லை; ஆசை இருந்தால் போதும்" என்ற விடைதான் பூங்கரம் நீட்டும் பிள்ளையின் கவிதையிலும் உணர்ந்தேன். எரிமலை மாதாமாதம் புதுப் புது மெருகுடன் வெளிவருகிறது. எரிமலையைப் படித்தவுடன் விடுதலைக்காகப் போராடும் அந்த உத்தம நண்பர்களோடு உரையாடியது போன்ற உணர்வு பெறுகிறேன். அடுத்து எரிமலையில் திங்கள் பெயர்களை புதிய முறையான 'சுறவம்', 'கன்னி' போன்றே வெளியிட வேண்டுகிறேன்.

"ஆசைத்தம்பி"
தமிழ்நாடு

எரிமலை ஆசிரியருக்கு,

மாசி-94 இதழில் தமிழினத்தின் முகவரி பிரபாகரன் என்ற எனது பாடலில்

"இங்கென்ன பேச்சு
தமிழீழமே மூச்சு"

என்று எழுதியிருந்த வரிகள்

"இங்கென்ன பேச்சு,
தமிழீழமே பேச்சு"

என்று தவறாக அச்சேறி இருக்கிறது. இதைவிட மிகப்பெரிய தவறு "தூயதமிழ் இயக்கம் சாத்தியமில்லை என்பதையும் நாம் அறிவோம்" என்ற ஆசிரியரின் குறிப்புத்தான்.

முதன் மொழியாம் செந்தமிழில் முடியவில்லை என்றால் வேறெந்த மொழியால் முடியும். "தமிழீழமே முதன் மொழி; ஆரியத்துக்கு மூலம்" என்று சொன்ன பாவாணர் அவர்களின் ஆய்வின் முடிவை அறியீரா?

எந்த வளமையும் இல்லாத, இலக்கணச் செறிவும் அற்ற மொழியினர் எல்லாம் தம்மொழிக் காப்பிற்கு அரணாக இருக்கும் போது தனித்தியங்கும் தன்மையுள்ள



நம்மொழியால் இயலாது என்பது அறிவுடமையாகா?

ஒரே மதத்தினராக இருந்தும் வங்க மொழி பேசியவர்களின் மீது உருது திணிக்கப்பட்டதால் தான் வங்கதேசம் உருவானது. சிங்கள மொழி திணிப்பால் தானே தமிழீழம்.... ஆனால்...

"மொழி மானம் காக்காதவன் தன்மானம் பேசுவது

முகத்திரண்டு கண்ணகற்றி பார்ப்பேனே என்பதொக்கும்"

"மொழியழிந்தால் இனமழியும், நாடழியும் என்றுணர்ந்து மொழிகாக்க தமிழியக்கம் இயற்றியவன்-பாவேந்தன் மொழிக்காப்பே தன் வாழ்வாய் மாற்றியவன்."

தங்களின் கருத்தை மறு ஆய்வு செய்யுங்கள். சரியான புரிதலுக்கு வாருங்கள்.

உலகில் வேறெந்த மொழிக்காரனும் தன் மொழியால் இது முடியாது என்று சொல்லமாட்டான்; தமிழனைத் தவிர.

"தனித்தியங்கும் தன்மை
தமிழுக்கு மட்டுமல்ல...
தமிழனுக்கும் உண்டு."

நெருப்பில் ஏது தூசு... மாசு... எரிமலையில் நம் தமிழை செந்தமிழை எதிர்பார்க்கும்

புதுவை தமிழ்நெஞ்சன்
தமிழ்நாடு.

எரிமலை ஆசிரியர் அவர்கட்கு!

தங்களின் எரிமலை இதழைப் படிப்பதில் நானும் ஒருவன். வைகாசி இதழில் இரண்டாவது பக்கத்தில் உள்ள "இனிவரும் நாட்களில் இளவேனில் கருக்கட்டும்" என்பதை படித்தேன். ஒரு கணம் என் கண்கள் நீரால் நிறைந்தன. காரணம் சிறு வயதிலிருந்து வல்லிபுரக் கோவிலுக்கு வண்டிபூட்டும் வண்டிக்காரர் நாங்கள். ஈழம் மலரும். நாங்கள் வல்லிபுரக் கோவிலுக்கு வண்டிபூட்டுவோம் என்பதை உறுதிபூண்டு உங்கள் பணி தொடர வாழ்த்துகிறேன்.

அன்புடன் ஆனந்தன்
ஜேர்மனி.

எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,

எரிமலை மாதாந்த இதழை தவறாமல் விரும்பி படிப்பவர்களில் நானும் ஒருத்தி. இவ்விதழில் வரும் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் அனைத்தும் நன்றாக உள்ளன. ஓர் சிறுமியான என்னையே இவ்விதழ் சிந்திக்க வைக்கின்றது. உங்கள் பணி தொடர என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

வெல்லட்டும் எங்கள் புலி அண்ணாக்கள்
மலரட்டும் எங்கள் தமிழீழம்.

அன்புடன் பிறேமா.
பேர்லின், ஜேர்மனி.

அன்புடையீர் வணக்கம்,

தமிழனுக்கென்று நாடுசமைக்கும் நற்பணியில் ஈடுபட்டுள்ள தங்களுக்கு என் நல்வாழ்த்துக்கள்.

வடவனுக்கு வால்பிடித்து அவன் கால் நக்கி நாற்காலி பிடிக்க அலைபவர்கள்தான் இங்கு தமிழ்நாட்டுத் தலைவர்கள்.

மண்ணடிமை தீர்க்க வழிகாணாது தன் பெண்டுபிள்ளை சுகந்தேடி அலைபவன் தமிழினத் தலைவன். இந்த அடிமைகளோடு அடிமையாக உள்ள எம்போன்றோர் பெரிதாக உங்களுக்கு உதவிட இயலாது உங்கள் வீரம் செறிந்த போர்க்களச் செய்தியினை இங்குள்ள மக்களுக்கு எடுத்துச் சொல்லி மானமுள்ள தமிழன் ஈழத்தில் வாழ்கிறான் என்று கூறி இளைஞர்களிடம் பிரபாகரன் பற்றிய நம்பிக்கையினை வளர்த்து வருகிறோம். அதற்குத் தங்கள் எரிமலை பெரிதும் உதவியாக உள்ளது. பங்குனி இதழ் எனக்கு வரவில்லை. என்னிடமிருந்து அதை வாங்கிப் படிக்கும் இளைஞர்கள் வந்து கேட்டவண்ணமுள்ளனர் பங்குனி இதழை அனுப்பி உதவிடவேண்டுகிறேன்.

மகேசன்
தமிழ்நாடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பதின்மூன்றாம் ஆண்டு
ஆடி 1994

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு



**C/O T.C.C-France,**
**341, Rue des Pyrénées,**
**75020 Paris.**
**Tel: 43 58 11 42**


www.tamilarangam.net

# பலச்சமநிலையும ஜனநாயக விழுமியங்களும்

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் முடிவுகாலம் நெருங்கிவருகிறது. நீண்டகாலமாக விற்றிருந்த அதிகாரபீடத்தில் ஏற்கனவே உடைவுகள் ஆரம்பித்துவிட்டன. தோல்வியின் அறிகுறிகள் நிச்சயமாக்கப்பட்டு வருகின்றன. இந்த இறுதிக் காலத்திலும் ஜனநாயகப் போர்வைக்குள் பாதுகாப்புத் தேடிக்கொள்ளவே ஐ.தே.கட்சி அரசாங்கம் முயன்று வருகின்றது. இது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதே கேள்விக்குறி. ஆட்சியாளரின் நோக்கங்கள், பதவி ஆசைகள், ஊழல்கள், இனவாதத்துடன் கூடிய இராணுவத் தன்மை என்பன ஜனநாயகபூர்வ ஆட்சிமாறுதலுக்கு வழிவகுக்குமா என்பதே ஆய்வாளர்களின் ஆதங்கம். ஜனநாயகப் போர்வையைக் கழற்றி எறிந்துவிட்டு, சிங்கள இனவாதம் இராணுவ ஆட்சிக்குள் தனது இருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்கான சூழ்நிலைகளே சிறீலங்காவில் நிறையக் காணப்படுகின்றன. எனவே பாராளுமன்றக் கலைப்பும், இவ்வருட ஆவணியில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்ட பாராளுமன்றத் தேர்தலும் நிலையான ஜனநாயக அம்சங்களல்ல; மாறும் தன்மை (Transient) கொண்டவை என்றே கருதலாம்.

முஸ்லீம் பள்ளிவாசல்களில் பகிரங்கமாகத் தலவாத்து ஓதுதலைத் தடுத்தல், சிறுபான்மை மதங்களைத் தரம் இறக்கிக் கட்டுப்படுத்தல் போன்ற பிற மத எதிர்ப்பு நடவடிக்கைகள் சிறீலங்கா ஜனாதிபதியின வெளிப்படையான வழிகாட்டலின் கீழ் தலைதூக்கத் தொடங்கியுள்ளன. இவை மாத்திரமல்ல, இலங்கை முழுவதையும் சிங்கள, பௌத்த நாடாக்குதல், தலைநகர் கொழும்பின் பெயரை மாற்றுதல், பௌத்தத்தை அரசமதமாக்குதல் போன்ற தீவிர இனவாத, மதவாத நடவடிக்கைகள் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றன. இத்தகைய பிறஇன அழிப்பு, பிறமத எதிர்ப்புப் போக்குகளை நிறைவேற்றுவதற்கு விடுதலைப் புலிகளே தடையாக இருக்கிறார்கள் என்பது யதார்த்தம்.

மேலும், சிறீலங்காவில் ஏற்படக்கூடிய பிறமத, மிதவாத, இடதுசாரிச் சலசலப்புகளைச் சமாளிப்பதற்கு இராணுவ ஆட்சியையே தீவிர சிங்கள பௌத்த இனவாதம் நாடும் என்பதும் உண்மையே. இதுவே பெரும் போக்காக சிறீலங்காவில் வளர்ந்து வரும் நிலையில் ஜனநாயக, பல்லின, பல்மத, பன்மைச் சமூகக் கோட்பாடுகள் சிறீலங்காவில் வெகுவிரைவில் அடிபட்டுப்போகும் என்பதும் தவிர்க்கமுடியாத நியதியாக அமையும். இத்தகைய வரலாற்றுப் போக்குகளை உணர்ந்துகொள்ளாது இனப்பிரச்சினைக்கு எதிர்க்கட்சியின் வரவையும், சந்திரிகா குமாரணதுங்காவின் ஆட்சியையும் எதிர்பார்த்து நிற்போர் அரசியல் அலிகளே.

வன்முறையையும், அடிப்படைவாதத்தையும் ஆதாரமாகக் கொண்ட தீவிர சிங்கள, பௌத்த இனவாதத்தின் முன் எவரும் நிற்கமுடியாது. இத்தகைய கொடூர பாசிசப் போக்கினைத் தடுத்து, இனஅழிப்பை நிறுத்தும் தேவையுடனான எதிர்விளைவாகவும் (reactive) எதிர்ச்சக்தியாகவுமே (Resistance) விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்றம் கொண்டது; செயல்பட்டு வருகிறது. எனவே தீவிர சிங்கள, பௌத்த இனவாதம் தனது நோக்கங்களை நிறைவேற்ற சர்வாதிகாரத்தையே நாடும். அதற்கேற்றவாறு அரசியல் யாப்பும் மாற்றப்படும். அதிகபட்ச அதிகாரப்பரவலாக்கம் (Highest degree of devolution) என்பது கூட தற்போதைய அரசியல் யாப்பினுள் சாத்தியமில்லை என்பதோடு, அதற்கேற்றவாறு அரசியல் யாப்பினை மாற்றுதலும் நடைமுறைக்கொவ்வாத விடயமே. இது சாத்தியம் என சித்து விளையாட்டுக் காட்டுபவர்களும் உண்டு. எனவே எவர் ஆட்சிக்கு வந்தாலும் பழைய குருடி கதவைத் திறவடி என்ற கதை மாத்திரமல்ல; அதிலும் மோசமாகவே இருக்கும்.

சிறீலங்காவில் சிங்கள, பௌத்த இனவாதத்திற்கெதிரான போக்குகள் வளர்க்கப்படவேண்டிய, ஊக்கப்படுத்தப்படவேண்டிய அவசியம் உள்ளது. இத்தேவை, சிறீலங்காவில், இன, மதச் சமன்பாட்டை நிறைவேற்றலாம் என்ற கனவு காண்பதற்காக ஏற்பட்டதல்ல. பலச்சமநிலையின் அடிப்படையிலும், சமத்துவம், சுதந்திரம் ஆகியவற்றின் அடிப்படையிலும் சிங்கள, தமிழ் தேசங்கள் மட்டுமல்ல, ஏனைய சிறுபான்மைச் சமூகங்களும் கூட்டுறவுடன் வாழவும், வளமான எதிர்காலத்தை அமைத்துக்கொள்ளவும் இத்தேவை உள்ளது. இதுவே ஒரே வழியாகவும் உள்ளது. தமிழீழத்தில் வளர்க்கப்பட்டுவரும் ஜனநாயக விழுமியங்கள் சந்திக்கும் புள்ளியை சிறீலங்காவில் ஏற்படுத்த இத்தேவை நிறைவேற்றப்படவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கால நதிக்கரையில் மீள நினைக்கிறேன்



"கலை இலக்கியங்கள் இன்றைய போராட்ட வாழ்வை சித்தரிப்பதாக அமையவேண்டும். இன்றைய காலத்தை உருவகிப்பதாக அமைய வேண்டும். இன்றைய வரலாற்றுப் போக்கை பதிவுசெய்வதாக இருக்கவேண்டும். கலையும் இலக்கியமும் வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டவை. வாழ்க்கையை தரிசித்து நிற்பவை. வாழ்வனுபவத்தை குறியீடு செய்பவை. இன்று எமது வாழ்வும், வாழ்பனுபவமும் விடுதலை வேண்டிய ஒரு போராட்டத்துடன் பிணைந்து நிற்கிறது. இந்தப் போராட்டச் சூழ்நிலையே எமது வாழ்வை நிர்ணயிப்பதாகவும் அமைந்துவிட்டது. எனவே எமது கலை இலக்கியங்கள் இந்தப் போராட்ட வாழ்வின் தன்மைகளை, அந்த வாழ்வில் பிறக்கும் ஆழமான அநுபவத் தழும்புகளை, உணர்வலைகளை சித்தரித்துக் காட்டவேண்டும்."

**1994 சித்திரை – வைகாசி மாத வெளியீடான *"வெளிச்சம்"* வெள்ளி இதழில் *"கால நதிக்கரையில் மீள நினைக்கிறேன்"* என்ற தலைப்பில் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களால் வழங்கப்பட்ட சிறப்புப் பேட்டி.**

*கேள்வி:*

இளம் பராயத்திலிருந்தே தாங்கள் பல்வேறு நூல்களை வாசித்து வருகின்றீர்கள். உங்களுக்குள் தமிழ் தேசிய உணர்வையும், ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டக் குணாம்சத்தையும் தோற்றுவிப்பதற்குக் காரணமாக இருந்த நூல்களைப் பற்றி விபரித்துக் கூறமுடியுமா ?

*பதில்:*

சின்னவயதிலிருந்தே நான் ஒரு புத்தகப் பிரியன். எனது இளம் பராயத்தில் அதிக பொழுதுகள் நல்ல நூல்களுடனேயே கழிந்தன. அதிலும் சரித்திர நாவல்களையும், வரலாற்று நூல்களையும், வீரபுருஷர்களின் வாழ்க்கைச் சரிதங்களையுமே நான் விரும்பிப் படித்தேன். கைச்செலவுக்காக என் வீட்டார் எனக்கு வழங்கிய பணத்தை எல்லாம் புத்தகங்கள் வாங்குவதிலேயே செலவிட்டேன். புதிய புதிய நூல்களை வாங்கிப் படிப்பதில் எனக்கு திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது. எனது ஊரில் ஒரு புத்தகக்கடை இருந்தது. அங்கிருந்த அரிய நூல்களையெல்லாம் எப்படியும் வாங்கி வாசித்து விடுவது எனது வழக்கமாக இருந்தது. அலெக்சாண்டர், நெப்போலியன் போன்றவர்களின் வீர வரலாற்றை இப்படியான நூல்களின் மூலமே நான் அறிந்துகொண்டேன். இந்திய விடுதலைப் போராட்டத்தையும், அதற்குத் தங்களையே தற்கொடையாக்கிய சுபாஸ் சந்திரபோஸ், பகத்சிங், பாலகெங்காதர திலகர் போன்றோரில் எனக்கு ஏற்பட்ட பற்றும், கரிசனையும் இந்த வாசிப்பின் விளைவுகள் தான். என் போராட்ட வாழ்வின் அத்திவாரம் இப்படியான புத்தகங்களின் வாசிப்பினால்தான் கட்டியெழுப்பப்பட்டது. இந்திய விடுதலைப் போரின் பால் எனக்குள் ஏற்பட்ட ஆர்வமும், அன்னிய ஆட்சியின்

www.tamilarangam.net

**அறிவியல் ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் எனது இனமும் எனது மக்களும் வளரவேண்டும் என்று நான் அதிகம் வரும்பினேன். எமது மண் விடுதலை பெற்று விஞ்ஞான ரீதியில் சாதனை படைக்கவேண்டும் என என்னுள் ஒரு கனவை வளர்த்துக் கொண்டேன்.**



ஆதிக்க அடக்குமுறைக்கு எதிரான கொதிப்புணர்வும் இந்த வாசிப்புப் பழக்கத்தினாலேயே ஏற்பட்டது.

1958 ம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரமும், ஈழத் தமிழினமும் இந்தக் கலவரத்தினால் சந்தித்த இன்னல்களும் எனக்குள் ஏற்படுத்திய தாக்கங்களே என்னைப் போராடத் தூண்டின. அன்றாடம் நான் வாசித்தறிந்த செய்திகளே என்னில் ஒரு ஆவேசப் புயலை ஏற்படுத்தியது. தமிழகத்து எழுத்தாளர்களான கௌசியனின் "பாமினிப்பாவை" சாண்டில்யனின் "கடல்புறா" கல்கியின் "பொன்னியின் செல்வன்" போன்ற நாவல்களை நான் வாசித்தபோது, எமது மூதாதையோர் எப்படிப் பெரும் சாம்ராஜ்யங்களை அமைத்து ஆட்சி புரிந்தார்கள் என்பதை அறிந்து கொண்டேன். திரும்பவும் எமது இனம் தலைநிமிர்ந்து, தன்னாட்சி பெற்று உலகத்தையே வியப்பிலாழ்த்தும் விதமாக வாழவேண்டும் என்ற ஆர்வத்தை இந்த நூல்கள் என்னுள் ஏற்படுத்தின.

அடிமைத்தனத்திற்கு எதிராக ஏன் நாங்கள் ஆயுதம் ஏந்திப் போராடக்கூடாது என்ற எண்ணத்தை இந்த நூல்கள் என் மனதில் எழுப்பின. மகாபாரதம், இராமாயணம் போன்ற காவியங்களை இளம் வயதில் நான் விரும்பி வாசித்தேன். அவையும் என்னுள் சில சிந்தனைத் தெறிப்புக்களை ஏற்படுத்தின. "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்ற ஆழமான கருத்தை பகவத் கீதையை நான் வாசித்த போதே புரிந்துகொண்டேன். நல்வழி காட்டும் அறநெறிக் கதைகளை நான் வாசித்தபோது நல்லவனாகவும் கட்டுப்பாடுடையவனாகவும், சமூகத்திற்கு நற்பணி செய்பவனாகவும் நான் வாழவேண்டும் என்ற எண்ணத்தை எனக்கு அறிவுறுத்தின. எல்லாவற்றிற்கும் மேலாக சுபாஸ் சந்திரபோஸின் வாழ்க்கையே எனக்கு ஆதர்ச ஒளியாக வழிகாட்டியது. அவரது ஒழுக்கவாழ்வும் நாட்டின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த விதமும் எனக்கு வழிகாட்டியாக அமைந்தது. வாசிக்கும் போது எனக்கு ஒரு வழக்கம் இருந்தது. வெறும் மேற்போக்கான வாசிப்பாக இல்லாமல் வாசிக்கும் நூலுக்குள் ஆழ்ந்துபோகும் ஒரு தன்மையை நான் கொண்டிருந்தேன். நூல்களுடன் ஒன்றிப் போவேன். வாசித்து முடிந்ததும் ஏன்? எதற்கு? இப்படி ஏன் ஆனது என்ற வினாக்கள் என்னில் எழும். அந்நூலின் கதையுடனும், பாத்திரங்களுடனும் எமது வாழ்க்கையையும் எம்மினத்தின் வாழ்க்கையையும் சோத்துப் பார்ப்பேன்.

அப்போதெல்லாம் என்னினத்தின் விடிவிற்காகப் போராடவேண்டும் என்ற எண்ணமே என்னுள் மேலோங்கி நிற்கும். சரித்திர, வரலாற்று நூல்களுடன் கலைக்கதிர் போன்ற விஞ்ஞான அறிவு நூல்களையும் விரும்பி வாசிப்பேன். அறிவியல் ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் எனது இனமும் எனது மக்களும் வளரவேண்டும் என்று நான் அதிகம் வரும்பினேன். எமது மண் விடுதலை பெற்று விஞ்ஞான ரீதியில் சாதனை படைக்கவேண்டும் என என்னுள் ஒரு கனவை வளர்த்துக் கொண்டேன். இந்நூல்கள் மூலம் பரந்த உலகப் பார்வை ஒன்று எனக்குள் விரிந்துகொண்டது. கற்பனையில் மட்டும் காலம் கழிக்காது செயல்ரீதியாக எதையாவது செய்யவேண்டும் என்ற எண்ணத்தை என் மனதில் ஏற்படுத்தியது. எமது தமிழினத்திற்கு செயற்பாட்டுத் தன்மையே இனித் தேவையானது என்று நான் வாசித்த விடுதலைப் போராட்ட நூல்கள் "ஒரு போராளி புனிதமானவனாகவும், தன்னலமற்றவனாகவும், மக்களுக்காகத் தன்னை அர்ப்பணிப்பவனாகவும் இருக்க வேண்டும்" என்ற செய்தியை என்னுள் தெரிவித்துக்கொண்டன. இப்படி நான் வாசித்த பல்வேறு நூல்கள்தான் என் இனத்திற்காக என்னைப் போராடத் தூண்டின.

கேள்வி:

**உங்கள் சிறுபராய வாழ்க்கை இன்றைய இளம் சந்ததியின் வாழ்வு நிலைக்கு முற்றிலும் மாறுபட்டதாகவே இருந்திருக்கும்; அந்த இளம் பராய வாழ்க்கை பற்றி வெளிச்சத்துக்கு விபரிப்பீர்களா ?**

பதில்:

சின்னவயதில் என் வீட்டுக்கு நான் செல்லப்பிள்ளை. அதனால் எனக்கு வீட்டில் அதிக கட்டுப்பாடு இருந்தது. பெற்றோர்கள் என்னை வீட்டுக்கு வெளியே விடுவது அபூர்வம். அயல்வீட்டுப் பிள்ளைகள் மட்டுமே என் விளையாட்டுத் தோழர்கள். என் வீடு, அயல்வீடு என்று இவற்றைச் சுற்றியே என் உலகம் இருந்தது. தனித்த அமைதியான வீடென்ற சுற்றுவட்டத்துக்குள்ளேயே என் சின்ன வயதின் வாழ்வு கழிந்தது.

எட்டாம் வகுப்பில் நான் படித்துக்கொண்டிருந்த போது எனது ஊரான வல்வெட்டித்துறையில் "வல்வைக் கல்வி நிலையம்" என்ற கல்வி நிலையம் இயங்கிக்கொண்டிருந்தது. உயர்கல்வி கற்ற இளைஞர்கள் சிலர் தங்கள் ஊரை முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் என் வீட்டுக்கு அயலிலிருந்த "சிவகுரு வித்தியாசாலை" (ஆலடிப் பாடசாலை)யில் இந்தக் கல்வி நிலையத்தை நடத்திக்கொண்டிருந்தனர்.

இரவில் கீழ்வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு 'ரியூசன்' சொல்லிக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுப்பதுவும் இக்கல்வி நிலையத்தின் பணியாக இருந்தது. எனது ஊரைச்சேர்ந்த தமிழ் ஆசிரியரான வேணுகோபால் அவர்கள் "தமிழர்கள் ஆயுதமேந்திப் போராடவேண்டும்" என்ற கருத்தை எமக்குப் போதிப்பார். இவர் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் தீவிர ஆதரவாளராக இருந்து பின்னர் அக்கட்சியின் "போராட்டத் தீவிரம் போதாது" என்று திரு. வி. நவரத்தினத்துடன் இணைந்து சுயாட்சிக் கழகத்தை உருவாக்கியவர்களில் ஒருவர். இவரே, எனக்கு ஆயுதப் போராட்டத்தின் தேவையையும், அதன் மீது நம்பிக்கையையும் ஏற்படுத்தியவர் ஆவார். எனது ஊர் இராணுவ அடக்குமுறையை தினசரி சந்திக்கும். இதனால் இராணுவத்தின் மீது சின்ன வயதிலேயே எனக்கு வெறுப்பு அதிகமானது. இத்துடன் சேர்ந்து ஆசிரியர் வேணுகோபால் அவர்கள் ஊட்டிய ஆயுதப் போராட்ட உணர்வும் விடுதலை தாகமும் என்னுள் ஒரு வேகத்தை ஏற்படுத்தின. நானும் என் வயதொத்த நண்பர்களும் இவருக்குப் பின்னால் திரிந்தோம்.

இப்படியெழுந்த விடுதலைத் தாகத்தால் எனது பதினான்காவது வயதில் எமது பாடசாலையில் விடுதலைக்காகப் போராடவேண்டும், இராணுவத்தினரைத் தாக்கவேண்டும் என்று நானும், என் உணர்வொத்த ஏழு இளைஞர்களும் சேர்ந்து பெயரில்லாத ஒரு இயக்கத்தை ஆரம்பித்தோம். நானே அவ்வியக்கத்தின் தலைவராக இருந்தேன். எங்களுக்கு அப்போதெல்லாம் ஆயுதமொன்று வாங்கவேண்டும், வெடிகுண்டொன்று செய்யவேண்டுமென்ற உணர்வே மேலோங்கியிருந்தது. வீட்டிலே கிடைக்கும் பணத்தில் வாரத்துக்கு இருபத்தைந்து சதத்தை இவர்கள் என்னிடம் தருவார்கள். நான் சேகரித்துக் கொள்ளுவேன். இப்படியாக நூற்றைது ரூபா எங்களிடம் சேர்ந்துவிட்டது. இந்த நேரத்தில் எமது பக்கத்து ஊரில் இருந்த "சண்டியன்" ஒருவரிடம் நூற்றியம்பது ரூபாவுக்கு "ரிவோல்வர்" ஒன்று விற்பனைக்கு இருப்பதாக அறிந்தோம். எப்படியும் அந்த ரிவோல்வரை வாங்கிவிடவேண்டும் என்ற துடிப்பில் என் சகோதரியின் திருமணத்தின் போது எனக்கு அன்பளிப்பாக கிடைத்த மோதிரத்தை விற்று எழுபது ரூபா பெற்றுக் கொண்டோம். எல்லாமாகச் சேர்த்து எம்மிடம் நூற்றிப்பத்து ரூபா இருந்த போது மிகுதிப்பணம் இல்லாத காரணத்தினால் இந்த "ரிவோல்வர்" வாங்கும் திட்டத்தை கைவிட நேர்ந்தது. இப்படியாக என் இளம் பராயம் போராட்டம், விடுதலை, இனத்துக்காக எதையாவது செய்ய வேண்டும் என்ற எண்ணங்களுடனேயே கழிந்தது, கழிந்தது என்று சொல்வதிலும் பார்க்க வளர்ந்தது என்று சொல்வதே பொருத்தமானது என்று நினைக்கிறேன்.

நான் படிக்கும் காலத்தில் என்னொத்த மற்றவர்கள் எல்லாம் விளையாடிக்கொண்டிருப்பார்கள். நான் மட்டும் அகப்பட்ட மூலப் பொருட்களைக்கொண்டு வெடிகுண்டு செய்வதிலும் அதை வெடிக்கச் செய்வதிலுமே ஈடுபட்டுக்கொண்டிருந்தேன். நிச்சயமாக பதின்நான்கு வயதில் போராடவேண்டும் என்று நான் துடித்த துடிப்பு இருக்கிறதே, அது அன்றைய வயதொத்த சிறுவர்களின் வாழ்க்கையிலிருந்து மாறுபட்டதாகவேயிருந்தது.

கேள்வி:

**எமது தேசத்தில் இன்று நிலவும் விடுதலைப் போராட்டச் சூழலில் கலை இலக்கியத்தின் பங்கு எவ்வாறு அமையவேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்.**

பதில்:

கலை, இலக்கியங்கள் இன்றைய போராட்ட வாழ்வை சித்தரிப்பதாக அமையவேண்டும். இன்றைய காலத்தை உருவகிப்பதாக அமைய வேண்டும். இன்றைய வரலாற்றுப் போக்கை பதிவுசெய்வதாக இருக்கவேண்டும்.

கலையும், இலக்கியமும் வாழ்க்கையை கருப்பொருளாகக் கொண்டவை. வாழ்க்கையைத் தரிசித்து நிற்பவை. வாழ்வனுபவத்தைக் குறியீடு செய்பவை. இன்று எமது வாழ்வும், வாழ்வனுபவமும், விடுதலை வேண்டிய ஒரு போராட்டத்துடன் பிணைந்து நிற்கிறது. இந்தப் போராட்டச் சூழ்நிலையே எமது வாழ்வை நிர்ணயிப்பதாகவும் அமைந்து விட்டது. எனவே, எமது கலை, இலக்கியங்கள் இந்தப் போராட்ட வாழ்வின் தன்மைகளை, அந்த வாழ்வில் பிறக்கும் ஆழமான அனுபவத் தழும்புகளை, உணர்வுகளை சித்தரித்துக் காட்டவேண்டும். அதேவேளை விடுதலை என்ற உன்னதம் பற்றி விழிப்புணர்ச்சியைத் தோற்றுவிப்பதாக அமையும் போது அவை சிறப்புப் பெறுகின்றன. மானிட விழுமியங்களை வலியுறுத்தி, மனித மேம்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்ட படைப்புக்களே சிகரத்தை எட்டுகின்றன. தமிழீழப் போராட்டச் சூழலில் இன்று மையம் கொண்டிருக்கும் இலக்கிய எழுச்சி எதிர்காலத்தில் அதியுன்னதமான ஆக்க இலக்கியங்களைப் படைத்து உச்சங்களைத் தொடும் என்று திடமாக நம்புகின்றேன்.

கேள்வி:

**எமது இயக்கத்தைச் சேர்ந்த இளம் போராளிகள் இன்று படைப்பாளிகளாக மாறிவருவதை**



போராட்டம் பற்றியும் போர்க்கள வாழ்வு பற்றியும் ஆழமான அனுபவத்தையும், துல்லியமான பார்வையையும் கொண்டு வளர்வதால் எமது போராளிகள் சிறந்த படைப்பாளிகளாக மாறி ஒரு காலம் உன்னதமான கலை இலக்கியங்களைப் படைப்பார்கள் என்பது எனது நம்பிக்கை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இவர்கள் எம்மண்ணில் மலர்ந்துள்ள புஷ்பங்கள். இந்தச் சிறுவர்களை சிறப்பாக வளர்த்தெடுத்து அவர்களுக்குச் செம்மையான கல்வியை ஊட்டி எமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக உருவாக்குவது தலையாய கடமையாகக் கருதுகிறேன்.**



**அவதானிக்கூடியதாக இருக்கிறது. இவர்கள் இன்றைய போராட்டம் பற்றியும், போர்க்கள வாழ்வு பற்றியும் எழுதிவருகின்றனர். போர்க்கால இலக்கியத்திற்கு வளம் சேர்த்து வரும் இந்தப் புதிய கலை, இலக்கியம் பற்றி தாங்கள் என்ன கருதுகிறீர்கள் ?**

பதில்:

தமிழீழத்தில் போர்க்கால இலக்கியம் வளர்ந்து வருகின்றது. எமது இளம் போராளிகள் பலர், படைப்பு இலக்கியத்தில் ஆர்வம்காட்டி வருகிறார்கள். சிலரிடம் தரம்வாய்ந்த எழுத்துக்களையும், கலைப் படைப்புக்களையும் காணமுடிகின்றது. இது நல்லதொரு அறிகுறி. காலப்போக்கில் அனுபவ முதிர்ச்சியில் எமது போராளிகளிடமிருந்து சிறந்த கலை, இலக்கியப் படைப்புக்களை எதிர் பார்க்கலாம். எமது போராளிகளே வரலாற்றின் கதாநாயகர்களாக இருந்து காலத்தை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களே அந்தக் காலத்தைப் பதிவு செய்யும் போது அது உண்மையானதாகவும், உன்னதமானதாகவும் அமைந்து விடுகிறது.

தமிழரின் சரித்திரத்திலேயே இன்றைய காலம் ஒரு முக்கியமான யுகம். இன்றைய காலத்தில் கட்டவிழும் விடுதலை வரலாற்றை, கலை, இலக்கியமாக உருவகப்படுத்தி அடுத்த தலைமுறையினரும் அறியச் செய்வது இன்றைய சிருஷ்டிகர்த் தாக்களின் முக்கிய கடமையாக நான் கருதுகிறேன்.

போராட்டம் பற்றியும் போர்க்கள வாழ்வு பற்றியும் ஆழமான அனுபவத்தையும், துல்லியமான பார்வையையும் கொண்டு வளர்வதால் எமது போராளிகள் சிறந்த படைப்பாளிகளாக மாறி ஒரு காலம் உன்னதமான கலை இலக்கியங்களைப் படைப்பார்கள் என்பது எனது நம்பிக்கை. அதனால் தான் எமது இயக்கத்தில் முளைத்துவரும் இளம் எழுத்தாளர்களையும் கலையார்வம் கொண்டவர்களையும் நான் ஊக்குவித்து வருகிறேன்.

கேள்வி:

**இப் போராட்டச் சூழலில் பாதிப்புக்குள்ளான சிறுவர் நலனில் நீங்கள் அதிக ஆர்வமும் அக்கறையும் காட்டி பல செயற்திட்டங்களையும் உருவாக்கி வருகின்றீர்கள். இந்தக் குழந்தைகளை அரவணைத்து அவர்களின் எதிர்கால வாழ்வு சுபீட்சம் அடையவேண்டும் என்று நீங்கள் விரும்புவதன் காரணம் என்ன ?**

பதில்:

ஒரு நாட்டைக் கட்டியமைக்க நான் துடிக்கிறேன். அதனையே எனது வாழ்க்கையின் இலட்சியமாக வரித்துக்கொண்டுள்ளேன். நாம் கட்டியெழுப்ப முனையும் இந்த நாட்டுக்கு எதிர்கால சந்ததியே ஆதாரமானது. எனவே நாட்டை அமைப்பதோடு எதிர்கால சந்ததியையும் உயரிய பண்புகளுடனும் வளர்த்து எடுக்கவேண்டியது முக்கியமானதாக நான் கருதுகின்றேன். இதனால்தான் எதிர்காலச் சந்ததியை வளர்ப்பதில் அதிகளவு அக்கறை காட்டுகிறேன். எமது நாட்டின் எதிர்கால சிற்பிகளாக ஒரு புதிய இளம்பரம்பரையை உருவாக்கவேண்டும் என்பதே எனது அவா. அறிவியல் ஆற்றல் மிகுந்தவர்களாக, தேசத்தில் பற்றுக்கொண்டவர்களாக, நேர்மையும், கண்ணியமும், வீரமும், மானமும் உள்ளவர்களாக, போர்க்குணம் மிக்கவர்களாக இந்தப் புதிய பரம்பரை உருவாகவேண்டும். இந்தப் போர்ச் சூழலினால் பாதிக்கப்பட்ட சிறுவர் சிறுமிகளை நாம் அரவணைத்து வளர்த்து வருகின்றோம். இவர்களை நான் அநாதைகளாகவோ, யாருமற்றவர்களாகவோ கருதவில்லை. இவர்கள் தமிழன்னையின் குழந்தைகள். இவர்கள் எம்மண்ணில் மலர்ந்துள்ள புஷ்பங்கள். நாம் எமது மொழியையும் மண்ணையும் தாய்மொழியென்றும், தாய்மண்ணென்றும் காண்பது போன்று இவர்களையும் எமது தேசியத்தாயின் பிள்ளைகளாகவே கருதுகின்றேன். இந்தச் சிறுவர்களை சிறப்பாக வளர்த்தெடுத்து அவர்களுக்குச் செம்மையான கல்வியை ஊட்டி எமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக உருவாக்குவது எமது தலையாய கடமையாகக் கருதுகிறேன். அதனால் தான் இவர்கள் மீது எனது விசேட கவனத்தைச் செலுத்துகின்றேன்.

**தாயகவிடுதலைக்குத் தம்மை அர்ப்பணிக்கும் தெரிவிற்கும், கல்வி கற்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும், கல்வியும் இணைந்த ஒரு வாழ்வு, இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது. எமது போராட்டம் கல்விக்குக் கவசமாக இருப்பது போல கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்கவேண்டும். எமது விடுதலைப் போராட்டத்தின் உன்னதத்தை உணர்ந்துகொள்ளும் வகையில் மாணவ சமூகத்திற்கு ஒரு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசியக் கடமைப்பாடாகும்.**

**எமது இயக்கம் விடுதலைப்போரை முன்னெடுத்து வரும் அதேவேளை கல்வித்துறையின் மேம்பாட்டிற்காக ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கான அமைப்புக்களையும் கட்டியெழுப்பி வருகின்றது.**

*தமிழீழ தேசியத் தலைவர்*
**வே. பிரபாகரன் அவர்கள்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாட்டின் நற்குடிகளை உருவாக்கும் பாலர் கல்வி

ஒரு சமுதாயத்தின் ஆணி வேர் குழந்தைச் செல்வங்களாகும். அவர்களை உரிய பருவத்தில் பண்பட்ட உள்ளத்தினராயும் தேக ஆரோக்கியம் உள்ளவராயும் வளர்ப்பது எம் எல்லோரினதும் கடமையாகும். இதை நோக்காகக் கொண்டே 'பாலர் கல்வி' எனும் திட்டம் உலகமெங்கும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

பொருளாதார வளர்ச்சி குன்றியும் முன்னேற்றம் அடையாத கிராமமாகவும் இருக்கும் இடங்களை அவதானிக்கும் போது, அங்கு பாலர் கல்வி முன்னெடுத்துச் செல்லப்படவில்லை என்பது தெரிகிறது. இதை உணர்ந்துதான் ஏறத்தாழ விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் பாலர் பாடசாலைகள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. 1991-ம் ஆண்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் யாழ்ப்பாண மாவட்டத்தில் நூறு பெண்களுக்கு சமூக மேம்பாட்டுப் பயிற்சியும், பாலர் கல்விப் பயிற்சியும் அளிக்கப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதேகாலப் பகுதியில் தமிழீழத்தின் ஏனைய மாவட்டங்களிலும் இப்பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பின்தங்கிய கிராமங்களிலே, வறுமையிலே வாடும் பெற்றோரிடமிருந்து, எந்த உதவியையுமே எதிர் பார்க்காமல், குழந்தைகளின் என்ற கருத்து எம்மால் வலியுறுத்தப்பட்டு, செயற்படுத்தப்பட்டு வருகிறது. நாம் தவிர்ந்த ஏனைய எல்லா அமைப்புக்களும் ஒருங்கிணைந்து ஒரு பாலர் கல்வித் திட்டத்தின் கீழ் பாலர் பாடசாலைகளை இயக்க முன்வரவேண்டியது ஒரு கட்டாயத் தேவையாகின்றது.

1993-ம் ஆண்டிலிருந்து மிகக் கூடுதலான பாலர் பாடசாலைகள் தமிழீழமெங்கும் உருவாகியுள்ளன. பாலர் கல்வியின் பிரதான நோக்கங்களாகப் பாலர்கள் பாடசாலை செல்லும் பழக்கத்தினைப் பெறப் பயிற்சி பெறுதல், பார்த்தல், கேட்டல், தொட்டு உணர்தல் ஆகிய புலனுணர்வுகளை வளர்த்தெடுத்தல்,

## விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கிய இலக்குகளில் ஒன்று

கடந்த பத்து வருடங்களாக பல அமைப்புக்கள் பின்தங்கிய கிராமங்கள் தோறும் பாலர் கல்வியை அறிமுகம் செய்து ஓரளவு நடைமுறைப்படுத்தி வருகின்றன. நம் சந்ததி சிறீலங்கா அரசின் இறுக்கமான பிடிக்குள் சிக்கி அழிந்துவிடக் கூடாது என்ற அக்கறைகொண்ட கல்விமான்களும், சமூக சேவையை நோக்காகக் கொண்ட பொது நிறுவனங்களும், அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களும், மதச் சார்புடைய அமைப்புக்களும் பாலர்முன் கல்வியை நடைமுறைப் படுத்தி வருகின்றன.

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு தனது சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 'பாலர் கல்வி' என்னும் பாரிய திட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றது. தமிழீழத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் நலனில் மட்டுமே கவனம்கொண்டு பல சிரமங்களின் மத்தியிலே எமது இப்பணி ஆரம்பமாகியது. பலதரப்பட்ட பொது நிறுவனங்கள் பாலர் ஆசிரியர்களுக்கு மூன்று மணித்தியால சேவைத் திட்டத்துக்கு ரூபா முந்நூறுக்குக் குறைந்த தொகையை ஊக்குவிப்புத் தொகையாக வழங்கி வந்தன. அதே காலகட்டத்தில் எம்மால் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியைகளுக்கு நாம் ரூபா ஐந்நூறை வழங்கிவந்தோம்.

பாலர் கல்வியானது பலரது கவனத்தையும் கவரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. பல வேறுபட்ட அமைப்புக்கள் வெவ்வேறு விதமான முறையில் செயற்பட்டாலும் 'திணிப்பு இல்லாத, பாலர்களின் மனதைக் கவரும் சுதந்திரமான சூழலில் பாலர் கல்வி வளர்த்தெடுக்கப்பட வேண்டும்' சுகாதார நற்பழக்கவழக்கங்களையும் அறிவுரைகளையும் புரிந்துகொள்ள வைத்தல், நாளாந்த தேவைகளுக்கான கணிதத்திறன்கள் எண்ணக் கருக்களை வளர்த்தெடுக்கத் தூண்டிவிடுதல், சூழல் தொடர்பான அறிவு வளர்ச்சிபெறும் உளப்பாங்கினை ஏற்படுத்துதல், ஆக்கசிந்தனையைத் தம் மொழிமூலம் விருத்தி செய்யத் தட்டியெழுப்புதல், அழகினையும் அழகியல் சம்பந்தமான கலைகளையும் வெளிப்படுத்தக் குழந்தைகளின் ஆற்றலையும் திறமையையும் இனம் கண்டு ஊக்குவித்தல், சகோதரத்துவம், அன்புணர்வு, பெரியோர்களை மதித்தல், பேணுதல் போன்ற பொதுச் சமூகப் பண்பாடுகளை வளர்த்தெடுத்தல், வீடு, பாடசாலை, பொதுஇடங்களைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய கடமையுணர்வு, ஒத்துழைப்பு பற்றிய நற்சிந்தனைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பண்புகளை ஊட்டுதல், நாட்டுப் பற்று, மொழிப்பற்று தொடர்பான உளப்பாங்கு வளர ஏற்ற சூழலை உருவாக்கி வழிகாட்டல், இத்தோடு உடல்- உளவிருத்திக்கான உடற் பயிற்சி விளையாட்டுக்களில் ஆர்வத் தையும் உற்சாகத்தையும் விருத்தி செய்தல் என்பவை அமைந்துள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக, எதிர் காலத்தில் பாடசாலை சென்று கல்விகற்கும் ஆவலையும் அதன் பயன்பாடுகளையும் வளர்த்தெடுக் கும் மிகப்பெரிய பொறுப்பினைப் ழைப்பு இன்மையும் காரணமாக அமைகின்றன. அப்படி இருந்தும் சில வறிய கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு பாலர்கல்வி அளிக் கப்படுவதோடு சத்துணவும் வழங்கி சிறுவர் பராமரிப்பு நிலையங்களும் அமைத்துச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போது யாழ். மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய ஒன்பது கிராமங்களில் சிறுவர் போசாக்கு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. படுகின்றது. காலை ஏழுமணியள வில் இருந்து மாலை ஆறுமணிவரை இக்குழந்தைகள் போசாக்கு நிலையங்களில் பூரண அரவணைப் பைப் பெற்று மகிழ்ச்சியோடு வாழ்கிறார்கள்.

சமூக மேம்பாட்டுத் திட்டத்தில் மற்றும் ஓர் அம்சமாக சத்துணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது.



பள்ளிமுன் கல்வி முடுக்கிவிடுகின் றது. இக்கல்வித் திட்டத்தைக் கிராமங்கள் தோறும் வளர்த்தெடுப் பதில் பல சிக்கல்களை நாம் எதிர்நோக்கவேண்டியுள்ளது. பாட சாலைக்கு ஏற்ற சூழலைத் தெரிவு செய்தல், கட்டிடவசதி, தளபாடங் கள், குடிநீர், மலசலகூட வசதி, விளையாட்டு மைதானம், கல்வி உபகரணங்கள், சத்துணவுத் திட்டம் முதலிய நிறைவுகளை முழுமையாக உள்ளடக்கி, எல்லாப் பாலர் பாடசாலைகளையும் வழிநடத்தப் பொருளாதார வசதிக்குறைவும், சில இடங்களில் பெற்றோர்களின் ஒத்து இவற்றுள் மூன்று நிலையங்கள் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்றன. இங்குள்ள குழந்தைகள் முழுக்கமுழுக்கக் கூலி வேலை செய்யும் வறிய குடும்பத்துக் குழந்தைகளாகும். இவர்களது உணவு, உடை, சுகாதார வசதி, போசாக்கு என்பன பேணப்படுகின் றன. இங்கு வாழும் குழந்தைகள் தன்னம்பிக்கை உடையவர்களாக, பொதுஅறிவைப் பெற்றவர்களாக, சமூகநீதி உள்ளவர்களாக, ஒரு நல்ல மனிதராக உருவாக வசதிகள் அளிக்கப்பட்டுக் கல்வியும் ஊட்டப்

எம் தாயகத்தில் கிடைக்கும் மூலப்பொருட்களான அரிசி, உழுந்து, கௌபி, எள் ஆகிய சத்தூட்டம் நிரம்பிய தானியங் களைக்கொண்டு மிகவும் சுத்தமாக வும் சுகாதார முறையிலும் சுவை யாகவும் குழந்தைகள் விரும்பிச் சாப்பிடவும் இலகுவில் சமிபாட டையக் கூடியமுறையிலும் தயாரிக் கப்பட்டு வருகிறது. சத்துணவு வழங்கும் நடைமுறையைப் பின் பற்றுவோர்கள், எம்மிடமிருந்து சத்துணவை விலைக்குப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் வேலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள் நடைபெற்றுவருகின்றன.

பள்ளிமுன் கல்விநிலையங்களும் பொது நிறுவனங்களும் தமக்குச் சத்துணவு தேவையானால் முன் கூட்டியே அறிவித்து தமக்குத் தேவையான அளவில் சத்துணவைப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தில் மட்டும் தற்பொழுது நான்காயிரத்துக்கும் (4000) மேற்பட்ட பள்ளிமுன் கல்வி மாணவர்களுக்கு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் சமூக மேம்பாட்டுத் திட்டத்தினர் பள்ளிமுன் கல்வியை அளித்து வருகின்றனர். நூற்றுத் தொண்ணூற்றெட்டு (198) ஆசிரியைகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு, நூற்று இருபத்தெட்டு (128) பாடசாலைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் பாலர் ஆசிரியர்கள் ஆற்றும் சமுதாயப் பணியானது தமிழீழத்தின் எதிர்காலத்தை பலமாக கட்டி எழுப்பக்கூடியதாகும். தற்போதைய போர்ச்சூழல் குழந்தைகளில் உளவியல் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதை அறியக் கூடியதாகவுள்ளது. இத்தனைக்கும் முகம்கொடுத்து முழுக்கமுழுக்க சேவை மனப்பான்மையோடு சேவைபுரியும் ஆசிரியர்களின் வேதனத்தில் கவனம்கொண்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பானது பாலர் ஆசிரியர்களுக்குத் தற்பொழுது மாதாந்த ஊதியமாக ரூபா ஆயிரத்தை வழங்கிவருகிறது.

பிஞ்சு வயதில் குழந்தைகளின் ஏக்கங்களுக்கு வடிகாலாக அமைந்து அவர்களுக்கு அன்பு, பரிவு, பாதுகாப்பு, கண்காணிப்பு வழங்கி, குழந்தைகளோடு குழந்தைகளாகச் சேவைபுரியும் ஆசிரியர்களை மிகவும் தரமான கல்வி ஆற்றல் உள்ளவர்களாக ஆக்க உரிய திட்டங்கள் வழிவகுக்கப்பட்டு, பயிற்சிநெறிகளும் தொடர்ச்சியாக வழங்கப்பட்டுவருகின்றன.

பாடத்திட்டங்கள் தவணை முறையில் தயாரிக்கப்பட்டும் வாராந்த நாளாந்தப் பதிவேடுகள், பாடஆயத்தம், பாடக்குறிப்பு போன்ற விடயங்கள் போதிக்கப்படும். பாடசாலை ஆரம்பநேரம், முடிவுநேரம் வரையறுக்கப்பட்டு நேர அட்டவணைகள் பாடசாலையில் இடம்பெறவும் பயிற்சி அளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சிக் கோட்டங்களில் வட்டவை ரீதியாகப் பாடசாலை மேற்பார்வையாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளார்கள்.

இதனால் பாலர் பாடசாலைகளின் நிறை குறைகள் அறியப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கிராமங்களின் ஒத்துழைப்போடும் பெற்றோர்களின் ஆதரவோடும் பருவகாலங்களை யொட்டிய நிகழ்வுகள், விளையாட்டுப்போட்டிகள் என்பன மிகவும் சிறப்பாக நடாத்தப்படுகின்றன.

எம்மிடம் பயின்ற பள்ளி முன்கல்விப் பாலர்கள் பெரிய பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டதும், அங்குள்ள ஆசிரியர்களினால் பாலர்களின் ஆற்றல்கள் இனங் காணப்பட்டுப் பாராட்டைப் பெறுவதும் எமது திட்டத்துக்கு கிடைத்த வெற்றியாகும்.

**சிறீலங்காப் பேரினவாத அரசு தமிழ் மக்களின் கல்வியையும் திட்டமிட்டு நசுக்கி வருகிறது. இத்தகைய கொடிய எதிரியின் சவால்களை எதிர்கொண்டு தமிழீழ மாணவர்களும் எழவேண்டியுள்ளது. தமிழீழ மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதிலும் அவர்களின் நலன்களைப் பேணுவதிலும் கருத்துடன் இயங்கி வரும் 'தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை' 'தமிழீழக் கல்வி மேம்பாட்டு நிதியம்' ஒன்றினை ஆரம்பித்துள்ளது. அந்நிதியத்திற்கு உணர்வுமிக்க தமிழர்களிடமிருந்து ஆதரவை பின்வருமாறு கேட்டிருக்கிறது:**

**கல்விப் பயிரைக் கருகாது காப்பாற்ற செல்வத்தை அள்ளி இறை.**
**வளருகின்ற மாணாக்கர் வாய்ப்பான கல்வி தளராமல் நன்நிதியம் தா.**
**ஆசிரிய வாண்மையினை அன்றாடம் ஊக்குதற்கே தேசியத்தின் இந்நிதியம் சேர்.**
**எல்லாரும் ஓர் அணியாய் இந்நிதியம் ஏற்றமுற நல்லாகத் தாரும் நலம்.**

ஒரு குழந்தையின் மனதில் ஐந்து வயதுக்குள் பதியும் அற்புதப் பதிவுகள்தான் அக்குழந்தையை நற்குடியாகவும் ஒரு முழுமனிதனாகவும் ஆக்குகிறது. பிற்காலத்தில் சமூகவளர்ச்சியில் தன்னையும் ஒரு அங்கத்தவனாக இணைத்துச் சமூகம் போற்றும் நன் மகளாக, மகனாக வாழவும் வழிவகுக்கிறது.

எனவே இக்கல்வியினைப் பெறுவதற்கு ஏங்கித் தவிக்கும் சின்னஞ் சிறுவர்களை புழுதியிலும் தெருவிலும் நாம் அலைய விடலாமா? வசதியுள்ள குழந்தைகள் இக்கல்வியைப் பெற்று துள்ளுநடை போடும்போது, ஒட்டிய வயிற்றோடும், குழிவிழுந்த கண்களோடும் தெருவில் உணவுக்காக நம் செல்வங்கள் அலைவதை நாம் அனுமதிக்கலாமா?

இன்னும் இதனைச் சிந்தித்துப் பார்க்காதாவர்கள் பலர் உண்டு. அருகில் பாலர் பாடசாலை இருந்தும் தம் குழந்தைகளை அனுப்பாத பெற்றோரும் உண்டு.

அன்றாடக் கூலிவேலை செய்து உழைத்துப்பிழைக்கும் பெற்றோர்கள் பேணிப்பாதுகாக்க வேண்டிய வயதிலே வேறுவழியின்றித் தம் குழந்தைகளைத் தன்னந்தனியே பசிக்கவிட்டுச் செல்கிறார்கள்.

இங்கே அன்பு, அரவணைப்பு, உணவு, சுத்தம் இன்றிக் குழந்தைகள் சீர்குலைகின்றன. இந்த வாழ்க்கை முறை நிச்சயமாக மாற்றி அமைக்கப் படவேண்டும்.

அடிப்படைக் கல்வியான பள்ளிமுன் கல்வியை அந்தப் பெற்றோர் பெற்றிருக்காததே இதற்குக் காரணமாகும்.

எனவே ஒவ்வொரு கிராமங்களிலுள்ள நாட்டுப்பற்றாளர்களும், நலன்விரும்பிகளும், பள்ளிமுன் கல்வியை வளர்த்தெடுக்கத் தங்கள் ஒத்துழைப்பை வழங்கி, வளர்ந்து வரும் தமிழீழத்தின் எதிர்கால நற்குடிகளை உருவாக்க முன்வர வேண்டுமென்று அன்புடன் வேண்டுகிறோம்.

**நன்றி: சுதந்திரப்பறவைகள்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போராட்டத்தை ஆரம்பித்த வரலாற்று நாயகர்களுக்காக..

1972 களிலேயே தோற்றம்பெற்ற தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஓர் மாபெரும் திருப்பு முனையை, ஓர் புதிய சகாப்தத்தை படைத்தது 1983 யூலை 23ம் திகதி திருநெல்வேலியில் இடம்பெற்ற 13 இராணுவவீரர் தாக்குதலாகும். இவ் மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தாக்குதலில் பங்கேற்ற விடுதலைப்புலிகளில் பலர் இன்று எம்முடன் இல்லை. போராட்டத்தை ஆரம்பித்துவைத்த இத்தாக்குதலில் பங்கேற்ற வரலாற்று நாயகர்களான செல்லக்கிளி, பொன்னம்மான், விக்ரர், கணேஸ், ரஞ்சன், றெஜி, லிங்கம் ஆகியோரின் நினைவாக

- கிட்டு -

1983ம் ஆண்டு யூலை 23ம் திகதி இரவு 11மணியளவில் திருநெல்வேலிச் சந்தியைக் கடந்து யாழ்ப்பாணம் நோக்கி ஓர் வெள்ளை நிற டெலிக்கா வான் வந்துகொண்டிருக் கிறது. வானை செல்லக்கிளி செலுத்த அவனை அடுத்து கையில் S.M.G உடன் கம்பீரமாக உட்கார்ந் திருக்கிறான் விக்ரர். அவனை அடுத்து நான் வானின் பின்பகுதி யில் தம்பி, மற்றும் ஏனைய தோழர்கள்.

நாம் முன்பு திட்டமிட்டபடி வான் தபால்பெட்டிச் சந்தியில் நிற்க எல்லோரும் கீழே இறங்குகி றோம். அங்குதான் கண்ணிவெடி புதைக்க வேண்டும்.

வான் அந்த இடத்தில் நின்று நாங்கள் இறங்க அயல் சனங்கள் அரவம் கேட்டு வெளிவரத் தொடங்க விக்ரரும், செல்லக் கிளியும் (இராணுவச் சீருடை அணிந்து இருந்தனர்) சிங்களத்தில் உரக்கக் கதைத்தபடி றோட்டிலே நடக்கத் தொடங்க வெளியே எட்டிப் பார்த்த தலைகளை காணவில்லை. வெளிச்சம் போட்ட இருவீடுகளின் விளக்குகளும் அணைந்து விட்டது. யாரும் வெளிவரவில்லை. இராணுவத்தினர் வந்து நிற்கின்றனர் என்று நினைத்து விட்டனர்.

முன்பு திட்டமிட்டபடி அப்பையாஅண்ணை, விக்ரர், செல்லக்கிளி மூவரும் வெடிகளைப் புதைக்க ஆரம்பிக்கின்றனர். விக்ர ரும் செல்லக்கிளியும் பிக்கானால் றோட்டிலே கிடங்கு வெட்டுகின் றனர்.கண்ணிவெடி புதைப்பது பெரிய வேலை.

வெடிமருந்து தயார்படுத்துகை யில் வெடிமருந்தின் நச்சுத் தன்மை யால் தலையிடிக்கும். என்னுடைய அனுபவப்படி தாங்க முடியாத தலையிடி. அதன்பின் கிடங்கு வெட்டி, (இறுகப் போடப்பட்ட தார் றோட்டிலே கிடங்கு வெட்டு வது அவ்வளவு இலகுவானதல்ல) இவற்றையும் விட தாக்குதலின் போது சண்டையும் போட வேண்டும்.

எமது தகவலின்படி சுமார் நள்ளிரவு 12 மணியளவில் பலாலி யில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு ஜீப் வண்டியிலும், ஒரு ட்ரக் வாகனத்திலும் இராணுவத்தினர் வருவது வழக்கம். ஜீப்பில் 4 இராணுவத்தினரும் ட்ரக்கில் 10 பேர் அளவிலும் வருவார்கள் எனத் தகவல். எனவே யாழ். பல்கலைக் கழக பின்வீதி பலாலி றோட்டை சந்திக்கும் இடமாகிய தபால் பெட்டிச் சந்தியில், கண்ணிவெடி புதைத்து இரண்டாவதாக வரும் வாகனத்துக்கு கண்ணி வெடியால் தாக்க முன்னால் வரும் வாகனத் தைச் சுட்டு மடக்குவது என்று நாம் வகுத்த திட்டம். அதன்படி திருநெல்வேலிச் சந்தியில் ஒரு வாக்கிரோக்கி. அது அவர்களுடைய வரவை எமக்கு அறிவிக்கும்.

விக்ரரும் செல்லக்கிளியும் அப்பையாஅண்ணையும் கண்ணி வெடி தயார்படுத்திக் கொண்டிருக் கையில் மற்ற எல்லோரும் அருகில் உள்ள வீடுகளின் சுவர்களின் உள்ளே பாய்ந்து தத்தமக்கு உரிய இடத்தை தேர்ந்தெடுக்கத் தொடங்கி னோம். ஒவ்வொருவருக்கும் இடம் கிடைத்தது. கண்ணிவெடியை புதைத்துக் கொண்டிருக்கையில் விக்ரர் விலகி தனக்கு ஒதுக்கப் பட்டிருந்த இடத்தின் சுவரின் உள்ளே பாய்கின்றான். சுவர் அவனை விட உயரமாக இருக்க பின்பு வெளியில் குதித்து உயரம் வைப்பதற்காக தெருவில் தேடி சில பெரிய கற்களை எடுத்து உள்ளே போட்டு தன் உயரத்தைச் சரிப்படுத் திக்கொண்டு அந்த சுவரின் மறைவைக் கொண்டு தன் நிலையை சீர்படுத்திக் கொள்கிறான். துப்பாக் கியை தோளில் வைத்து இயக்கிப் பார்க்கும் விதங்களையும், துப்பாக் கியை இலகுவாக இயக்கமுடியுமா என்பதையும் சரி பார்த்துக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**லெப். செல்லக்கிளி - அம்மான்**
**[சதாசிவம் செல்வநாயகம்]**
**கல்வியங்காடு, யாழ்ப்பாணம்**

23.7.1983 அன்று யாழ். திருநெல்வேலியில் சிறீலங்கா இராணுவத்தினர் மீதான கண்ணிவெடி - கரந்தடி தாக்குதலின் போது வீரச்சாவு.



**மேஜர் கணேஸ்**
**[சித்திரவடிவேல் சிற்றம்பலம்]**
**கந்தளாய்**

5.11.1986 பெரியபாலம், மூதூரில் சிறீலங்காப்படை பதுங்கித் தாக்கியதில் வீரமரணம்



**கப்டன் ரஞ்சன்**
**[கனகநாயகம் ஞானேந்திரமோகன்]**
**பருத்தித்துறை**

13.7.84 அன்று, தொண்டைமானாற்றில் சிறீலங்காப் படையினரின் சுற்றிவளைப்பில் வீரமரணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மூத்த உறுப்பினர்

## லெப். கேணல் புலேந்திரன்

**[குணநாயகம் தர்மராஜா]**
**பாலையூற்று, திருமலை**

5-10-87 பலாலியில் இந்திய சிறீலங்கா அரசின் கூட்டுச்சதியால் சிறீலங்காப் படை கொழும்பு கொண்டுசெல்ல முயன்ற போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவு

❋

திருமலை மாவட்டத் தளபதியும் மூத்த உறுப்பினருமான

## லெப். கேணல் சந்தோசம்

**[கணபதிப்பிள்ளை உமைநேசன்]**
**அரியாலை, யாழ்ப்பாணம்**

12-10-87 அன்று யாழ் கோண்டாவில் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவு.

❋

மத்தியகுழு உறுப்பினர்

## லெப். கேணல் பொன்னம்மான்

**[யோகரத்தினம் குகன்]**
**கலட்டி, யாழ்ப்பாணம்**

14-2-87 அன்று யாழ் அரியாலைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவு.



மத்தியகுழு உறுப்பினரும் மன்னார் மாவட்டத் தளபதியுமான

## லெப். கேணல் விக்ரர்

**[மருசலின் பியுஸ்லஸ்]**
**பனங்கட்டிக்கொட்டு, மன்னார்**

12-10-1986 அன்று மன்னார் அடம்பனில் சிறீலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கொள்கின்றான்.

தம்பி (பிரபாகரன்) தபால் பெட்டிச் சந்தியில் இருந்து திருநெல்வேலிப்பக்கமாக உள்ள ஒரு வீட்டின் சுவரின் பின்னே நிலையை எடுத்து தாக்குதலுக்கு தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்கையில் வாக்கி செல்லக்கிளியை கூப்பிடுகின்றது.

செல்லக்கிளி அம்மான் மிக அவசரமாக தன் வேலையை முடித்துக்கொண்டு மீதி வேலையை அப்பையா அண்ணையிடம் விட்டு விட்டு தனது நிலைக்குச் செல்கின்றான். அம்மான் அருகில் உள்ள ஒரு கடையின் மேல் வெடிக்க வைக்கும் கருவியுடனும் தானியங்கி இயந்திரத் துப்பாக்கியுடனும் தயாராகின்றான்.

வெளிச்சம் எமக்கும் தெரிந்தது. அப்பகூட வேலை முடியவில்லை. விக்ரர் "அப்பையா அண்ணை வெளிச்சம் வருகின்றது கெதியா மாறுங்கோ" என்று கத்த அப்பையா அண்ணை வயர் ரோல்களுக்கு ரேப் சுத்திக் கொண்டிருக்கையில், வாக்கி மீண்டும் அலறியது.

"அம்மான் நாங்கள் பார்த்துக் கொண்டிருப்பவர்கள்தான். முன்னால் ஜீப், பின்னால் ட்ரக்" என்று அறிவித்தது. எனவே அம்மான் ட்ரக் வண்டிக்கு கண்ணி வெடியால் தாக்க முன்னால் வரும் ஜீப்புக்கு நாம் தாக்குதல் தொடுக்கத் தயாராகிக்கொண்டிருக்கையில் வெளிச்சங்கள் நெருங்கிக்கொண்டிருக்கின்றன.

ஜீப்பை எம்மிடம் வரவிட்டு, பின்னால் வரும் ட்ரக்வண்டியை கண்ணிவெடியால் தாக்கி அதில் தப்புபவர்களைச் சுடுவதாக எமது திட்டம். ட்ரக் வண்டியில் பின்பக்கமாக இருப்பவர்களை சுடக்கூடியவாறு விக்ரர் நிற்கின்றான். விக்ரரையும் தாண்டுபவர்களை கவனிக்க தம்பியும் சில தோழர்களும் நிற்கின்றனர். வெளிச்சங்கள் திருநெல்வேலிச் சந்தியைக் கடந்து வந்துகொண்டிருந்தது. நான் எட்டிப்பார்த்தேன். முன்னால் இரு விளக்குகளுடன் ஒரு வாகனம். அந்த விளக்குகளுக்கிடையிலான

www.tamilarangam.net



**கப்டன் றெஜி**
**[சுப்பிரமணியம் மகேஸ்வரன்]**
**துரவு, காரைநகர்**

02-12-85 அன்று மணலாறு - பட்டிக்குடியிருப்பில் சிறீலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவு.

இடைவெளியைக் கொண்டு அது ஜீப் என்று புரிந்துகொண்டேன். அடுத்து ட்ரக். மெல்ல வந்து கொண்டிருக்கின்றன.

நாம் ஜீப்பைத் தாக்குவதற்குத் தயாராகிக்கொண்டிருக்க ஜீப் விக்ரர் நின்ற இடத்தைத் தாண்டி கண்ணிவெடி வைத்த இடத்தை அண்மித்த போது கண்ணிவெடி வெடிக்க வைக்கப்பட்டுவிடுகிறது. எமக்கு அதிர்ச்சி. ஏன் அப்படி நடந்தது? சிந்திக்க நேரமில்லை. உண்மையில் ஜீப்வண்டியை விட்டு பின்னால் வரும் ட்ரக் வண்டிக்கே கண்ணிவெடி வைக்க இருந்தோம். இன்றுவரை அது ஏன் ஜீப்புக்கு வெடிக்க வைக்கப்பட்டது என்பது தெரியாது. ஏனென்றால் அதை வெடிக்க வைத்த செல்லக்கிளி அதை விளக்கவில்லை. சண்டை முடிந்தபோது அவனை நாம் இழந்துவிட்டோம்.

சிந்திக்க நேரரமில்லை. உடனே நானும் என்னோடு நின்றவர்களும் சுடத்தொடங்கினோம். ஜீப்பின் வெளிச்சம் அணையவில்லை. எனவே பின்னால் நடப்பவை எமக்குத் தெரியவில்லை. எனது G3யால் இரு விளக்குகளையும் குறிபார்த்து உடைத்தேன். விளக்கு உடைந்ததும் பின்னால் நின்ற ட்ரக்கின் வெளிச்சத்தில் ஜீப்பில் இருந்து சில உருவங்கள் இறங்குவதைக் கண்டு அவற்றை நோக்கியும் ஜீப்பை நோக்கியும் ரவைக் கூட்டில் போடப்பட்டு இருந்த அத்தனை குண்டுகளையும் சுட்டேன். அது இப்படி இருக்க விக்ரரைப் பார்ப்போம்.

ஜீப் வண்டி அவனைத் தாண்டும் போது விக்ரர் தன் தலையை சுவருக்கு உள்ளே இழுத்துக் கொண்டு நிற்கையில் மிகப்பெரிய சத்தத்துடன் கண்ணிவெடி வெடிக்கிறது. விக்ரர் தலையை நிமிர்த்திப் பார்க்க ஒரே புழுதிமண்டலம். மங்கலாக ஒருவன் வெடித்த ஜீப்பில் இருந்து ஓடிவருவது தெரிய அவனைக் குறிவைத்து விசையை அழுத்த, சில குண்டுகள் அவனின் உடலில் பாய அவன் தூக்கி எறியப்படுகின்றான். அப்படியே சுருண்டுவிழுந்து விட்டான். இன்னுமொருவன் ஓடிவர அவனை நோக்கிச் சுட அவன் மீண்டும் ஓடிவர மீண்டும் சுட குண்டுகள் அவனை வீழ்த்தவில்லை. ஆனால் காயப்படுத்தின. ஆனால் அவன் காயத்துடன் பல்கலைக்கழக பின் வீதியால் ஓடினான். விக்ரர் அவனைத் திருப்பிச் சுட்டான். வானளாவ உயர்ந்த புழுதி மண்டலம் அடங்கவில்லை. மற்றும் தகுந்த வெளிச்சம் இல்லை. எனவேதான் சரியாகச் சுடமுடியவில்லை. அவன் ஓடிவிட ஜீப்புக்கு கிட்டே ஒன்றோ இரண்டோ துப்பாக்கிகள் விக்ரரை நோக்கிச் சுட்டன. அதன் சுவாலையை விக்ரர் கண்டான். தன் இயந்திரத் துப்பாக்கியால் அந்த சுவாலையை மையமாக வைத்து சில வேட்டுக்களைத் தீர்த்தான். பின்பு அடங்கி விட்டது. மேலும் ஒருசில உருவங்கள் தெரிய அவற்றை நோக்கியும் சில குண்டுகளைச் சுட்டான். துப்பாக்கி திடீரென்று நின்று விட்டது. விக்ரருக்கு விளங்கி விட்டது. போடப்பட்ட குண்டுகள் தீர்ந்துவிட்டது. குண்டுகள் நிரப்பப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்ட மறு ரவைச் சட்டத்தைமாற்றி மீண்டும் சுட்டான். அதேவேளை பின்னால் வந்த ட்ரக் வண்டியின் சாரதி வெடி வெடித்ததைப் பார்த்தான். அவன் உடல் சில்லிட்டது. பெரிய வெளிச்சத்தையும், ஜீப் மேலே தூக்கி எறியப்பட்டதையும் கண்ட சாரதி தன்னை அறியாமலே பிரேக்கை இறுக அமத்தினான். ஏன் பிரேக் அழுத்தும் மிதி மீது ஏறி நின்றான் என்றே கூறலாம்.

ட்ரக் பிரேக் போட்டு நின்றதும் ட்ரக்கின் பின்புறத்தில் இராணுவத்தினர் தம் துப்பாக்கியை தயாராக்கியவாறு இருக்கையிலிருந்து எழத் தொடங்கினர்.

தம்பி இரு வாகனங்களும் தன்னைத் தாண்டுமட்டும் சுவரின் மறைவிலே குந்தியிருக்க, இரு வாகனங்களும் அவரைத் தாண்டுகிறது. சிறிதாக நிமிர்ந்து பார்க்கையில் ஜீப் வண்டி கண்ணி வெடியை நெருங்கிக் கொண்டிருக்க ட்ரக் அவருக்கு 20 யார் தூரத்தில் சென்றுகொண்டிருக்க கண்ணிவெடி வெடித்தது. ட்ரக் அவருக்கு மிகக்கிட்ட கையில் எட்டிப் பிடிக்குமாப் போல் தூரத்தில் பிரேக் போட்டதால் குலுங்கி நிற்க தான் எப்போதும் உடன் வைத்திருக்கும் அவருடைய G3 A3 வெடிக்கத் தொடங்கியது.

ட்ரக்கின் இருக்கையில் இருந்து இராணுவத்தினர் எழுந்தும் எழாதது மான நிலையில் தம்பியின் G3 வெடிக்கத் தொடங்கியது. G3யிலிருந்து புறப்பட்ட சூடான ரவைகள் தாக்குதலுக்குத் தயாராக எழுந்த இராணுவத்தினரை வரிசையாக விழுத்தத்தொடங்கியது.

சற்றும் எதிர்பாராமல் ஏற்பட்ட இத்திருப்பம் தம்பியை ஆபத்தின் உச்ச எல்லைக்குள் சிக்கவைத்து விட்டது.

ஆனால், இந்த எதிர்பாராத திருப்பமே இப்போரின் முழு வெற்றிக்கு வழி அமைத்தது எனலாம். மிகத் துரிதமாகவும் குறி தவறாமலும் துப்பாக்கியை கையாள்வதில் முதன்மையாளராகத் திகழும் தம்பியிடம் ட்ரக்கில் வந்த 9 இராணுவத்தினரும் சிக்கியதே எமது முழு வெற்றிக்கு வழி கோலியது.

ட்ரக் மிகக் கிட்ட நிற்பதால் இலகுவாக தம்பியால் அவர்களைச் சுடமுடிகிறது. வெடியின் அதிர்வில் தெரி விளக்குகள் அணைந்துவிட்ட பொழுதிலும் மிகக் கிட்டேயிருப்பதால் ஒவ்வொருவராகக் குறிவைத்துச் சுட்டார். ஆனால் மிக அபாயகரமான நிலை அவருக்கு. இராணுவத்தினரைப் பொறுத்த வரையில் தம்பி மிகக் கிட்டே நிற்கிறார். எதிர்பாராமல் இத்தாக்குதலில் மிக அபாயத்தின் எல்லையில் தம்பிதான் நிற்கிறார். ஆனால் தனது ஆளுமையால், ஆற்றலால் வரிசையாக இராணுவத்தினரை விழுத்தி வந்த போதிலும் இரண்டு சாதுரியமான இராணுவத்தினர் ட்றக்கிலிருந்து கீழே சில்லுக்குள் புகுந்துகொண்டு, மறைந்திருந்து தமது தாக்குதலை ஆரம்பித்தார்கள். தம்பி நின்ற சுவரில் வேட்டுக்கள் பட்டுத் தெறித்துக்கொண்டிருந்தன. இத்துடன் ட்றக்கின் முன்புறத்தில் இருந்தவர்களும் கீழே பாய எத்தனித்தனர். இதை நோக்கிய தம்பியின் G3 இவர்களையும் நோக்கி முழங்குகிறது.

இதிலே மிகவும் சங்கடம் என்னவென்றால் தம்பிக்கு உதவிக்கு எவருமே இல்லை. நாம் எமது திட்டத்தின் படி ஜீப்பை முன்னே விட்டு ட்ரக் வண்டிக்கு கண்ணி வெடித் தாக்குதல் செய்வதாக இருந்தோம். அத்திட்டத்தின்படி தம்பியை மிகப் பின்னுக்கு

## சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்



'எமது சூழலைப் பாதுகாக்க ஒரே வழி நிலத்தை மூடி மரங்களை வளர்ப்பதே ஆகும். இதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். அத்துடன் காடுகள் அழிப்பதையும் மரங்களை எழுந்தமானமாகத் தறிப்பதையும் தவிர்க்கவேண்டும்' என தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இவ் அரிய நடவடிக்கையில் மக்கள் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றனர். சூழல் பாதுகாப்பை ஒட்டி தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கிளிநொச்சிக் கோட்டத்திலுள்ள பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள், பொதுஇடங்கள் போன்றனவற்றைக் கிராம மக்கள் உதவியுடனும் கிராமிய உற்பத்திக் குழுவின் சிரமதான சேவைகள் மூலமும் திருத்தியமை குறிப்பிடத் தக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைத்திருந்தோம். ஆனால் இப்போ தனியாகவே ட்றக்கை சமாளிக்க வேண்டிய நிலைக்குத் தம்பி தள்ளப்பட்டு விட்டார். இதே நேரம் ஜீப்பை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்த விக்ரர் தனக்கு 20 யார் பின்னே ட்ரக் நிற்பதையும் அதிலிருந்து துப்பாக்கிகள் சடசடப்பதையும் அவதானித்தான். தன் இயந்திரத் துப்பாக்கியை ட்றக்கை நோக்கித் திருப்பினான். ட்றக்கின் முன் கண்ணாடிகள் சிதறுகின்றன. கண்ணாடிக்கு குறுக்காக ஓர் நீள வரிசையாகச் சுட்டான்.

அப்போதுதான் சாரதி இறந்திருக்க வேண்டும். நாம் பின்பு பார்த்தபோது தனது இருக்கையிலேயே ஸ்ரேறிங்கில் சாய்ந்து வாயால் இரத்தம் கக்கியபடி உயிரை விட்டிருந்தான்.

விக்ரரின் இடத்திலிருந்து சற்று முன்னோக்கி எதிரில் இருந்த ஒழுங்கையிலிருந்து "பசீர் காக்கா" றிப்பீட்டரால் ஜீப்பை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தார். றிப்பீட்டரில் தோட்டாக்கள் முடியும்போது அதை மாற்றித் திருப்பித் தாக்கும்படி சொல்லி உற்சாகமூட்டிக் கொண்டிருந்தார் காக்காவின் அருகிலிருந்த அப்பையாஅண்ணை. அப்போது ஒழுங்கையை நோக்கி ஒருவன் S.M.G. உடன் ஓடி வந்தான். 'சுடு' என்ற அப்பையா அண்ணை உடனே "கவனம் எங்கட பொடியளோ தெரியாது பார்த்துச் சுடு" என்றார். றிப்பீட்டர் சத்தம் ஓய வந்தவன் பிணமாகச் சரிந்தான். அவனது S.M.G. யை அப்பையா அண்ணை ஓடிவந்து எடுத்துக் கொண்டார். இவனே ரோந்துப் பிரிவுக்குத் தலைமை தாங்கிய லெப்ரினன்ட் என்பதை பின்னர் தெரிந்து கொண்டோம். அவனது விசேட இராணுவப் பட்டிகள் அதை உறுதிப்படுத்தின.

இதே நேரம் தம்பி தனியே நிற்பதை உணர்ந்து ரஞ்சனையும் இன்னொரு போராளியையும் "தம்பியிடம் ஓடு" என்று துரத்தினேன். அவர்கள் அருகிலுள்ள வீடுகளால் பாய்ந்து தம்பியை நோக்கிச் சென்றனர்.

ஆனால் ரஞ்சனும் சக போராளியும் தம்பியை நோக்கி சென்றடைந்த போது ட்றக்கிலிருந்த அனைத்து துப்பாக்கிகளையும் தம்பியின் தனி ஒரு G3 ஓயவைத்து விட்டது.

சாதாரணமாக எவரும் நம்புதற்கரிய இவ்வீரச்செயலை முடித்துவிட்டு அமைதியாக வீட்டின் அருகேயுள்ள மாமரத்தின் கீழிருந்து முடிந்த ரவைக்கூட்டிற்கு ரவைகளை நிரப்பிக் கொண்டிருந்தார் தம்பி.

மதிலேறிக்குதித்த ரஞ்சனும் மற்றைய போராளியும் ஆயுதத்தோடு ஒரு நபர் இருப்பதைக் கண்டு ஆயுதத்தைத் தயார்நிலைக்குக் கொண்டுவந்து "யாரது" என்று முன்னே வந்தனர்.

"அது நான்ராப்பா" என்றவாறு ரஞ்சனை அடையாளம் கண்ட தம்பி இங்கே எல்லாம் முடிந்தது. உங்கடை பக்கம் எப்படி என்றார். "அண்ணை எங்கடை பக்கம் பிரச்சினையில்லை" என்றார் ரஞ்சன்.

"இங்கையும் எல்லாம் முடிந்து விட்டது, ஆனால், எனக்கு சற்று முன்பாக எதிரேயிருந்த புலேந்திரனையும் சந்தோசத்தையும் காணவில்லை. காயப்பட்டிட்டாங்களோ தெரியவில்லை, வா பார்ப்போம்" என்றவாறு தன் பிரியத்திற்குரிய G3யை தூக்கிக்கொண்டு விரைந்தார் தம்பி.

மதிலேறிக் குதிப்பதற்குமுன் ரஞ்சனுடன் வந்த போராளி தம்பியின் அனுமதியைப் பெற்று எதற்கும் முன்னெச்செரிக்கையாக ஓர் குண்டை வீசினான். குண்டு ட்ரக்கின் கீழ் விழுந்து வெடித்து எரிபொருள் தாங்கியை உடைத்தது.

இதன்பின் மதிலேறிக் குதித்து றோட்டைத் தாண்டி புலேந்திரன் சந்தோசத்தின் இடத்தையடைந்தான். அங்கு புலேந்திரன் சந்தோசத்தைக் காணவில்லை. "எதற்கும் முதலில் இறந்தவர்களின் ஆயுதங்களைச் சேகரியுங்கள்" எனக் கட்டளையிட்டார் தம்பி. மதிலேறி றோட்டில் குதிக்க ஆயத்தமான ரஞ்சனுடன் வந்த மற்ற வீரன் தம்பியைப் பார்த்து "அண்ணை அவன் அனுங்குகிறான்." மீண்டும் ஒருமுறை முழங்கிய G3 அவனின் அனுங்கலுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

இதன் பின் ட்ரக்கை நெருங்கி ஆயுதங்களை சேகரிக்கத் தொடங்கினர். தம்பி எதற்கும் என்று வெளியே கிடந்த இராணுவத்தினரின் தலையில் இறுதி அத்தியாயத்தை G3 ஆல் எழுதிவைத்தார். G3யின் வேகம் மண்டையோடுகளைப் பிளக்க வைத்தது.

இதே நேரம் பல்கலைக்கழக பின் வீதியால் ஓடிய ஓர் இராணுவ

## தமிழ் இலக்கியங்கள் மூலம் தேசப்பற்றைப் பெறமுடியும்

**'தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இலக்கியம் பெரிதும் பயன்படுகிறது. அத்துடன் இலக்கியப்பணி மூலம் மனிதன் மகோன்னத நிலையை அடையமுடியும். இலக்கியங்கள் மூலம் இனப்பற்றையும், மொழிப்பற்றையும், தேசப்பற்றையும் பெறமுடியும்.' கிளிநொச்சியில் ஆனிமாத இறுதியில் நடைபெற்ற விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் 'முழு நிலா' இலக்கிய வட்ட அமர்வில் சிறப்புரை ஆற்றுகையில் வித்துவானும் கல்விநிலைய அதிபருமான திரு. எஸ். மகாலிங்கம் குறிப்பிட்டிருந்தார். இந்நிகழ்வின் போது எழுத்தாளர் தாமரைச்செல்வி அவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். கல்வியும் போராட்டமும் பற்றிய கருத்துரையைக் கிளிநொச்சி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் யாழவன் நிகழ்த்தினார். சீதனம் பற்றிய கருத்துரையைக் கிளிநொச்சி மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி வான்விழி நிகழ்த்தினார். இந்நிகழ்வில் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வீரனை இன்னோர் போராளி துரத்திச் சென்று சுட்டான். ஜீப்பை முற்றாக முடித்துவிட்டு பொன்னம்மானும் நானும் என்னுடைய போராளிகளும் ட்ரக்கை நோக்கி நடு றோட்டால் ஓடினோம்.

"கரையால் வாருங்கள்" என்ற குரல் எம்மை வரவேற்றது.

எல்லோரும் தம்பியை சூழ்ந்து கொண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கொண்டு ஆயுதங்களைப் பொறுக்கத் தொடங்கினோம்.

இதற்கிடையில் பொன்னம்மான் அதீத மகிழச்சியுடன் இறந்து கிடந்த இராணுவத் தினரின் ஹெல்மெட்டை தலையில் போட்டுக்கொண்டு ட்ரக்கின் கீழே இறந்து கிடந்த இராணுவ வீரர்களினது ஆயுதங்களை தேடி எடுத்துக்கொண்டான்.

இத் தாக்குதல் இரவு நேரமாதலால் எம்மையும் இராணுவத்தினரையும் வேறு பிரிக்க நாம் ஹெல்மெட்டைத் தான் குறியீடாகப் பாவித்தோம். எனவே ஹெல்மெட்டுடன் ஓர் உருவம் நகர்வதைக் கண்ட தம்பி உடனடியாக துப்பாக்கியை தயார்நிலைக்கு கொண்டு வந்து "யாரது" என்று வினவ அம்மான் "அது நான் தம்பி" என்றவாறு தனது தவறை உணர்ந்து ஹெல்மெட்டைக் கழற்றினார்.

பொன்னம்மானை செல்லமாக கண்டித்த வாறு எல்லாரையும் சரிபார்க்குமாறு தம்பி பணிக்க "அம்மானைக் காணவில்லை" என்று விக்ரர் கத்தினான். விக்ரரும் புலேந்திரனும் அம்மான் நின்ற கடையின் மேல் ஏறினர். "டேய் அம்மானுக்கு வெடி விழுந்திட்டுது" என்ற விக்ரரின் குரல் எங்கும் எதிரொலித்தது. எல்லோரும் அங்கே ஓட நான் வானை எடுத்து வந்தேன்.

வானில் அம்மானை ஏற்றும்போது அம்மானின் உடல் குளிர்ந்துவிட்டது.

லிங்கம் இறுதியாக இராணுவத்தினரின் தலையில் போட றெஜி ஆயுதங்களைப் பொறுக்கினான்.

வான் புறப்படத் தொடங்க மழையும் மெதுவாகத் தன் கரங்களால் வாழ்த்துத் தெரிவித்தது. எமக்கு செல்லக்கிளி அம்மானின் மரணத்திற்காக இடியும் மின்னலும் சேர்ந்து இறுதி வணக்கம் செலுத்த வான் எமது முகாம் நோக்கிப் பறந்தது.

**- அன்புடன் கிட்டு -**

# கருப்பு யூலைகளுக்கு நன்றி

**ஜெயா**

"யூலை" என்றால் குடல் நடுங்கும்.
ஏக்கம் நிறைந்த
எண்ணச் சுமையில்
மனது வலிக்கும்.

"என்ன நடக்குமோ?"
"ஏது நடக்குமோ?"
"கலவரம் வந்து கனசனம் சாகுமோ?"

இதயம் உள்ள ஈழத்தமிழன்
செத்துப் பிழைக்கும் காலமிக்காலம்.
"எங்கே தமிழன்...?" "தமிழிச்சி எங்கே...?"
இதயம் வியர்க்கும் கொடுமைகள்......

கம்பி வலைக்குள்ளே எங்கள் உறவுகள்
நிராயுதபாணிகள்.
வெட்டினீர்; குத்தினீர்.
பிசிறித் தலைசரிய குரல்வளையை அறுத்தீர்.
வயிறைப் பிளந்தீர்
குடலெடுத்தீர்; மாலை செய்தீர்.
கண்ணைத் தோண்டி காலாலே மிதித்தீர்.
களித்தீர்;
பாடிப்பரிகசித்தீர்...

"இரத்தம் தோய்ந்த நினைவுகள் சுமந்தோம்."

இரத்த வெறிபிடித்த
மாமிச பட்சினி தன்
குடலை நனைக்கும் கோரம் தொடர்ந்தது.

"இரத்தம் தோய்ந்த வரலாற்றைச் சுமந்தோம்."

பதுங்கிக் கிடந்த தமிழனை உசுப்பி
"பாய்" என்று பணித்த "யூலைகள்"
நன்றி!

இன்று,
கலவரம் வந்த காலம் வந்தால்
நிலவரம் மாறி நெஞ்சு சிரிப்போம்.
"எங்கு நடக்குமோ?" "எப்படி நடக்குமோ?"
ஆமியோ? நேவியோ?
ஆகாயப் படைதானோ?
உள்ளக் களிப்பில் கேள்விகள் கிளம்பும்.

கரும்புலி மில்லரின் காவியம் தொடரலாம்....
கொக்காவில், மண்கிண்டி வரலாறு நீளலாம்...
"ஆனையிறவுகள்" ஆட்டம் காணலாம்...
"வை-8" ஏதும் வசமாய் மாட்டலாம்...
ஆவல் பொங்கும் நினைப்புகள் விரியும்.

அவசரமாகவே விரையும் வாகனம்
அணியணியாக "பொடியளின்" நகர்வு

"இந்தமுறையும் ஏதேனும் நடக்கும்"
"எங்கட பொடியள் நிமிந்திட்டாங்கள்;
குடாமல் விடாங்கள்"
பொக்கைவாய் இரண்டின் பேச்சில்கூட
நம்பிக்கைத் தெறிப்பு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சீதனமும் தேசவழமைச் சட்டமும்

யாழ்ப்பாணச் சமுதாய அமைப்பினுள்ளே ஆழமாக வேரோடியுள்ள சீதனப் பிரச்சினையானது அதன் சமூக வளர்ச்சியில் அதன் தனித்துவத்தில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது. சீதனமும் சொத்துமே சாதாரண மக்களின் திருமண வாழ்வை, தாம்பத்திய உறவை நிர்ணயிக்கும் சக்தியாக வளர்ந்துள்ளது. இங்கு நடைபெறும் திருமணப் பேச்சுக்களும் பொருத்தத் தேடல்களும் குடும்பம் ஒன்றை அமைப்பதற்கு அத்தியாவசியமான ஒரு பகுதியான உடைமைகளையும் பணத்தையும் மட்டுமே குறிக்கோளாகக் கொண்டவை.

காலங்களின் முதிர்ச்சியும், சமூகமாற்றங்களும் ஏற்பட்டு எத்தனையோ பழமையான மரபுகள் வழக்கொழிந்து போனபின்னரும்கூட சீதனவழக்கமானது காலநகர்வுகளிலே போகப்போக இன்னும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்ததே தவிர தளர்ந்த பாடில்லை. இத்தகைய பிற்போக்குத்தனமான, ஒரு பெண்ணின் கௌரவத்தை, தனித்துவத்தைப் பாதிக்கும் சீதன வழக்கமானது ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியையும் பெண்ணின் விடுதலை நோக்கிய பார்வையையும் குறுக்கிடும் செயற்பாடாக அமைந்துள்ளது. எனவே சீதனம் பற்றியும் அதன் சமுதாயத் தாக்கம் பற்றியும் கூறுவது இக்கட்டுரையின் நோக்கமன்று. சீதனவழக்கத்திற்ச் செல்வாக்குச் செலுத்தியதில் மிக முக்கிய காரணியாக விளங்கிய, அதனைப் பேணியதில் முக்கிய பங்காளியாகச் செயற்பட்ட தேசவழமைச்சட்ட நடைமுறையில் சீதனத்தின் பங்கு எத்தகையது என்பதை இக்கட்டுரை விளக்க முனைகிறது.

காலனியாதிக்க நாடுகள் தனது ஆக்கரமிப்பின் கீழ் கட்டுண்ட நாடுகளிடையே தனது ஆட்சியதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு அந் நாடுகளிலுள்ள மேல்மட்ட மக்களைப் பயன்படுத்தும் முறை வழக்கத்திலிருந்தது. அந்த நாட்டில் நடைமுறையிலுள்ள பழக்கவழக்கங்கள் பண்பாடுகளை அடிப்படையாக வைத்து, சட்டங்களை இயற்றி அதனை மக்கள் மீது இவ் உயர் குழாத்தினரைக்கொண்டு காலங்காலமாகச் செயற்படுத்தி வந்தனர். இத்தகைய சட்டங்கள் பெரும்பாலும் உயர் குழாத்தினர் நடைமுறைப்படுத்திய பழக்கவழக்கங்களாகவே இருந்தன. எனவே அவர்கள் சார்ந்ததாக சட்டங்களும் இயற்றப்பட்டன.

இந்தவகையில் அமைந்ததுதான் தேசவழமைச் சட்டம். வடதமிழீழத்தில் வாழும் தமிழர்களைக் கட்டுப்படுத்துவதுதான் இச்சட்டம். தனியார் சொத்துடைமையை வலியுறுத்துவதாக அமைந்தது. இலங்கைக் கரையோரப் பகுதிகளை ஆக்கிரமித்த ஒல்லாந்து தேசாதிபதியால் தொகுக்கப்பட்ட இச்சட்டமானது இன்றுவரை வழக்கிலிருந்தது.

சுதாமதி

தற்கால சூழ்நிலையில் யாழ்ப்பாண சமூக அமைப்பில் பாரியளவில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. முன்னர் நடைமுறையில் இருந்த வழக்கங்கள் தற்போதில்லை. தத்தெடுப்பது, சிறைக்குடிகளை ஈடுபடவைப்பது போன்ற பழைய பழக்கவழக்கங்கள் மறைந்துவிட்டன. தேசவழமையின் ஒரு அங்கமான அடிமை குடிமைமுறையும் படிப்படியாக ஒழிந்துவருகிறது. தேசவழமையிற் கட்டிக்காக்கப்பட்டு வந்த சாதியமுறைமையும் கூட படிப்படியாக வலுவிழந்து போய்க்கொண்டிருக்கிறது. திருமணப் பேச்சுக்கள் என்ற நிலையில் மட்டும் இன்னும் சாதியம் கட்டிக்காக்கப் படுவது நிகழ்ந்துகொண்டிருக்கிறது. எனினும் காலமாற்றமும் சமுதாயப் புரட்சியும் இவற்றில் முற்றாக மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நம்பிக்கை கொள்ளலாம்.

ஆனால் இக்கால நீட்சியிலும் மாறாத, அதேவேளை இன்னும் இறுக்கமடைந்து செல்கின்ற ஒன்றாக இச்சீதனமுறைமை கடைப்பிடிக்கப் படுகிறது. யாழ்ப்பாணத்தின் சமூக பொருளாதார உறவுகளுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இது வலுவடைந்து போய்க்கொண்டிருக்கிறது.

இச்சீதனமுறையை உயர் குழாத்தினர் தங்களது சொத்துக்களை தங்களிடமே வைத்திருக்கவேண்டும் என்பதற்காகவும், பெண்களுக்கு ஏதோ சொத்து இருக்கிறது என்ற பொய்யான மாயையை உருவாக்குவதற்காகவும் கட்டிக்காத்துக் கொண்டிருக்கின்றனர்.

“உலகமே மாறுகிறது. எல்லாம் மாறுகிறது. யாழ்ப்பாணத்தில் சீதனமுறை மாறவில்லை” என்று தேசவழமை தொடர்பாக எழுதிய கு. சிறீராமநாதன் குறிப்பிட்டது இங்கு நோக்குதற்குரியது.

எனினும் தேசவழமையிற் கூறப்பட்டிருந்த சீதனம் பற்றிய விடயங்கள் பெண்ணுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முகமாக கூறப்பட்டிருந்த போதிலும் அது நடைமுறையிற் பின் வந்த காலங்களில் மாற்றமுற்றது. ஆணுக்கே முன்னுரிமை அளிக்கும் விதமாக மாறி, பெண் ஆனவள் தனது சீதனச் சொத்துக்களைக் கையாளுவதற்கான அவளது சுயமான உரிமைகளுக்கு முட்டுக்கட்டை போடும் நிலைக்குத் தள்ளப்பட்டாள்.

பெண்வழிச் சொத்துரிமை பெண்வழியினர்க்கே உரித்தாகும் வழியிற்தான் அன்றைய சமூக அமைப்பு இருந்தது. சீதனம் என்ற வழக்கமும் அதற்காகவே ஏற்படுத்தப் பட்டது. இந்த முறைமையானது அன்றைய காலத்தில், தமிழர்களின் வாழ்வியக்கப் படிநிலையின் வளர்ச்சிக் காலத்தில் தாய்வழிச் சொத்துரிமையே இருந்ததென்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக இருந்திருக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சின்றது.

இப்படி முன்னோர் காலத்தில் பெண்ணின் சொத்துக்களைப் பேணும் வகையில் இருந்த சீதன வழக்கில் ஆணாதிக்கத்தின் செல்வாக்கு ஓங்கி, இந்த தேசவழமையின் சீதன முறையினை தங்களுக்குச் சதகமாக மாற்றிக்கொண்டனர்.

பெண் தனது சீதனச் சொத்துக்களை தன்னிச்சையாக பயன்படுத்த முடியாதவளாக, ஆணின் சம்மதத்தின் பேரிலேயே தனது சொத்துக்களைப் பயன்படுத்தும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டாள். இச் சீதனவழக்கால் அவள் பயனடையவில்லை. மாறாக தனது சொத்துக்களுக்கே இன்னொருவரின் அனுமதி கோரி நிற்கவேண்டிய நிலைக்கு ஆளாகினாள்.

இத்தகைய நடைமுறையை மாற்றி பெண்ணுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நோக்குடன் 'தமிழீழத் தேசவழமைச் சட்டம்' அமுலாக்கப் பட்டது. தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் ஒப்புதலின் பேரில் 1993-ஆம் ஆண்டு டிசம்பர் 1-ம் திகதி நடைமுறையிற் கொண்டு வரப்பட்ட இச்சட்டம் முக்கிய சீர்திருத்தங்களைக் கொண்டு நிற்கிறது.

1993-ஆம் ஆண்டின் 03-ம் இலக்கச் சட்டப்படி பெண்ணுக்கான சொத்தை அவள் அனுபவிக்கும் நியாயமான உரிமையை இச்சட்டம் வழங்குகிறது.

"திருமணமான பெண்கள் சகல விதத்திலும் சுதந்திரமாக விளங்குவார்கள். மனைவி தனது பிரத்தியேக தனிச் சொத்தையும் தேடிய தேட்டத்தின் அரைப்பங்கையும் தன் விருப்பப்படி கணவன் சம்மதம் இன்றி கையாள்வதற்கு உரித்துடையவர்"

தற்போது நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட இப்புதிய சட்டத்தின்மூலம் பெண்களுக்கு சொத்துக்களை விற்கவோ வாங்கவோ சகல சுதந்திரங்களும் அளிக்கப்பட்டுள்ளன.

எனவே தமிழீழத் தேசவழமைச் சட்டமானது பழைய ஒல்லாந்த தேசவழமைச்சட்டத்திலிருந்து மாறுபட்டு பெண்ணின் தனித்துவமான சொத்து உரிமைக்கு மதிப்பு அளிக்கும் வகையில் மாற்றப்பட்டிருப்பது வரவேற்புக்குரியதாகும்.

**நன்றி: சுதந்திரப் பறவைகள்**

# சீதனக் கொடுமையை எதிர்த்து தமிழீழமெங்கும் பிரச்சார இயக்கம்

**தமிழீழத்தின் சகல பகுதிகளிலும் இருமாதங்கள் தொடர்ச்சியான சீதன ஒழிப்புப் பிரச்சாரம் நடைபெறவுள்ளது. கோட்ட ரீதியாக நடைபெறும் இச்சீதன ஒழிப்புப் பிரச்சாரத்தில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினர் ஈடுபடவுள்ளனர். ஆண், பெண் போராளிகள் கலந்துகொண்டு, எமது சமூகத்தின் சாபக்கேடுபோல இன்னும் பீடித்துள்ள இக்கொடுமையை ஒழிப்பதற்கு தீவிர பிரச்சாரத்தை மேற்கொள்ளவுள்ளனர்.**

**இச்சீதன ஒழிப்புப் பிரச்சாரமானது சீதனம் பற்றிய பொதுமக்களது கருத்துக்களைப் பெறும் நோக்குடனும் அவர்களது ஒத்துழைப்பை வேண்டியும் நடாத்தப்படவுள்ளது.**

**நாம் சீதனத்தை ஒழிப்பதில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளோம். எமது போராட்டம் தேசிய விடுதலையோடு இணைந்த சகவிடுதலையை வென்றெடுப்பதை நோக்கமாகக் கொண்டது. சமூகவிடுதலையின் அங்கமாக பெண்விடுதலை அமைகிறது. எனவே பெண்ணின் விடுதலை நோக்கிய பாதையில் பெண்ணினது தனித்துவம், கௌரவம் என்பன பேணப்படவேண்டும். இதன் மூலமே சமுதாயத்தில் புரட்சிகரமான மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் காணமுடியும்.**

**ஆரம்பமாகவுள்ள இப்பிரச்சாரக்களத்தில் தமிழீழத்தின் சகல வெகுசனத் தொடர்புச் சாதனங்களும் கருத்துக்களைப் பரிமாற்றம் செய்யவுள்ளன. கோட்டரீதியாக, மாவட்ட ரீதியாக நடைபெறவுள்ள இப்பிரச்சார நடவடிக்கையில் கருத்தரங்குகள், விவாதமேடைகள், கலைநிகழ்வுகள், சுவரொட்டிகள் என்பவற்றின்மூலம் கருத்துக்கள் பரப்பப்படவுள்ளன.**

**இச்சீதன ஒழிப்பு நடவடிக்கையின் சட்டச்சிக்கல்கள் என்ன? இதனை நடைமுறைப்படுத்துவதில் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகள் என்ன? என்பது பற்றி பொதுமக்களிடமிருந்து அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் வேண்டிநிற்கின்றோம்.**

**பெண்கள் பாரியளவிற் பாதிக்கப்படும் இப்பிரச்சினையைப் புரிந்துகொண்டு இப்பிரச்சாரக்களத்தில் கூடுதலான பெண்கள் கலந்துகொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்கி, இந்நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பசுமையின் திறவுகோல்

## யாழ். கடனீரேரித் திட்டம்

'தண்ணீர், தண்ணீர்' என எழும் குரல், அயலிலுள்ள தமிழ் நாட்டின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையாக, அரசியல்வாதிகள் கதிரையைக் கைப்பற்றக் கையாளும் கருவியாக வேரூன்றி விட்டது. வற்றாத நிலநீர்ப்படுக்கை உள்ள யாழ்ப்பாணக் குடாநாடு இதேபோல் நாளை நன்னீருக்கு கையேந்தி நிற்கவேண்டிய சூழல் வாசலுக்கு வந்துவிட்டது.

கட்டற்ற பாவனை முறைகளால் யாழ். குடாநாடு பாலைவனம் ஆகலாம் என இஸ்ரேலிய நிபுணர்கள் எச்சரித்தது நிதர்சனமாகிவிடுமோ என ஒரு அச்சம் எழுகிறது. இறைக்க இறைக்கத்தான் கிணறு ஊறும் என்பது பழைய கதை. இன்று? ஊறும். ஆனால், உவர்நீர்தான் ஊறும். மேலதிகமான இறைப்பினால் கிணறுகள் உவர் நீராக மாறுவதைப் பரவலாக விவசாயிகள் அவதானித்துள்ளனர்.

இந்த நிலையில் 1952இல் 'வெப்' எனும் அறிஞர் தொடக்கிவைத்த யாழ். கடனீரேரியை நன்னீராக்கும் திட்டத்தை மீள் பரிசீலனைக்குட் படுத்துவது கட்டாயம். இதற்கு நாம் குடாநாட்டின் புவி அமைப்பு, அதன் நீர்த்தேக்கம், நீர்த்தேவை என்பவற்றை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

வான் பார்த்த பூமியான யாழ். குடாநாட்டின் முக்கிய நீர் வளமான மழை (வருடாந்தம் 48 அங்குல மழைவீழ்ச்சி) ஐப்பசி தொடக்கம் மார்கழி மாதங்களில் கிடைக்கும் பெருமழைக் காலத்திலேதான் அதிகளவு பெறப்படுகிறது. இதிலே, கடலில் வடிந்து போவதும் (25%) நீராவியாக மாறுவதும் (40-45%) போக மீதியாகி நிலஅடி நீர்த்தேக்கத்தை அடையும் நீரே (30-35%) எமது பாவனைக்கு உரியதாயுள்ளது.

நீர்வடிதலையும் சேமித்தலையும் தரையமைப்பின் இயல்பே பெருமளவு தீர்மானிக்கிறது. யாழ். குடாநாடு சுண்ணக் கற்பாறைகளாலானது. சில இடங்களில் பாறைகள் வெளியரும்பிக் காணப்படும். (உ+ம்) புங்குடுதீவின் கிழக்குப் பகுதி, மேற்கில் சில பகுதிகள், காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை என்பன. வெளியரும்பிய சுண்ணப்பாறைகளில் உறிஞ்சுதுளைகள் உள்ளன. இவை மழைநீரை நிலத்துட் செலுத்தும். ஏனைய பகுதிகளில் மழைநீர் மண்படையூடு வடிந்து கீழிறங்கும். கீழிறங்கிய மழைநீர், ஏற்கனவே பாறைப்படைகளில் ஊடுருவி தேங்கிநிற்கும் உவர்நீர்த்திணிவின் மேல், நன்னீர் வில்லைகளாக மிதக்கின்றன. (அடர்த்தி வேறுபாடு காரணமாக) இந்த நன்னீர் வில்லைகளே கிணறுகள் மூலமாக நமது பாவனைக்கு வருகின்றன. பம்பிகளைப் பாவித்து மேலதிகமாக நீரை இறைக்கும் போது நன்னீர் வில்லை முடிவடைந்து உவர்நீர் மேலெலும் அபாயம் உள்ளது.

ஆக, நாம் நன்நீரைப் பெற இரு சாத்தியமான வழிகள் உள்ளன.

**1. மழைநீர் 2. நிலஅடிநீர்**

இந்த இரு வழிகளாலும் பெறப்படும் நீரை நாம் சேமிக்கவேண்டும்.

அதாவது

1. மழைநீர் ஏந்தும் நீரேந்து பரப்புகளை அதிகரிக்கவேண்டும்.
2. நிலநீர்த்தேக்கத்தின் அளவைக் கூட்டல் வேண்டும்.



www.tamilarangam.net

யாழ். குடாநாட்டில் மழை நீரைச் சேமிக்க

1. பலதரப்பட்ட 100 குளங்கள்
2. உள்நாட்டு ஏரிகள்
   அ. யாழ். கடனீரேரி
   ஆ. ஆனையிறவு கடனீரேரி
   இ. உப்பாறு கடனீரேரி
   ஈ. வடமராட்சி கடனீரேரி
3. வழுக்கை ஆறு

என்பன பாவிக்கப்படுகின்றன.

இவற்றில் முக்கிய சேமிப்புக் கூறாக உள்நாட்டு ஏரிகளே விளங்குவதாலும்,

மழைகாலத்தில் இவ்வேரிகளில் நேரிடையாக விழுகின்ற நீரும், கால்வாய்கள் மூலம் வடிந்து வந்து சேரும் நீரும் நன்னீராக மாற்றப் படின் ஒரு இலட்சம் ஏக்கர் அடிநீர் இவ்வேரிகளிலிருந்து விவசாயத் திற்குப் பெறப்படலாம் என்பதாலும்,

ஏரிகளில் சேர்க்கப்படும் நீர், நிலக்கீழ் நீர்த்தேக்கத்தைப் பலமடங் காக உயர்த்தும் என்பதாலும்,

இந்த உள்நாட்டேரிகளை மையப்படுத்தி யாழ். கடனீரேரித் திட்டம் தயாரிக்கப்பட்டது.

## ஏரித்திட்டம்

நோக்கம்: உள்நாட்டு ஏரிகளின் நீரை நன்னீராக மாற்றி விவசா யத்தை மேற்கொள்ளலும் நன்னீர்த் தேவையை நிறைவுபடுத்தலும்.

வழிமுறை: ஏரிகளில் தேங்கி நிற்கும் கடல்நீரை மழைநீர் கொண்டு அலசி, பல வருட தொழிற்பாடுகளினூடாக நன்னீராக மாற்றுதல்.

இதற்கு உதவும் திட்டங்கள்:

1. வடமராட்சி ஏரி கடலில் கலக்கும் இடமான தொண்டை மானாற்றில் குறுக்கணை கட்டி கதவுகள் பொருத்துதல்.

நோக்கம்: கடல்நீர் உள் நுழையவிடாது தடுத்தல், மேலதிக நீரை வெளியேற்றல்

2. ஆனையிறவு ஏரி கடலுடன் தொடர்புறும் சுண்டிக்குளத்தில் ஓர் உயர்வரம்பும், அதன் ஒரு பகுதியில் நீர் மேல்வாரியாக வழிந்து செல்லும் தாம்போதியும் அமைத்தல்.

நோக்கம்: மேலே சொல்லப் பட்டது போலவே

3. வடமராட்சி, ஆனையிறவு ஏரிகளை ஒரு கால்வாயால் இணைத்தல்.

நோக்கம்: பயிர்ச்செய்கைப் பயன்பாடு

4. உப்பாறு, ஏரியின் குறுக்கே அரியாலையில் அணைகட்டி கதவுகள் பொருத்துவது.

நோக்கம்: கடல்நீர் உள் நுழையவிடாது தடுத்தல், மேலதிக நீரை வெளியேற்றல்.

5. உப்பாறு, வடமராட்சி ஏரிக ளைப் பிரித்து வரம்பு அமைத்தல்.

6. உப்பாறு, செம்மணி உப்பள நெல்வயல்களுக்கிடையில் வரம்பு அமைப்பது.

நோக்கம்: பயிர்ச்செய்கை நிலங்களில் உவர்நீர் ஊடுருவுவதை தடுத்தல்.

இத்திட்டம் செவ்வனே நிறைவேற்றப்பட்டிருப்பின்

பொதுமக்களின் நன்னீர்த் தேவை தீர்ந்திருக்கும்.

திட்டம் அறிமுகமான காலத் தில், இதற்கான அமைப்புச் செலவு குறைவாக இருந்திருக்கும்.

விவசாய நிலப்பரப்பு, விவசாய உற்பத்தி என்பன அதிகரிக்கும்.

நன்னீர் மீன்வளர்ப்பு போன்ற உபயோகமான திட்டங்கள் வளர்ந்தி ருக்கும்.

மேலதிகமாக, யாழ். குடாநாடு என்றும் பசுமையாக இருந்திருக்கும்.

தமது அரசியல் ஆதாயங்களுக் காகவும், பாராளுமன்ற பதவியைக் காப்பாற்றிக்கொள்ளவும், இனத்தின் மானத்தையே விற்கத் தயங்காத தமிழ் அரசியல்வாதிகள் இத்திட் டத்தை கிடப்பில் போட்டதை நாம் கசப்புடன் சீரணிக்கவேண்டியுள் ளோம்.

எமது தேசம் தற்சார்பு பொரு ளாதாரத்தை நோக்கி நடைபோடும் இவ்வேளையில் அதன் வளர்ச்சிக்கு வழிகோலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் யாழ். கடனீரேரித் திட்டத்தை மீளாய் வுக்குட்படுத்தி அதன் சாத்தியப் பாடுகளை அலசி வருகிறது. இதற்கு தமிழீழத்தின் பலதரப்பட்ட அறிவு ஜீவுகளின், தொழில்நுட்பவியலாள ரின் ஒத்துழைப்பும் பெறப்பட்டுள் ளது. எமது வருங்கால சந்ததியி னரின் வளமான இருப்புக்கு வழிகோலும் இத்திட்டத்திற்கு எமது உணர்வுபூர்வமான பங்களிப்பால் உயிர்கொடுப்போம். விழுந்த எமது தேசம் எழுந்து, நிமிர்ந்த நடைபோட எல்லா வழிகளிலும் உதவுவோம்.

தா. விவேகானந்தன்

## நில நீர்த்தேக்க அளவை அதிகரித்தல்

**மழையே எமது முக்கிய நீர் மூலம். யாழ். குடாநாட்டின் அகலம் குறைவானபடியாலும் சமாந்தர நிலப்பரப்பை கொண்டிருக்கிறபடி யாலும் மழைநீர் விரைந்து கடலிற்குள் வடிந்துவிடுகிறது.**

**எமக்குச் சாதகமான ஒரு விடயம், சுண்ணக்கற்பாறைகள் மழை நீர் தேங்கி நிற்க உதவுகிறது என்பதே. எனவே பெய்யும் மழைநீரை நிலத்துட் செலுத்த வழிவகுக்கவேண்டும்.**

**எடுக்கக்கூடிய சில நடவடிக்கைகள்.**

**வழிந்தோடும் மழைநீரை உட் செலுத்துதல்**

1. **பெருவாய்க்கால்கள் அமைக்கலாம்.**
2. **பழைய குளங்கள், கேணிகளை ஆழமாக்கலாம்.**
3. **புதிய குளங்கள் அமைக்கலாம். (உ.ம்: காங்கேசன்துறை சீமெந்து ஆலையின் கல் அகழ்ந்த பகுதிகள்.**
4. **பயிரிடப்படா நிலங்களை மழை காலங்களில் உழுதுவிடல் மூலம் நீர் கீழ்வடிதலைக் கூட்டலாம்.**
5. **புதிய வீடுகள் அமைக்கும் போது மழைநீர் சேகரிக்கும் தொட்டிக ளுடன் அமைக்கலாம்.**

**கடல் நீரேரிகளை நன்னீராக்கல்,**

**உவர்நீர்க் கிணறுகளை ஆழமாக்கல்,**

**மரங்களை நடுதல் மூலம் நீர் ஆவியாகும் வீதத்தைக் குறைத்தல்,**

**குடாநாட்டைப் போலவே கடல் மட்டத்திலிருந்து உயரம் குறைவான ஒல்லாந்து நாட்டின் போல்டர் முறை ஏரிப்பாசன முறைகளை கவனத்தி லெடுத்தல் என்பனவாகும்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இது போராடும் பூமி... புலிகளின் காலம்.... பிரபாகரன் வழிகாட்டி!

இன்றும் எங்கள் வானத்தில்
வெள்ளிநிலவு பாலை அள்ளித்தான்
சொரிகிறது.
விண்மீன்கள் கண்தூங்கவில்லை.
இலுப்பைமரம் பூத்துக்கொட்டுகிறது.
ஆழக்கிணறேதும் ஊற்றடைத்துப்
போகவில்லை.
குண்டும் குழியுமான பாதையெனிலும்
இன்றும் பயணம் நடக்கிறது.
இது தமிழீழம்.
எல்லாம் நடக்கும்.
விஜேதுங்காவுக்கு ஒரு வினா
உன்னால் முடியுமா தம்பி?
எங்களுக்கு வித்தே வேண்டாம்.
நாங்கள் வேரிலிருந்தே முளைவிடும் சாதி.
எங்களை கூட்டிக்குவித்து தீயிடு
மறுநாள் சாம்பலிலிருந்து பிறப்போம்.
வெட்டிச் சரித்து புதைத்திடு
மூன்றாம் நாள் எங்கள் முகம் தெரியும்.
இது தமிழச்சாதி.
இங்கே
குண்டு சுமந்து வானூர்தி வட்டமிடும்.
குழிகள் தேடி எவரும் ஓடுவதில்லை.
போட்டு விட்டு "புக்காரா" போகும்
புழுதியைத் தட்டிவிட்டு
அந்த இடத்திலேயே மீண்டும் பாய்விரிப்போம்.
சிதறிப் போன சுவரின் கற்களை எடுத்தே
அடுப்பு மூட்டி சமையல் தொடங்குவோம்.
விஜேதுங்கா!
என்னடா பொடியா செய்யப் போகிறாய்?
இது தமிழச்சாதி.
தீக்குளித்தும் தோல்கருகாச் சாதி.
கண்களினால் சுவாசித்து
மூக்கினால் பார்க்கும் வித்தியாசமானவர்கள்.
மலைகள் இல்லையென்று நாங்கள்
தளரவில்லை.
ஆறுகளில்லை என்று அந்தரித்துப்
போகவில்லை.
ஆழக் கிணறு வெட்டி நீரள்ளிக்
குடிக்கின்றோம்.
ஆக மூன்று மாதங்களே இங்கு மழை
பொழியும்.
என்றாலும் பச்சை நிறத்தில்தான்
எங்கள் மண் பாவாடை கட்டியுள்ளது.

## உலைக்களம்

**வியாசன்**

இது தமிழச்சாதி.
தெருப்புழுதியில் கயிறு திரித்து
தேரிழுக்கும் சாதி.
அப்பு விஜேதுங்கா!
என்ன செய்யும் உத்தேசம்
படைகளை நடத்தி தடகளப் போட்டியா?
நல்லது; நாளை சந்திப்போம்.
வெற்றிக் கம்பத்தைத் தொட்டபின்
வெள்ளிக் கிண்ணத்துடன் பேசுவோம்.
எதிரியை வாவென்று கடிதம் எழுதியாச்சு
தமிழனே! நீ என்ன செய்கின்றாய்.
பூச்செடிகளுக்கு முள்ளும்
பறவைகளுக்கு சொண்டும்
மிருகங்களுக்குக் கொம்பும் ஏன்
கொடுக்கப்பட்டது?
போராட வழங்கிய போர்க்கருவிகள் அவை.
"அழிக்கவருபவனை அழித்துவிடு"
கீதையின் சாரமே இதுதான்.
நிமிர்ந்து நிற்பவையே நிலைக்கும்.
விழுந்து கிடப்பன யாவும் மிதிக்கப்படும்.
தலைநிமிர்ந்த பனைகளைத் தறிக்கக்கூடாது.
சட்டமே வந்துவிட்டது
ஆனால்...
முல்லைக்கொடியை மிதிக்கக்கூடாது என்று
ஏன் எவரும் குரலெழுப்பவில்லை?
காலில் விழுந்து கிடப்பவைகளை
எவரும் கணக்கெடுத்துக் கொள்வதில்லை.
அதனால் தான்.
மனிதர்களுக்கும் பொருந்தும்.
தமிழனே!
மணிமுடி தரித்த உன் தலையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெய்யிலுக்கு தொப்பி போடவும்
வெட்கப்படுகின்றாய்.
ஏழு குதிரைகள் பூட்டிய தேரில்
உலாவந்தவனே!
அச்சுமுறிந்த சைகிள்தானும் உன்னிடம்
இல்லையா?
ஊருக்கெல்லாம் துணி நெய்து
கொடுத்தவனே!
கோமணத்துண்டுக்கும் வழியற்றுப் போனாயா?
வாழும் வழிகள் ஆயிரம் சொன்னவனே!
ஆளும் உரிமையை மட்டும் யாரிடம்
கொடுத்தாய்?
கொம்பும், முரசும், பேரிகையும், எங்கே?
கவசமும், வேலும், கைவாளும் எங்கே?
இவற்றையெல்லாம் எறிந்துவிட்டு
அன்னதானமடத்தில் என்னடா செய்கிறாய்?
இந்த மண்ணில் உனக்கொரு வரலாறு
வேண்டும்.
இருந்தாய், வாழ்ந்தாய் என்பதற்கு
அடையாளம் வேண்டும்.
உன் தலைமுறைக்கு ஒரு சரித்திரம்
இருக்கட்டும்.
உயிர் என்ன உயிர்
அதைக் காட்டு பார்க்கலாம்.
உருவமற்ற ஒன்றுக்காக ஏன்
அச்சப்படுகின்றாய்.
எத்தனை காலம் வாழ்ந்தாய் என்பதில்
பெருமை கிடையாது.
எப்படி வாழ்ந்தாய் என்பதே மகிமைக்குரியது.
குறவணன் புழுவும், கும்புடு பூச்சியும் கூட
பூமியில் வாழ்கின்றன.
யார்தான் கணக்கில் எடுத்தார்கள்?
போருக்கு வாவென்று
எதிரிக்கு கடிதம் போட்டாச்சு.
நீ புறப்படு.
பீளைசாறிய கண்களைத் திறந்துபார்.
பாயைச் சுருட்டி அசைவிலே போடு.
தாயிடம் விடை பெறு
உன் தங்கை எங்கே?
உனக்குமுன் அவள் களத்துக்குப்
போய்விட்டாள்.
வெளியே பார் வெயில் அடிக்கிறது.
இது போராடும் பூமி....
புலிகளின் காலம்....
பிரபாகரன் வழிகாட்டி!




## புலம் பெயர்ந்த நண்பனுக்கு!

மயிர்க்கொட்டிகளின்
உயிரைக் கருக்கும் - மானுடம்
வண்ணத்துப் பூச்சிகளின்
அழகை ரசிக்க ஏங்குவது
வெறும் பம்மாத்து!

மரங்களில் உயிப்பு இருக்கும் வரைதான்
வேர்களுக்கு மதிப்பிருக்கும்.
மரங்கள் உயிர்ப்பு இழந்தால்
வேர்கள் வெறும் விறகுகள்தான்.

கண்கள் இரண்டு என்றாலும்
காட்சி ஒன்றாக.....
செவிகள் இரண்டு என்றாலும்
செய்தி ஒன்றாக.....
கைகள் இரண்டு என்றாலும்
ஆற்றும் கருமம் ஒன்றாக.....
பாதம் இரண்டு என்றாலும்
பாதை ஒன்றாக.....
இருக்கும் வரையில்தான்
தலைக்கு மதிப்பிருக்கும்.

குருடோ செவிடோ
அவள் என் தாய்
பாலைநிலமோ
பொட்டல் வெளியோ
பற்றைக் காடுகளோ
வரண்ட செம்மண்ணோ.....
அது என் தாயகம்
அதுவே மகிமை மிக்கது.

- இளையவன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# அட்டதிக்கும் அதிரும் ஒருவெடி

ஒரேயொரு வெடி தான்,
அட்டதிக்கும் அதிர்ந்து குலுங்கும்.
சரித்திரத்தைத் தலைகீழாக்கி விட்டு,
சந்தனமேனி காற்றில் கரையும்.
உலகம் ஒருதரம் புருவம் உயர்த்தும்.
வார்த்தை வலைக்குள்ளே சிக்காத
தற்கொடை,
எவருக்கும் தெரியாமல் உறங்கும்.
வழியனுப்பி வைத்த விழிகள் கலங்கும்
என்றாலும்,
கண்ணீர்க்கோடு கன்னத்தில் இருக்காது.
சாவுக்குத் தேதி குறித்து,
நேரம் கணித்து,
இலக்கு நோக்கி நகர எவரால் முடியும்?

வாழ்வு வருடங்களால் மட்டும்
கணிக்கப்படுவதில்லை.
சங்கை பெறுகின்ற சாவும்
வாழ்வாகிப் போகும்.
ஜூலை ஐந்தாம் தேதி
வருடத்தில் வரும் ஒரு நாளல்ல...
நெல்லியடியில் மில்லர் தொடக்கிய
புது வரலாற்றின் பிறந்தநாள்;
தமிழருக்கு நம்பிக்கை மொட்டவிழ்ந்து
விடுதலை வாசம் வீசத் தொடங்கிய
நாள்;
ஊழிக்கூத்தின் அரங்கேற்ற நாள்;
ஆம்...
அது, கரும்புலிகள் நாள்!

- புதுவை இரத்தினதுரை -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காற்றில் ஓர் கானம்

என்னுள்,
கனவிருந்தது, கற்பனையிருந்தது.
அன்னையின் அணைப்பில்
சுகம் காணும்
ஆசையிருந்தது.
தந்தையுடன் அமர்ந்து
பழங்கதை கேட்கும்
ஆவலிருந்தது.

இருந்தும்,
சுதந்திரமாய் சுற்றிவர
உனக்கென நாடில்லை
தமிழீழம் இல்லை?
தலைவன் சொன்னான்
புரிந்தது....

அன்றுமுதல்,
தோட்டாக்களின் தோளில்
மாலையாகின
துப்பாக்கி எந்தன்
கைபற்றின.
கனவுகள் கலைத்து
கரும்புலியானேன்
எதிரிகள்மடிய
மனித வெடிகுண்டானேன்.

இன்று,
காற்றில் கலந்து
கானமிசைக்கின்றேன்.
கல்லறையிருந்தது
கவிதை பாடுகின்றேன்.
நிஜக் குண்டு
போதும் என்றால்
மனித வெடிகுண்டு
ஏன் எமக்கு?

நான்,
உங்களிடம் கேட்பது
பலியல்ல, பங்களிப்பு.

இராஜ் சிவலிங்கம்
ஜேர்மனி.

அக்கினிக் குஞ்சு மில்லர் -
அவனின் தாய்
வீசும் மண்ணின் காற்றோடும்,
எழுகின்ற எம் மண்ணின்
மனிதர்களின் உணர்வுகளோடும்
கலந்துவிட்ட கால நெருப்புக்கு
பூக்கொண்டிழைத்த மாலை சாற்றிய போது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# லெப். கேணல் நவநீதன்

# ஒரு உண்மை வீரனின் கதை

நவநீதனைப்பற்றிச் சொல்வதானால் சண்டையில்தான் ஆரம்பிக்கவேண்டும்; சண்டைகளால் தொடரவேண்டும்; சண்டையொன்றில் முடிக்கவேண்டும். அவனது சண்டைகளை விளக்குவதன் மூலம்தான் அவனை வர்ணிக்க முடியும். அந்தளவுக்கு சண்டைகளிலேயே அவனது வாழ்வு உருண்டோடியது; சண்டைகளிலேயே அவன் தூங்கி வழிந்தான்.

பழம்பாசியில் ஒரு சண்டை.

பால்ராஜ் அவர்கள் வன்னிக்குத் தளபதியாக இருந்தபோது, அவரது பாதுகாப்பு அணிக்குப் பொறுப்பாக இருந்தவன் நவநீதன்தான்.

தவிர்க்கமுடியாத ஒரு பயணம்; தளபதி போகவேண்டியிருந்தது. அரசியலுக்குப் பொறுப்பாக இருந்த சந்திரனும் கூட போயே ஆகவேண்டும்; நோக்கம் முக்கியமானது.

அது இந்தியப்படைக் காலம்; இடறுப்படும் இடங்களிலெல்லாம் அவர்கள் நகர்ந்துகொண்டிருந்த ஒரு சூழ்நிலை. மிக நெருக்கடியான நேரம்; இடமும் அப்படித்தான்; மைய இலக்குவைத்து இந்தியர்கள் படை நடத்திக்கொண்டிருந்த மணலாற்றின் வேலியோடு-

குறைந்தளவு வீரர்களையே கொண்டு நகர்ந்துகொண்டிருந்த எம் அணிக்கு, திசையறி கருவி வழிகாட்டிக் கொண்டிருந்தது. தண்ணிமுறிப்பு வீதியைக் கடந்து பழம்பாசிக் காட்டுக்குள் இறங்கியபோது- வழமைபோல முதலாவது ஆளாகச் சென்றுகொண்டிருந்த நவநீதன், திடீரென நடைதயங்கி, 'அலேட் பொசிசனில்' வைத்திருந்த 'எம்-16' ஐ உயர்த்தி, மூக்கைச் சுழித்துக்கொண்டு திரும்பினான்.

அநேகமான தடவைகளில் இந்தியர்களின் அரவம் காட்டி, எம்மை அரட்டிவிடுகிற அந்த 'மணம்' சற்றுக்கூடுதலாகவே சுவாசத்தோடு கலந்தது.

காட்டுப்பாதை; இடைக்கிடை நாம் பயன்படுத்துகின்ற தடம்தான்- அவதானித்திருக்கக்கூடிய எதிரி இரை தேடி வந்திருந்தான். "இந்தியப்படையின் விசேட அதிரடிக் கொமாண்டோக்கள்" தடயங்களை வைத்து புலிகள் ஊகித்துக்கொண்டனர். எங்கள் பாதையின் ஏதோ ஓர் இடத்தில் நிச்சயமாக எதிரி நிலை எடுத்திருப்பான்; நம்பிக்கை உறுதியாக இருந்தது.

கைவிடமுடியாத பயணம்; தேவை பெரியது. இது ஒருபுறம் போக, 'அடிக்கப்போகிறவனுக்கு திருப்பி அடித்தே ஆகவேண்டும்' என்ற ஆவேசமும் எழுந்தது. நவநீதனே முனைப்பாக நின்றான்.

தளபதி ஒழுங்கமைத்தார்; அணி இரண்டாக்கப்பட்டது. பிரதான குழுவிலிருந்து ஒரு குறிப்பிட்ட தூரத்தில் துணைக்குழு நகரும்.

ஒரு பதுங்கித் தாக்குதலானது பலவகைப்பட்டதாக அமையும். வலதுபுறமிருந்து வரலாம்; இடதுபுறமிருந்து வரலாம்; நேரெதிலிருந்து வரலாம். சிலசமயம், வலது அல்லது இடது புறத்தோடு எதிர்ப்பக்கத்திலிருந்தும் "L" வடிவத்தில் வரலாம். இவற்றில் எது நடந்தாலும் எதிர்கொள்ளக்கூடியவாறு திட்டமிடப்பட்டது. பிரதான குழு தாக்கு தலைச் சந்திக்க, துணைக்குழு காட்டுக்குள் இறங்கி, வளைத்து, எதிரியை நாரிப்பக்கத்தால் தாக்க வேண்டும். நவநீதன்தான் கொமாண்டர்.

அணி அசையத்துவங்கியது. வழமைபோல நவநீதன் முன்னுக்கு.

அது அவனுக்கே உரிய துணிவு. கத்திக்கொண்டு பறந்த ஒரு காட்டுக் குருவியைத் தவிர நிசப்தம்தான் முழு ஆதிக்கத்தையும் செலுத்தியிருந்தது. 'மயான அமைதி'யை விடப் பயங்கரமானது 'வன அமைதி'. எதிர்பார்க்கும் சண்டை; எதிர்ப்படப்போகும் நேரத்தை எதிர்கொள்ளத் துணிந்த மனது. அதிகரிக்கும் இதயத் துடிப்போடு கலந்த ஆக்ரோசம். சுடத் தயாரான துப்பாக்கிகளின் குழல்வாய்கள் நிமிர்த்தி- பாயத்தயாரான புலிகளின் பதுங்கல் நகர்வு. சருகு நெரிபடும் சத்தத்தோடு மட்டும், அடிமேல் அடிவைத்து அணி நகர்ந்து கொண்டு....

திடீரென, இயல்பு மாறிப் போயிருந்தது காடு; இயற்கை குலைந்து போயிருந்தது வனம். சூரியனை நோக்கி வளரவேண்டிய மரக்கிளைகள் சில, வளைந்து, பூமியை நோக்கி இருந்தன. இருக்கக் கூடாத இடங்களில், சருகுகள் கூடுதலாய்.

சருகுகளின் மறைப்பினூடு மின்னுகிற எல். எம். ஜி. குழல்; இலை குழைகளின் உருமறைப்பிற்குள் வெட்டி வெட்டி முழிக்கும் கண்கள்; மெல்ல அசையும் 'ஹெல்மெட்'டுகள்.

கண்டுகொண்ட நவநீதன் நிதானிக்க, பார்த்துவிட்ட தளபதி சைகைசெய்ய, தாசனின் துணைக் குழு காட்டுக்குள் இறங்க- மூர்க்கத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனமான சண்டையைத் தொடங்கி வைத்தான் நவநீதன். எட்டித் தொடும் தூரத்திற்குள் இயந்திரத் துப்பாக்கிகளின் குமுறல்; எம்-16 சுடுகுழல் சிவக்க, எதிரிகளின் உச்சந் தலையைக் குறிவைத்தான் அந்த வீரன். இந்தியக் கொமாண்டோக் களின் முன்வரிசை அணியை, பதுங்கிய இடத்திலேயே அவன் படுக்கவைத்தது; பிரமிப்பூட்டுகிற வேகம். முதலாவது ஆளைச் சுட்டதிலிருந்து, சண்டையை



நடாத்தி, துரத்தித் துரத்தி அடித்து, ஆயுதங்களை எடுத்து முடித்து வைத்து- எல்லாமே அவன்தான்.

'அதிரடியை முறியடித்து அதிர டித்தல்' -படையில் விஞ்ஞானத்தில் இதற்கு `Counter Ambush' என்று பெயர். எங்கள் போராட்ட வரலாற்றில் இது ஒரு முக்கிய சம்பவம். தளபதி பால்ராஜின் நெறிப்படுத்தலில் செய்வித்து முடித்தவன் நவநீதன்.

ஆனால், தினேசுக்கு இதயத்துக் குப் பக்கத்தில் வெடிகொழுவிக் கொண்டது. பீறிட்டுப் பாய்ந்த இரத்தத்திற்கு சாரத்தைக் கிழித்துக் கட்டுப்போட்டு, தடிமுறித்து 'ஸ்ரெச்சர்' கட்டித் தூக்க முற்பட்ட போதும், வேதனையின் முனகலோடு தினேஸ் மறுத்துவிட்டான்.

ஆசையோடு தளபதியின் கன்னங் களைத் தடவினான். கூடவந்த தோழர்களின் நிலைமைகளை விசா ரித்தான். பெற்றெடுத்த ஆயுதங்க ளைத் தொட்டுப்பார்த்துப் பூரித் தான்; எங்கள் 'டடி' முகாமில்- மற்றத் தோழர்களுக்குப் பக்கத்தில் தான் தன்னையும் புதைக்குமாறு வேண்டியவன், முனகி, முனகி, மெல்ல அடங்கி எல்லோரையும் பார்த்து விழிகளை மூடியபோது, வெற்றியின் ஆயுதங்களைக்காட்டி அதற்கு வித்தாகிப் போனவனை வழியனுப்பிவைத்துவிட்டு, நவநீதன் இறுகிப்போய் நின்றான்.

வரலாற்றில் பொறிக்கப்பட்ட மாங்குளம் முகாம் தகர்ப்பு-

தமிழீழத்தின் நெஞ்சத்தின் மீது குந்தியிருந்த பக்கத்து நாட்டுப் படைகளைக் குடியெழுப்ப நிகழ்த் தப்பட்ட தாக்குதல். இரண்டாவது தடவையாகவும்- நிச்சயமாக இறுதி யானது எனவும் முடிவுசெய்யப் பட்ட சமர்.

முதல்நாள்- நள்ளிரவுக்குச் சற்று முன்னர் ஆரம்பித்த சண்டை, மறுநாள் விடிந்து மதியமாகியும் நடந்துகொண்டிருந்தது. தென்முனை முற்றாகவே எதிரிக்குச் சாதகமான பிரதேசம். அது வயல்வெளி; அங்கு அவனது கைதான் ஓங்கியது. கூடுதலான இழப்பைச் சந்தித்ததால், எங்கள் தாக்குதலணி காலையி லேயே பின்னால் எடுக்கப்பட்டு விட்டது. தென்முனை வழியான தாக்குதல் நிறுத்தப்பட்டுவிட்டது.

வடமுனையில் தனது முழுச் சக்தியையம் பிரயோகித்து எதிரி தடுத்து நின்றும், அவனது அரண் களையும், மினிமுகாம்களையும் உடைத்துக்கொண்டு முன்னேறிய புலிகளின் அணி, பிரதான முகா மிற்கு அருகில், 'ஹெலி' இறங்கு தளத்தில்- கடும் எதிர்ப்புக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. எதிரி, தனது பலமான அரணொான் றிலிருந்து மூர்க்கத்தனமாக மோதி னான். தனது முழுப் பலத்தையும் திரட்டிச் சண்டையிட்டான்.

ஏனெனில் 'ஹெலி' இறங்கு தளம் யாருடைய கைக்குப் போகின்றதோ அந்தப்பக்கம் வெல் லும். அவனிடம் போய்விட்டால் உதவி எடுத்துப் புத்துயிர் பெற்று விடுவான். எங்களிடம் வீழ்ந்து விட்டால் தனித்துவிடப்பட்டுக் குற்றுயிர் ஆகிவிடுவான். எனவே இறுதி முயற்சியாக மோதினான். உயிர் பிரிகிற நேரத்தில் ஒரு அசுரபலம் வருமாமே, அந்தப் பலம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டு தாக்கினான்.

சண்டை உக்கிரமடைய அடைய, எங்கள் தாக்குதலணி பலவீனப்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால் நாங்கள் கைவிடமுடியாது. ஹெலித்தளத்தை விட்டுச் சற்றுப் பின்னால் வந்தால்கூட, நாங்கள் தோல்வியடைந்ததுக்குச் சமம். எதிரி நிலத்தோடு மட்டுமே மோதினான். நாங்களோ வானத்தோடும் மோத வேண்டியிருந்தது. நேரம் நீள நீள எங்கள் கை சோர்ந்துகொண்டு போனது. அவனா? நாங்களா? என்ற நிலை. சண்டையை நடத்திக் கொண்டிருந்த தளபதி, நிலைமை யின் இக்கட்டைப் பிரதான கட்டளையகத்துக்குச் சொல்லிக் கொண்டேயிருந்தான். கைவிட முடியாது; ஏற்கனவே இந்த முகாமை அழிப்பதற்காக நாங்கள் செலுத்திவிட்ட விலை பெறுமதியானது. திரும்பவும் ஒரு தடவை அற்புதமான உயிர்களைக் கொடுக்க முடியாது. துவங்கியதோடு அடித்துத் துடைத்து முடித்துவிடவேண்டும்; இனி விட இயலாது.

கடைசி வழிமுறை ஒன்றைக் கையாள கட்டளைப்பீடம் முடிவு செய்தது. கைவசம் வைத்திருந்த, தேர்ச்சிபெற்ற வீரர்களைக்கொண்ட மேலதிக தாக்குதலணி ஒன்றை நுட்பமான ஒரு தந்திரோபாயத்தோடு பிரயோகித்து ஒரு இறுதி எத்தனிப்பைச் செய்வதே அது. அவனா? நாங்களா? என்ற எதிர்பார்ப்புக்கு விடை தரப்போகும் அடி; அந்த வரலாற்றுத் தாக்குதலின் வெற்றியை நிர்ணயிக்கப் போகிற அதிரடி. இதன் முக்கியத்துவம் முக்கியமானது.

ஹெலித்தளத்தில் சண்டையிடும் கிழக்குத் திசை வழியாக மேலால் மேவி வளைத்து, அவனை வலது பக்கத்தால் நெருங்கி, அறைந்து நொருக்கவேண்டும். வான் ஆதிக்கத்தை தன் கையில் வைத்திருப்பவனின் கண்களுக்கு மண் தூவி- நில ஆதிக்கத்தைத் தக்கவைத்துக் கொள்ளப் போரிடுகிறவனின் பார்வையில் பட்டுவிடாமல்- அவனை அண்மிப்பது என்பது, அந்த உச்சி வெயில் பகலில் ஒரு இமாலயக் காரியம். எதிரியை எதிர்கொள்ளும் நேரம்வரை, தன்னைச் சேதப்பட்டு விடாமல் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அந்த அணிக்கு உண்டு. தோல்வியைத் தழுவும் நிலையிலிருந்து அந்தத் தாக்குதலை மீட்க வேண்டிய பொறுப்பும் அதற்குத்தான் உண்டு. எனவே அந்தச் சிக்கலான சூழ்நிலையிலும் சரியான நிலையில் நகர்த்திச்சென்று, சரியான நேரத்தில்- சரியான இடத்தில்- தாக்குதலைத் தொடுத்து, அந்த அணியை வழிநடாத்தக்கூடிய திறமை, அதன் கொமாண்டருக்கு இருக்கவேண்டும். அணியின் தளபதியாக நகரத்துவங்கினான் நவநீதன்.

தாக்கிக்கொண்டிருந்த எமதணி தளர்ந்திகொண்டிருந்த வேளை, அனுப்பிவைத்த தளபதி காத்திருந்த நேரம், என்ன முடிவோ என நாங்கள் ஏங்கிநின்ற பொழுது- மூர்க்கங்கொண்ட புலிகளாய்ப் பாய்ந்தனர் வீரர்கள். ஆக்ரோசமான தாக்குதல், தடைகள் உடைந்து, தானை சிதைந்து, பகைவன் சின்னாபின்னமாகிப் போக- புதிய தெம்புடனும், புதிய வேகத்துடனும் பிரதான முகாமைக் குறிவைத்தனர் புலிகள்.

எங்கள் கதாநாயகனுக்கு வெடி; இடுப்பு எலும்பை நொருக்கிச் சென்றுவிட்டது சன்னம். காலுக்கு மணல்மூட்டை கட்டித் தொங்க விட்டு, யாழ்ப்பாணம் மருத்துவமனையில் படுத்திருந்து, "இந்தச் சுமையின் வேதனையை விட, மாங்குளத்தை வென்றதே மனதுக்கு மகிழ்வு" என்றவன், 7 மாதங்களுக்





# போர் உலா

கப்டன் மலரவன் எழுதிய 'போர் உலா' உயிர்ப்பும் துடிப்பும் மிக்க உன்னத காவியம். இன்னது என்று பிரித்தறிய முடியாத் துயர் வழிய விழிகள் நனையும். அவன் அணிந்திருந்த சீருடையை அணிந்து போர்க்களத்தில் நின்ற மண்ணின் காதலன் அவனை நிழலாய் இருத்திக்கொண்டு வெளிவந்திருக்கிறது. புலம் பெயர்ந்து எம்முள் நிழலாய் நின்று நெரும் - நனைவிடை தோயும் - வாழ்விடை வந்து நெருப்பைத் தீனியிடும்.

எங்கள் பூமியின் மலர் அவன். எங்களுக்காய் வீதியில் திரிந்து, காடுகளுள் அலைந்து, கடலுக்குள் மூழ்கி காற்று வெளியிடை நின்று கூவி - விடுதலை வேண்டி எழுந்த மானுடன்.

அந்த மாவீரன் போர் உலா வந்தான். போர் என்றால் பயம் வருகிறது. எங்கே அதற்குள் அழிந்து போய்விடக் கூடுமோ என்று மனது அஞ்சுகிறது. ஆனால் கப்டன் மலரவனும் அவனையொத்த வீரர்களும் உலா வந்திருக்கிறார்கள். அந்த உன்னத வீரர் உலா ஒரு காவியமாக வெளிவந்து இருக்கிறது.

புலம் பெயர்ந்த மண்ணின் அவலங்களால் நலியும் எமக்கு மண்ணின் மீது புதிய காதல் கொடிவிட்டு இறங்கும். இரவல் வாழ்க்கையில் சுற்றிச் சுழன்று தொலையும் வாழ்வுக்கு ஒளி பாய்ச்சும் இந்நூலை விடுதலைப் புலிகளின் சகல கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குப் பிறகு எழுந்து நடக்கத்துவங்கிய போது, இடதுகாலில் ஒரு அங்குலம் கட்டையாகிப் போயிருந்தது.

முல்லைத்தீவில் ஒரு படையெடுப்பு.

நவநீதன் அப்போது முல்லைத் தீவு மாவட்டத்திற்குத் தளபதி. லெப்ரினன்ட் கேணல் நரேசுக்குத் துணையாய் நின்று, நிர்வாக வேலைகளை ஒழுங்கமைத்துக் கொண்டிருந்தான்.

தாக்குதல் நடவடிக்கை ஒன்றுக் காக தளபதி தீபனும், நரேசும் எமது படையணிகளை எடுத்து வேறு ஒரு இடத்திற்குக் கொண்டு சென்றிருந்த வேளை, 'சத்பல' என்று பெயர் சூட்டிக்கொண்டு முல்லைத்தீவிலி ருந்து படையெடுத்தான் எதிரி. ஆயிரக்கணக்கான துருப்புக்கள், யுத்த வானூர்திகள் பலம் சேர்க்க பெருமெடுப்பில் முன்னேறத் துவங் கினர்.

ஆனால் காவலரணில் இருந் ததோ சண்டைக்குத் தேர்ச்சிபெறாத போராளிகள். சண்டை செய்யக் கூடியவர்கள் என்று எவருமே இல்லை. இருந்தவர்களைத்தான் பொறுக்கி எடுத்து அனுப்பியாகி விட்டதே. இருப்பவர்கள் சண் டைக்கு அனுபவப்படாதவர்கள்; புதியவர்கள்.

அவர்களை வைத்துக்கொண்டு. எதிரி முகாமின் வாசலிலேயே களத்தைத் திறந்தான் நவநீதன்.

ஒரு முழுநாள்- 'நவநீதன் சண்டையைச் செய்வித்தான்' என்பதை விட 'நவநீதன் சண்டை செய்தான்' என்றுதான் சொல்ல வேண்டும். திரண்டு நகர்ந்த அந்நியச் சேனையை, திறமையுட னும், துணிவுடனும் தடுத்துத் தாமதப்படுத்தினான் அந்தப் போர் வீரன். மறுநாள் எமது படைப் பிரிவுகள் வந்துசேருகின்ற போது, தந்திரமாகச் சண்டையிட்டு, திரண்டு நகர்ந்த பகைவர்களை அவன் தடுமாற வைத்திருந்தான். அந்த முதல்நாள் சண்டையில் தங்களில் 6 பேர் கொல்லப் பட்டதாக சிறிலங்கா வானொலி அறிவித்தது.

"இனியாவது என்ர பொடியனை வீட்டை விடுவியளோ?" என்று கேட்காத, கேட்க நினையாத- "எப்ப தம்பி எங்களுக்குச் சுதந்திரம் எடுத்துத் தரப்போறியள்?" என்று மட்டுமே மனதாரவே ஆதங்கப்படுகின்ற- ஒரு தமிழன்னையின் மடியில், அந்தப் பூ முகையவிழ்ந்தது. அது 1969ஆம் ஆண்டு நொவம்பர் 12ம் நாள். திருலோகநாதன் என்று பெயர் சூட்டினார்கள்.

"குவா... குவா..!" சத்தத்தோடு, அந்தக் குழந்தை தவழ்ந்து, உருண்டு, மண்ணளைந்து, தத்தித் தடுமாறி எழுந்து நடக்கத் தொடங்கிய அந்த ஓலைக் குடிசையில், அவனுக்கு முன்னமே ஏழ்மை பிறந்துவிட்டது. நிரந்தரத் தொழில் இல்லை. நில புலங்கள் எதுவுமில்லை. இரண்டு நேரம் சாப்பிடக் கூட வழியில்லை; வறுமை.

கனகராயன்குளம் மகாவித்தியா லயத்தில் படித்துக்கொண்டிருந் தவன், 7ம் வகுப்போடு- குடும்பத்தின் ஏழ்மைச் சிலுவைக்குத் தோள் கொடுக்க, வீட்டில் நின்றுகொண் டான். இருந்தாற் போல் ஒருநாள்- திடீரென அப்பா தில்லையம்பலத் தார் மீளாத்துயில் கொண்டுவிட்ட போது, துன்பமும் ஏழ்மையும் சேர்ந்து அழுத்திய பெருஞ்சுமைக் குள் அந்தக் குடும்பம் சிக்குண்டது; வதங்கியது.

இத்தகைய- துயர்படிந்த ஒரு குடும்பப் பின்னணியிலிருந்து, அவன் போராட்டத்துக்கு வந்த போது, அவனுக்கு 16 வயது.

தளபதி பசீலனின் அரவணைப் பில் அந்தச் சின்னப் போராளி வளரத் துவங்கினான்.

அவனுக்குப் போர் ஆசானாகி நின்ற, அவனது போராட்ட வாழ்வின் ஆரம்பத்தை வழிப்படுத்தி விட்ட குரு, அவர்தான்.

துப்பாக்கிகள் தந்து, சிறந்த வீரர்களுக்கு நிகரானவனாகச் சுடப் பழக்கி, பயிற்சிகள் வழங்கி- அந்தச் சின்ன வயதிலேயே, நவனீதனுக்குள்

## சிறையிலிருக்கும் தோழிக்கு

உணர்வுகள் பொசுக்கப்பட்டவளாய்,
வெற்றுடலில் குருதிப் பிசுபிசுப்புடன்
நீ மயங்கிக் கிடக்கக் கூடும்.
தோழி!
ஒரே தாய்நாடு ஊட்டிய
பாலில்தான்
நீயும் நானும் ஜனித்து வளர்ந்தோம்.
வெறும் வார்த்தைகளுடனும்,
பேனா, தாள்களுடனும்,
அமர்ந்திருந்து,
நான் வெறிக்கும் நேரமெல்லாம்
எங்காவதொரு இருள் மூலையில்
பதுங்கிச் செல்லும் உன் காற்றடங்கள்.
இருட்டின் வீறிடலுக்குள்
நீ மௌனமாய் முன்னேறுவாய்.
"சீ பெட்டைக் கழுதை
வீட்டில் பூட்டிற்றிரு"
என்று அறிவுரை சொன்னவர்கள்
அடங்கியிருப்பார்கள்
உன் பாதுகாப்பினுள்.
இன்றும்
உன்னைச் சிறைப்படுத்த
முடிந்தவர்களால்
உன் ஆன்மாவைச்
சிறைப்படுத்த முடிந்திராது.
அடிகளில் சிதைந்தும்
தினம் பொங்குகின்ற உன் கண்கள்....
இங்கே நாமோ ·
சட்டங்களினுள்ளும் சேலைகளினுள்ளும்
சிறைப்பட்டுக் கிடக்கிறோம்.
இனியும் எப்படி
காலத்துக்கு நாங்கள் கட்டுப்படுவது?
கற்றுக் கொடு தோழி!
உன் மௌன பாஷைகளால்
கற்றுக் கொடு
போராடுவது எப்படியென்று!!

**— பவானி-**

*08-03-1994.-இல் நிகழ்ந்த அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் நடாத்தப்பட்ட இலக்கிய, ஓவியப் போட்டிகளில் இரண்டாம் பரிசுபெற்ற கவிதை.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மாபெரும் வீரத் தன்மைக்கு வித்திட்ட பெருமை, பசீலனையே சாரும்.

தளபதி பசீலனின் மெய்ப்பாது காவலனாக, 'எம் 16' உடன் கூடத்திரிந்த நாட்கள், அவனுக்குள் ஆழப்பதிந்த நினைவுகள்; அந்தக் காலத்தில் அவர் சொல்லித் தந்த சண்டை முறைகள், மறத்தலற்ற மனப்பாடங்கள்.

நவநீதன் பகைவரைச் சந்தித்த முதற்களம் என்று குறிப்பிடக் கூடியது, முந்திரிகைக்குளம் தாக்குதல்.

மணலாற்றில் சிங்களக் குடியேற்றத்துக்கு விழுந்த பலமான முதல் அடி அது. அந்தப் பெரு வெற்றியைப் பெற்றுத் தந்தவன் பசீலன். அப்போது- 'கென்ற்', 'டொலர்' பண்ணைகளில் மட்டுமே தொற்றியிருந்த அந்த விசக்கிருமிகள், பல்கிப் பெருகி மணலாற்றில் படரத் துவங்கிய பிரதான அசைவுப் பாதையை, பதவியாவிலிருந்து மேற்குக்கரை நோக்கி காட்டினூடு அமைத்துக் கொண்டிருந்த இராணுவ அணியே தாக்கப்பட்டது.

வியூகம் அமைத்துநின்று, தளபதி பசீலன் தாக்குதலை நடைத்திய போது- அவரது நிழலாக நின்று பொறி கக்கினான் நவநீதன். கொல்லப்பட்ட 20 வரையான படையினரில் சிலரது உடல்களில், அந்தச் சின்ன வீரனது துப்பாக்கி தான் கோலம் போட்டதாம்.... சண்டை முடிந்தபோது புலிகள் இயக்கத்தின் ஆயுத இருப்பில் 12, 'ரி56' கள் கூடியிருந்தன. சிங்களக் குடியேற்றம் தற்காலிகமாக நிறுத்தப் பட்டதுடன், அந்தப் பிரதானமான அசைவுப் பாதை நிரந்தரமாகவே கைவிடப்பட்டது.

இந்தியப் போர் ஆரம்பித்த போது- இந்தியப் படையின் 'புகழ் பெற்ற யாழ்ப்பாணச் சமரில்', கோப்பாய்ச் சண்டை எமது முல்லைத்தீவு மாவட்டப் படையணி யால் எதிர்கொள்ளப்பட்டது. தளபதி பசீலனின் அந்த அணியில் நவநீதனும் களத்தில் நின்றான்.

www.tamilarangam.net

# சீதனம் சிறையில்

## சீதன ஒழிப்புப் பிரச்சார நடவடிக்கை

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்"

என முழங்கிய கவி பாரதியின் சத்திய ஆவேசம் ஈழ மண்ணில் குடிபுகுந்து வருடங்கள் பல ஆகிவிட்டன. இன்று அதன் புதிய பரிமாணம் தேசத்தின் மூலை முடுக்குகளை எல்லாம் விழிக்க வைத்திருக்கிறது. ஆம். சீதனப் பேயை விரட்ட தமிழீழ மக்கள் உறுதியெடுத்துக்கொண்டனர்.

"உழைத்து வாழும் உயர்ந்த மனிதர்
விலைக்குத் தம்மை விற்றிடார்"

"சீதனம் என்பது சிறுமை
அந்தச் சிறுமையை ஒழித்திடல் பெருமை"

"ஆணுக்குப் பெண் நிகர்- பின்னர்
இடையில் ஏன் சீதனச் சுவர்"

"தங்கநகை மாடிமனை தேடாதே
நீ மாலையிடச் சீதனத்தைக் கேளாதே"

என்னும் சுலோகங்களும் பாதகைகளும் உயர்ந்துவிட்டன.

போராட்டம் என்பது வெறுமனே மண்மீட்பு மட்டுமல்ல, தடைகளை அகற்றி, சமூக, தனிமனித ஆளுமையை விடுதலையை நோக்கி வழிப்படுத்தலும் சேர்கையில்தான் அதன் பொருள் நிறைவுறும். அந்தவகையில் சீதனம் ஒரு சமூகத்தின் ஆளுமையைத் தகர்ப்பது; அந்தச் சீதனக் கொடுமையைத் தகர்ப்பது என்பது, விடுதலைக்கு உரம் சேர்ப்பது என்பதை உணர்ந்து தமிழீழத்தில் மாவட்ட, கோட்ட, வட்ட ரீதியாக சீதன ஒழிப்புப் பிரச்சாரசீதன ஒழிப்புப் பிரச்சார நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கோட்டத்தின் சகல வட்டங்களிலும் சீதன ஒழிப்புப் பிரச்சாரத்தினை அப்பகுதி மகளிர் அமைப்பினர், அரசியற்துறைப் பொறுப்பாளர்கள் முன்னின்று நடாத்துகின்றனர். வவுனியாக் கோட்டம், சேமமடு வட்டக் கிராமங்களில் சீதன ஒழிப்புப் பிரச்சாரம் கருத்தரங்குகள் மூலம் நடத்தப்படுகிறது. இத்துடன் "சீதன அம்புகள்" ஒளிப்பதிவு நாடாவும் மற்றும் வீதி நாடகங்களும் காண்பிக்கப்பட்டு வருகின்றன. முல்லை மாவட்ட விடுதலைப் புலிகளி அமைப்பினர் அங்கு சீதன ஒழிப்பு பிரச்சார நடவடிக்கைகளை தொடக்கியுள்ளனர். சீதன ஒழிப்பை வலியுறுத்தும் வாசகங்களைக் கொண்ட பதாகைகள் எங்கும் தொங்கவிடப்பட்டுள்ளன. பொதுமக்கள் பெருந்தொகையாகக் கலந்துகொண்டு தங்கள் அபிப்பிராயங்களை தெரிவித்து வருகின்றனர். 'சீதனம் என்னும் மாயையை ஒழிப்போம்' என்னும் வீதி நாடகம் கிராமங்கள் தோறும் இடம்பெறவுள்ளது. இந்தச்சீதன ஒழிப்புப் பிரச்சார நடவடிக்கையின் வெற்றி சமூக ஒடுக்குமுறைகளால் அடங்கிப்போன பெண்ணினத்தின் கைவிலங்குகளை விடுவிப்பின், நசிந்துபோன அதன் ஆன்ம பலம் மீண்டெழுந்து விடுதலைப் போரின் மிகப்பெரும் உந்துசக்தியாக உருமாறும். எமது இன்னல்கள் தீர்ந்து போகும் என்பது சர்வநிச்சயம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியர்களின் இரண்டு `B.M.P. ராங்' குகள் நொருக்கப்பட்டதுடன், அங்குலமும் அசையாமல் தடுத்து நிறுத்தப்பட்டதுடன், அந்த நாட் கணக்கான சண்டையில், சொல்லிக் காட்டக் கூடியளவு திறமையுடன் நவநீதன் போரிட்டான்.

கோப்பாயில் சண்டையை முடித்துக்கொண்டு திரும்பிய படை யணி, முல்லைத்தீவில் போர் அரங்கைத் திரைநீக்கம் செய்த போது-

துயரம்! கொடுந்துயரம்; முல்லைத்தீவில் ஒரு சண்டைக் களத்தில், மாபெரும் வீரன் பசிலன் வீழ்ந்துபோனான்; முல்லை மண் துடித்தது. அதன் மடியில் பிறந்த குழந்தை அவன். அந்த மண்ணின் வரலாற்றில் பொறிக்கப்பட்ட தளபதி அவன். நவநீதன் கலங்கி னான்; கதறினான். அவனால் தாங்கமுடியவில்லை.

அடிபட்ட நாகமாய் அலையத் துவங்கினர் புலிகள். பதிலடி கொடுக்க பகலிரவாய்த் திரிந்தவர் களிடம் வசமாகச் சிக்கியது ஒரு இந்திய அணி. பசிலனை எம்மிடமி ருந்து பிரித்தது இதே அணிதான் என்பது முக்கியமானது. தண்ணீ ரூற்று வித்தியானந்தாக் கல்லூரிக்குப் பின்னால், தளபதி பால்ராஜின் தலைமையில் எம் இரண்டு அணிகள். ஒன்றுக்கு கொமாண்டோ போர்க். அடுத்ததுக்கு நவநீதன். மூர்க்கத்தனமான சண்டை. நவநீத னின் நெஞ்சுக்குள் பசிலனண் ணனின் நினைவுகள் கனன்றன. பகைவர்களை நெருப்பெனச் சுட்டெரித்தான் அந்த வீரன். இந்தியரின் முதலாவது குழு தாக்கியழிக்கப்பட்ட பின்னர், மீட்கவந்த அடுத்த குழு தாக்கப் பட்டது. 25 பேரளவில் கொல்லப் பட்ட சண்டையில், கைப்பற்றப் பட்ட ஆயுதங்களுள் இரண்டு பிறண் எல். எம். ஜிகள்.

இந்தியர்கள் 'ஒப்பரேசன் செக் மேற்'றை நடாத்திக்கொண்டிருந் தார்கள்.

பெரும் போர்களைக்கண்ட, உலகின் 4வது பெரிய தரைப் படையின் 30,000 துருப்புக்கள் எமது விடுதலைப் போராட்டத்தின் மையக் கருவைக் கிள்ளயெறிய நகர்த்தப்பட்ட வரலாற்றுச்சமர்; பிரசித்திபெற்ற மணலாற்றுப் படை யெடுப்பு.

குமுழமுனை மலைமுகாம் என்ற இந்தியத் தளம்தான் 'செக்மேற்'றின் மையம்; கட்டளைப் பீடம். உயர் தளபதிகள் தங்கியிருந்து 'பிரபாகரனைக் கொல்லும்' போரை நெறிப்படுத்திய தலைமையகம். இந்த முகாமில் ஒரு தாக்குதலைச் செய்வதன் மூலம், 'செக்மேற்'றுக்கு ஒரு நெருக்கடியைக் கொடுக்கவும், இந்தியரின் கவனத்தை திசை திருப்பவும் திட்டமிடப்பட்டது. ஒரு புலர்வுப் பொழுதில், அந்த முகா மின் தலைவாசலைத் தாக்கினர் புலிகள். மேஜர் கின்னிக்குத் துணைக் கொமாண்டராய்ச் சென்று வெற்றியைப் பெற்று வந்தவன் நவநீதன். எதிர்பாராத மையத்தில் விழுந்த அதிரடி- புலிகள் கொடுத்த நெற்றியடி. இந்தியத் தளபதிகள் குழம்பிப் போயினர். செய்வதறியாது திகைத்தனர். படை நகர்த்து முன்னர், நடத்தும் பீடத்தைப் பாதுகாக்கவேண்டும். குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு 'செக்மேற்' நிறுத்தப் பட்டது. தங்கள் இலக்கு மீது இந்தியர்கள் கொடுத்த நெருக்கடி தளர்ந்தது. இந்த வெற்றியில் நவநீதனுக்கும் பெரும் பங்குண்டு.

நவநீதனைப் பற்றிச் சொல்வ தானால் சண்டையில்தான் ஆரம் பிக்கவேண்டும்; சண்டைகளால் தொடரவேண்டும்; சண்டையொன் றில் முடிக்கவேண்டும்.

அவனது சண்டைகளை விளக்குவதன் மூலம் அவனை வர்ணிக்கமுடியும்.

போர்தான் அவனுடைய 'தனிச் சிறப்புக் கலை'.

போரில்தான் அவன் 'துறைசார் வல்லுனன்'.

எங்கள் இயக்கத்தில் தலை சிறந்த சண்டைவீரர்கள் என்று தேர்ந்தெடுத்தால், நவநீதன் தவற மாட்டான்.

எதிரிகளை எதிர்கொள்ளும் வேளைகளில், எல்லோரையும் மேவி முன்னால் நின்று- அவனுடைய துப்பாக்கி தீ உமிழும்.

கணப்பொழுதுக்குள் எதிரியின் மூச்சுப்படும் தூரத்திற்கு நெருங்கி, அவன் சுழன்றடித்துச் சுட்டுவீழ்த் தும் லாவகம்- மெய்சிலிர்க்க வைக்கும்.

அவனொரு `Quick Gunner' - 'மின்னல் வேகத் துப்பாக்கி வீரன்' பொருதுகளங்களில், எதிரி காணு முன் எதிரியைக்கண்டு, துப்பாக்கி யைப் புயலின் வேகத்தில் இயக்கு வான். அந்த வேகத்திலும், குறி பிசகாமல், நிதானமாகக் குறிவைக் கும் வல்லமை, அவனது தனி ஆற்றல்.

அவனது சண்டைகள் பார்ப்ப வர்களை வியக்கவைக்கும். சண்டை தெரிந்தவர்களைக்கூட ஆச்சரியப் படுத்தும்.

சமர்க்களங்களின் நடுவில் சிக்கலான சூழ்நிலைகள் பிறக்கும் போது, மதிநுட்பம் வாய்ந்த விதமாக முடிவெடுத்து, எச்சரிக்கையாகவும், அவதானமாகவும் செயற்பட்டு- இடையூறுகளை வெற்றிகரமாகச் சமாளித்துவிடும் திறமை மிக்கவன் அந்தத் தளபதி.

போர்வீரர்கள் இரண்டு வகை யானவர்களாகக் காணப்படுவார்கள். ஒருவகை- குழுச்சண்டை வீரர்கள். அடுத்தவகை- தனிச்சண்டை வீரர் கள். குழுச்சண்டையானது படை யாட்கள் எல்லோருக்கும் பொதுவா னது. யுத்தப் பயிற்சி பெற்ற எல்லோரும் செய்யக்கூடியது. ஆனால் தனிச்சண்டை அப்படி யானதல்ல. அதற்குத் தனித்தன்மை யான நிபுணத்துவம் தேவை. குறிப்பிட்ட சிலர்தான் அதில் வல்லவர்களாக இருப்பார்கள். நவநீதன் ஒரு தனிச் சண்டைக் காரன். நூற்றுக்கணக்கான வீரர் களைக்கொண்ட ஒரு சேனையைத் தனித்து நின்று எதிர்கொள்ளக்கூடிய மனத்துணிவும், புத்திக்கூர்மையும், செயற்திறனும் அவனிடம் உண்டு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போரன்றி வேறெதுவும் அறியாத புலிவீரன் அவன். பயிற்சியைப் பற்றியும், வேவைப் பற்றியும், ஆயுதங்களைப் பற்றியும், சண்டையைப் பற்றியுமே அவன் பேசிக்கொண்டிருப்பான். தூக்கத்தில் வருகிற கனவுகள் கூட அவனுக்கு கள நிகழ்வுகளாகத்தான் இருந்திருக்கும்.

எல்லாப் போராளிகளுமே அவனோடு சண்டைக்களத்துக்குப் போக விருப்பப்படுவார்கள். அவர்களுக்கெல்லாம் அவன் ஒரு நம்பிக்கை நட்சத்திரம். இயக்கத்தின் உயர் தளபதிகளினதும் அதீத நம்பிக்கைக்குப் பாத்திரமான போராளியாக அவன் திகழ்ந்தான். தனது செயல்களாலே அவன் வளர்த்துக்கொண்ட நம்பிக்கை அது. ஆம், செயலால் மட்டும்.

சமர் அரங்கொன்றின் பின் முனையிலிருந்து நிலைமைகளை அவதானித்துக்கொண்டிருக்கும் கட்டளைத் தளபதி, சண்டை சிக்கல்படுகின்ற சில சூழ்நிலைகளில், "இந்த நேரத்தில் எப்படிச் செய்யவேண்டும்" என நினைக்கின்றாரோ, சண்டையின் முன் முனையில் வழிநடாத்தும் நவநீதன் அப்படியே செய்துமுடிப்பான். அந்த அளவுக்கு, போர்பற்றிய அறிவை- ஞானத்தை- அவன் பெற்றிருந்தான்.

கட்டையாகிப்போன காலைப் பற்றி அவன் கருத்திலெடுப்பதே இல்லை. சண்டைகளில் அவன் முன்னுக்கு ஓடித்திரிந்து தாக்கும் போதும், தாக்குதல்களுக்காக நாங்கள் நீண்ட தூரத்திற்குச் செல்ல வேண்டுமானாலும்- மனஞ்சோராமல் உற்சாகத்தோடு நடக்கும் போதும், அவன் தனது மன உறுதியைக் காட்டுவான்.

நவநீதன் அன்பானவன், மிக அமைதியானவன், மென்மையான சுபாவத்தைக் கொண்டவன்.

"நவநீதன் பேசிப்போட்டான்" என்று, யாருமே சொல்லாத அளவுக்குப் பண்பானவன்.

அவன் அதிகம் கதைக்க மாட்டான். இடைக்கிடை பகிடி சொல்லுவான். மற்றவர்களது மனங்களை நோகவைக்காமல், எப்போதாவது யாரையும் கிண்டல் செய்வான். அவ்வளவோடு சரி.

நிர்வாக வேலைகளைச் செய்யும் போது வளைந்துகொடுத்து, எல்லோரையும் சமாளித்து, விடயங்களை ஒப்பேற்றிவிடுகிற திறமையைக் கொண்டவன். எல்லாவகையான மனப்போக்கு உடையவர்களும் ஏற்றுக்கொள்ளும்படியாக நடந்து கொள்ளும் பக்குவம் மிக்கவன்.

எப்போதும் ஒரு அப்பாவித்தனம் அவனது விழிகளில் மிதக்கும்.

எப்போதும் ஒரு குழந்தைத் தனம் அவனது முகத்தில் குடியிருக்கும்.

எங்கள் நெஞ்சுக்குள் பொந்து அமைத்து வாழ்ந்த மாடப்புறா அவன்.

பகைவர்களுக்கு முன்னால் யுத்த சன்னத்தனாகி நெருப்பென நிற்கும் அந்த வீரன், எங்களுக்குள்- பனிநீராய்ப் படர்ந்து குளிர்மையாக வருடுகிற நண்பன்.

எவ்வளவு ஆற்றல்கள் அவனுக்குள் குவிந்து கிடந்தன! எத்துணை திறமைகளின் ஒட்டுமொத்த வெளிப்பாடாக அவன் உலா வந்தான்! ஆனாலும் அவன் வெளியில் மிளிராத போர்வீரன். தன்னைப் பிரபல்யப்படுத்திக்கொள்ள விரும்பாத விடுதலைப் புலி. இலைமறை காயாக இருந்து, பிரளயங்களைப் படைத்துக்கொண்டிருந்த பிரபாகரனின் பிள்ளை.

இறுதிக்காலத்தில் சண்டைகளுக்குப் பின்னாலேயே அவன் வைத்திருக்கப்பட்டான். ஏற்கனவே ஏராளமான சண்டைகளுக்குள் நின்றவன்; மாங்குளத்தில் வெடிவாங்கி காலைச் சின்னதாக்கிக் கொண்டவன். சண்டைகளில் அவன் பயன்படுவதைவிட, அவன் பட்டறிந்து பெற்றிருக்கும் அனுபவம் மிகுந்த பயன்பாட்டைத் தரும். எனவேதான், இயக்கத்திற்காகவும் அவனுக்காகவும் சமர்களின் பின் முனையிலேயே அவன் வைத்திருக்கப்படுவான். ஆனாலும், பின்னுக்கு நின்று ஒழுங்குகளைச் செய்து கொண்டிருப்பவன், சண்டை வெடித்த அடுத்த நிமிடங்களில் முன்னுக்கேதான் போய்விடுவான்.

புலோப்பளைச் சண்டையைப் பாருங்கள். அதில் அவனது பங்கு முக்கியமானது; குறிப்பிடத்தக்கது.

பூநகரிக்குப் படையெடுக்க நாங்கள் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தபோதுதான், எதிரியானவன் யாழ்ப்பாணத்துக்குப் படையெடுத்தான்.

ஆனையிறவுப் படைத்தளத்திலிருந்து ஆரவாரமான ஏற்பாடுகளுடன் 'யாழ்தேவி' புறப்பட்டவுடனேயே நவநீதனது குழுதான் அங்கு அனுப்பப்பட்டது.

பகைவர் சேனைக்கு வாசலிலேயே வரவேற்புக் கொடுக்கவல்ல; அவர்களின் அசைவுகளை அவதானித்துத் தகவல் சொல்ல மட்டும். ஒரு படையெடுப்பை முறியடிக்க முனையும் போது முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விடயம் போர் வியூகமாகும். எமது படைவீரர்களை சரியானதோர் வியூகமமைத்து நிறுத்திவைக்கும் போதுதான், எதிரிப்படையை அதற்குள் தப்பும் வழியற்றுச் சிக்கவைத்துத் தாக்கி அழிக்கமுடியும். அவ்வளவு நேர்த்தியாக வியூகம் அமைக்க வேண்டுமானால், எதிரியின் நகர்வு பற்றி மிகத் துல்லியமான தகவல்கள் தேவை. படையினரின் தொகை என்ன? ஆயுத- படைக்கல வகைகள் என்னென்ன? படையூர்திகள் மற்றும் வசதிகள் எப்படி? என்ன ஒழுங்குமுறையைக் கையாண்டு எதிரி படை நகர்த்துகின்றான்? என்ற தரவுகள் எந்தப் பிசகுமின்றிக் கிடைக்கவேண்டும்.

அவற்றின் அடிப்படையில்தான் நாம் சிறந்ததொரு வியூகத்தை அமைத்து, நம்பிக்கையோடு காத்திருக்க முடியும்.

புலோப்பளையில் இந்தப் பணியைச் செய்துமுடித்தவன் நவநீதன். நாங்கள் காவியம் படைத்த அந்தப் பெருஞ்சமரில், வெற்றிவாகை சூடக்கூடியவாறு, நுட்ப தந்திரோபாயமான போர் வியூகத்தை அமைக்கச் சரியான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தகவல்களைத் தந்தது மட்டுமல்ல- இரவிரவாக நடந்து திரிந்து சண்டைக்கேற்ற 'நிலை இடம்' தேடுவதில் நவநீதன் தளபதிகளுக்கு உதவினான்.

எல்லா ஏற்பாடுகளும் முடிந்த பின்பும், மீண்டும் முன்னுக்கே சென்று இறுதிவரை எதிரியின் நகர்வுகளைத் தந்துகொண்டிருந்தவனுக்கு, சண்டை தொடங்கியவுடன் பின்னுக்கு வந்துவிடுமாறுதான் சொல்லப்பட்டது. ஆனால், உரிய இடத்திற்குள் எதிரியின் படையணிவர, எமது முதலணியோடு களத்திலிறங்கிச் சமரை ஆரம்பித்தது அவன்தான்.

அடுத்ததுதான் பூநகரிச் சமர்.

புலிகள் இயக்கத்தின் போரிடும் சக்தியைப் பற்றி சர்வதேச செய்தி அலைவரிசைகளையெல்லாம் வியந்துரைக்கவைத்த செருக்களம்.

அவலப்பட்ட மக்களுக்கு பாதை திறக்கக் கேட்டபோது- அரசியல் பேரம்பேசி அகங்காரம் செய்தோர்க்கு உச்சந்தலையடி கொடுத்த போர் அரங்கு.

அந்தக் கூட்டுத் தளத்தின், 'வில்லடி' கட்டளை முகாமைத் தாக்கும் பெரும் படையணிக்குள், உப குழுவொன்றுக்கு நவநீதன் தளபதி. ஒதுக்கப்பட்ட காவலரண் தொகுதியைத் தாக்கி அழித்தபின், முகாமின் மையத்தைத் தாக்கும் பிரதான படைப்பிரிவுக்குத் துணைக் குழுவாக இறங்கவேண்டுமென்பது தான் அவனுக்குக் கொடுக்கப்பட்ட பணி.

'வில்லடி' முகாம்தான், கூட்டுத் தளத்தின் கட்டளை முகாம். அது மிகப் பலமானது. 91ம் ஆண்டு ஆனையிறவுத் தளத்தை நாம் வெற்றிகொள்ள முற்பட்ட போது அது இருந்ததைப் போல, ஏறக்குறைய அதேயளவு பலத்துடன்தான் இது இருந்தது.

நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னர் சண்டை ஆரம்பித்தது. விடிந்த போது நவநீதனுக்கான காவலரண் தொகுதி தாக்கியழிக்கப்பட்டு

# ஆடைத் தயாரிப்பில் ஒரு திருப்பம் எழில் தையலகத்தின் சாதனை

எமது தேசத்தின் தன்னிறைவான சுயசார்புப் பொருளாதார வளர்ச்சியில் அதீத அக்கறை காட்டிவரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கைத்தொழில் வளர்ச்சி தொடர்பான பல்வேறு செயற்பாடுகளைத் தனது கைத்தொழிற் பிரிவின் மூலம் முன்னெடுக்கிறது.

அந்தவகையில் மக்களின் தேவை குறித்த சேவை அடிப்படையில் உருவாக்கப்பட்ட நிறுவனம்தான் எழில் தையலகம்.

சிறீலங்கா இனவாத அரசின் இன ஒழிப்பு நடவடிக்கைகளால் கடந்த பல வருடங்களாக, எமது பொருளாதாரத்தின் தூண்களாக விளங்கிய தொழிற்சாலைகள் நொறுக்கப்பட்டன; உள்ளீடு இன்மை, மின்வலு இன்மை எனத் தொடர்ந்து போடப்பட்ட முட்டுக்கட்டைகளால் கைவிடச் செய்யப்பட்டன. தொழிலாளர் வேலை இழந்தனர். ஆடை தயாரிப்புத் தொழிலுக்கும் இதே நிலைதான். பல்வேறு ஆடை உற்பத்தி மூலங்கள் அழிக்கப்பட்டன. மூலப்பொருட்களுக்குத் தடையும் விதிக்கப்பட்டது.

இந்தநிலையில், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆடை தயாரிப்பை ஊக்குவிக்கும் முகமாக,

1. நூல் முதலிய மூலப் பொருட்களை இடர்களுக்கிடையே குடாநாட்டினுள் கொண்டுவரச் செய்தல்

2. எழில் தையலகத்தை நிறுவி தொழில் அற்றோர்க்கு குறிப்பாக வறுமையில் வாடும் படித்த யுவதிகளுக்கு ஆடை தயாரிப்பு, ஆடை வெட்டுதல், தையல் எந்திர பழுதுபார்ப்பு துறைகளில் பயிற்சி வழங்கல்

3. இதற்கான முதலீடுகள் மற்றும் சகல வசதிகளும் செய்துதரல்.

போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது.

பயிற்சிக்காலத்தின் போதே தரமான உடைகள் உருவாகியதைத் தொடர்ந்து ஆடைக் கண்காட்சி நடாத்தப்பட்டபோது எதிர்பாராத விற்பனையும், வரவேற்பும் கிடைத்தது. இது எழில் தையலகத்தை வர்த்தக ரீதியான உறபத்தி நிலைக்கு உயர்த்தியது.

அதேவேளை இங்கு பயிற்சி பெற்ற பலர் வேறு ஆடைத் தயாரிப்பு நிலையங்களிலும் தாமே சுயமாய் நிறுவிய நிலையங்களிலும் ஆடைத் தயாரிப்பை மேற்கொள்ளுகின்றனர்.

குழந்தைகட்கான உடை, மங்கையர் ஆடை, மார்புக் கச்சைகள் என்பன எழில் தையலக உற்பத்திகளாகும். கொழும்பிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மார்புக் கச்சைகளை விட எழில் தையலகத்தினால் தயாரிக்கப்படும் மார்புக் கச்சைகளின் தர உயர்வு காரணமாக இவை பெருமளவில் விற்பனையாகிறன.

லாபமாக வரும் பணம் தையலக வளர்ச்சிக்கே பயன்படுகிறது. விற்பனை உயர்வுக்கேற்ப லாப உயர்வு இல்லாவிடினும் மக்களின் தேவைக்கான சேவைத் தொழிலாக எழில் தையலகம் ஆடைத் தயாரிப்பினை மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது.

எதிர்காலத்தில் நாட்டின் ஆடைத் தயாரிப்புத்துறையின் வளர்ச்சிக்கு அடிகோலியிருப்பதுடன் தற்போதைய நெருக்கடி நிலையில் மக்களின் ஆடைத்தேவையைப் பெருமளவு நிறைவேற்றி வைப்பதில் எழில் தையலகம் வீறுநடை போடுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட்டது. ஆனால் கட்டளை முகாமில் 'ராங்கு'களையும், பெருந்தொகையான ஆயுதங்களையும் இழந்த எதிரி, சிறு பகுதியொன்றில் எஞ்சியிருந்தான்.

அர்த்தசாம இருளில் சிதறியோடிப்போன சிப்பாய்களும், விடிந்த பின் கட்டளை முகாமை நோக்கி ஓடிவர, திடீரென எதிரி அசுரபலம் பெற்றான்.

எதிரி, 'அடுக்குமுறைப் பாதுகாப்பு முறையில் (Depth Defence System)' ஒன்றன் பின் ஒன்றாக அமைத்திருந்த காவலரண்களைத் தகர்தெறிந்து கொண்டு, 'கனரக மோட்டார் பீரங்கி' உள்ள தளத்தை நோக்கி முன்னேறிய எமதணி அதனைக் கைப்பற்றும் போது, அணி பெருமளவில் சேதப்பட்டு விட்டது. பொழுதும் விடிந்து விட்டது.

அந்த நேரத்திலேயே- துணைக் குழுக்களை அழைத்து பீரங்கிகளை அப்புறப்படுத்த முன்னர்- எதிரி புதுப்பலம் கொண்டு கடுமையாகத் தாக்கத் துவங்கினான்.

பீரங்கித் தளம் வெளியான தரையமைப்பைக் கொண்டது. முற்றாக அவனுக்குச் சாதகமான களம். அத்தோடு, திட்டமிட்ட ரீதியில் அமைக்கப்பட்ட சக்திமிக்க அரண்களிலிருந்து எதிரி தாக்கி முன்னேறினான். விடிந்துவேறு விட்டது. வானூர்திகள் பார்த்துப் பார்த்துக் குண்டடித்தன. இரவுச் சண்டையிலே மிகுந்தளவில் பலவீனப்பட்டுப்போன எமதணி, இயலுமானவரை போரிட்டது. பீரங்கிகளை விடக்கூடாது என்ற உறுதிப்பாட்டுடன் போரிட்டது. ஆனால், ஏறக்குறைய அது முற்றாகவே சேதப்பட்டுவிட்ட நிலையில், பீரங்கிகளை மீட்க முடியாமலே பின்வாங்க நேரிட்டது.

கைப்பற்றப்பட்ட பீரங்கித் தளமும், பீரங்கிகளும் கைவிடப் பட்டுவிட்டன. இப்போது பீரங்கித் தளம் நடுவில். அதன் பின்னால் எதிரிப்படை; முன்னால் புலிகள் படை. பீரங்கிகள் அநாதரவாகக் கிடந்தன. அவனுக்குப் பக்கத்தில், எங்களுக்கு எட்டத்தில்.

திரும்பவும் தாக்கி அவற்றைக் கைப்பற்றியே ஆகவேண்டும். ஆனால் பகலில்...? அது முற்று முழுதாகவே பகைவனுக்குச் சாதகமான சூழ்நிலை. பெரும் இழப்பைக் கொடுத்தது. மிகுந்த சிரமத்துடனேயே நாம் மோதவேண்டியிருக்கும். அப்படியானால் இரவு...? இல்லை; இருளும் வரை காத்திருக்க முடியாது. எதிரி மீண்டும் சுதாகரித்து, முழுப்பலத்தையும் திரட்டி முன்னேறி, பீரங்கிகளைத் திரும்பக் கைப்பற்றக்கூடும். அதனால், அவனுக்கு அவகாசம் கொடுக்காமல் உடனடியாகத் தாக்குதலை நடாத்தவேண்டும்.

இது ஒரு சிக்கல் நிறைந்த கள நிலைமை. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில்தான் நவநீதன் அழைக்கப்பட்டான். அவன்தான் அதற்கு உரித்தானவன்.

தேர்ந்தெடுத்த வீரர்களைக் கொண்டு உடனடியாக ஒரு 'தாக்குதலணி தயார் செய்யப்பட்டது. அந்த அணியின் கொமாண்டராகி சண்டையைத் துவக்கினான் தளபதி.

முரட்டுத்தனமான முன்னேற்றம். அவனுக்குப் பழக்கப்பட்ட வேகம். 'பீரங்கிகள்'- என்ற ஒரே உறுதியுடன் பாய்ந்தனர் வேங்கைகள். நிலைமையைப் புரிந்துகொண்ட எதிரி பலம்கொண்ட மட்டும் மோதினான். தாக்குதலை முறியடிக்க தன் சக்திக்கு மீறிச் சண்டையிட்டான்.

இருந்தபோதும்-

பீரங்கிகளை அடையும்வரை நவநீதன் சண்டையை நடாத்திச் சென்றான்.

எதிரியின் வெறித்தனமான தாக்குதலுக்கு மத்தியிலும் தளத்தைக் கைப்பற்றினர் புலிகள்.

பீரங்கிகள் இரண்டு.

முதலாவதைக் கழற்றி எடுத்துப் பின்னுக்கு அனுப்பிவிட்டபோது- உற்சாகம் பொங்கியது.

நெருப்பு மழைக்குள்ளும் இரண்டாவதைக் கழற்றிக்கொண்டிருக்கும் போதுதான்,... அந்தத் துயரம் நடந்தது!

எங்கள் கதாநாயகனுக்குப் பக்கத்தில்.... மிக அருகில்... எதிரி ஏவிய மோட்டார் குண்டொன்று விழுந்து வெடித்தது. அவனை.... ஓ! அதை எப்படிச் சொல்ல...?

எங்கள் கண்களுக்கு முன்னாலேயே, எங்கள் நெஞ்சினிய நண்பன்... கை.... கால்.... இடுப்பு.... நெஞ்சு.... முகம்... எல்லாமே பிய்ந்துபோய்.... தசைகள் தொங்கி.... இறைச்சியாய்.... ஓ! அதை எப்படி விபரிக்க...

இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்து கொண்டும் நவநீதன் கத்தினான்.... "மோட்டரை எடுங்கோடா, மோட்டரை விடாதேங்கோடா..."

உயிரின் கடைத்துளி சிந்தும் போதும், சத்தமில்லாமல் அவனது வாய் அசைந்துகொண்டேயிருந்தது. அது "மோட்டரை விடாதேங் கோடா...." என்ற கட்டளையாகத் தான் இருந்திருக்கும்!

அவன் சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

நாங்கள் விடவில்லை.
கொண்டுதான் வந்தோம்!

நன்றி: விடுதலைப் புலிகள் சித்திரை 1994

**ஆனி மாத இதழில் பிரசுரமாகியிருந்த 'இன்னும் அதே' என்ற சிறுகதைக்கு ஓவியர் மகாவினால் வரையப்பட்டிருந்த ஓவியம் 36ம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது. இவ் ஓவியத்திற்குப் பொருத்தமான தலைப்பிட்டு கவிதை எழுதுங்கள். முதலிடம் பெறும் மூன்று கவிதைகளும் எரிமலை இதழில் பிரசுரிக்கப்படும்.**

**- ஆசிரியர் குழு -**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மலரும் உறவும் பிறக்கும் அச்சமும்

பனிப்போர் முடிவடைந்ததால் எழுந்த புதிய சூழலில், புதிய உறவுகளை அமைத்துக் கொண்டு பொருளாதார முன்னேற்றத்தை அடையக் கனவுகண்ட இந்திய இராஜதந்திரிகளை, மீண்டும் இராணுவ அச்சுறுத்தல் பிடித்து விட்டது.

சோவியத் ஒன்றியத்தின் சிதைவுக்குப் பின்னர் மெதுமெதுவாக நெருங்கி வந்த அமெரிக்க வல்லரசு, திடீரென இந்திய நலனுக்கெதிராகப் பேசவும், செயற்படவும் தலைப்பட்டுவிட்டது. இது இந்திய ஆட்சியாளர்களுக்கு பலத்த ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

ஒருபுறத்தில், காஷ்மீரில் இந்தியப் படைகள் புரிந்த மனித உரிமை மீறல்களைக் கடுமையாகக் கண்டித்த அமெரிக்க நிருவாகம், மறுபுறத்தில் பாகிஸ்தானுக்கு நவீன போர் விமானங்களை வழங்க முடிவுசெய்துள்ளது. F16 எனப்படும் அதிநவீன போர்விமானங்களில் 40 விமானங்களை, பாகிஸ்தான் அமெரிக்காவிடமிருந்து பெறவிருக்கின்றது. சக்திவாய்ந்த இப் போர்விமானங்கள், பாகிஸ்தானின் வான்பலத்தை ஓர் உயர்நிலைக்குக் கொண்டுசெல்ல உதவும் என்பது உறுதி. இன்னும் வெளிப்படையாகச் சொன்னால், பாகிஸ்தானிடம் F16 போர்விமானங்கள் வந்துசேர்ந்தபின், இந்தியாவிலுள்ள அணு உலைகள் பாகிஸ்தானின் இலகுவான இராணுவ இலக்குகளாக மாறிவிடும் என்பது உண்மை. இது இந்தியாவின் பாதுகாப்புக்கும் அதன் ஸ்திரநிலைக்கும் ஆபத்தை விளைவிக்கும் என்பதுடன், தேவை ஏற்பட்டால் பலத்தைப் பயன்படுத்திப் பாகிஸ்தானைப் பணியவைத்துவிடலாம் என்ற இந்தியாவின் எண்ணத்துக்கும் மண்ணள்ளிப் போடலாம்.

இதேவேளை, சிறீலங்கா ஆட்சியாளர்களின் தீவிர சீனசார்பு நிலைப்பாடு இந்தியாவிற்கு மேலும் தலைவலியைக் கொடுத்துள்ளது. ஒரு காலத்தில் இந்திய எதிர்ப்புவாதியாக திகழ்ந்த திரு. பிரேமதாசா, தனது இறுதிக்காலத்தை இந்தியாவுடனான நல்லுறவுகளைப் பலப்படுத்துவதிலேயே கழித்தார். அடிக்கடி இந்திய மண்ணுக்குச் சென்றுவந்த அவர், இந்திய ஆட்சியாளர்களது மனதில் பால் வார்த்தார். ஆனால் பிரேமதாசா கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பதவிக்கு வந்த திரு. டி. பி. விஜேதுங்கா, இந்தியாவுடனான உறவுகளைக் கருத்திலெடுக்காது சீனாவுடனான உறவுக்கே முக்கியத்துவம் கொடுத்துவருகின்றார். சீனப் பிரதிப் பிரதமரின் அண்மைய கொழும்பு விஜயம் சீன - சிறீலங்கா உறவின் இறுக்கத்தைத் தெளிவாகக் காட்டியது. இதன் உச்சக்கட்டமாக, சீனப்பயணம் ஒன்றுக்கான ஆயத்தங்களை சிறீலங்கா ஜனாதிபதி விஜேதுங்கா செய்துவருகின்றார். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, சீனாவின் பாரிய ஆயுதக்கிடங்காக சிறீலங்கா மாறி வருவது இந்தியாவுக்கு அச்சத்தைக் கொடுத்துள்ளது.

பாகிஸ்தானில் அமெரிக்க ஆயுதங்கள் குவிவதும் சிறீலங்காவில் சீன ஆயுதங்கள் குவிவதும் தனது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலைக் கொடுத்துள்ளதாக, இந்தியா பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த காலங்களிலே பாகிஸ்தானுடன் மூன்றுமுறை போரில் ஈடுபட்டுள்ள இந்தியா, சீனாவுடன் ஒருமுறை போரில் ஈடுபட்டது. இந்த இருநாடுகளுடனும் இந்தியா போர் செய்தபோதெல்லாம் சிறீலங்கா அரசு இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டையே எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எனவேதான் சீன ஆயுதங்கள் சிறீலங்காவில் குவிவதை ஒரு அச்சுறுத்தலாக இந்தியா பார்க்கின்றது.

இதேவேளை இந்தியாவைச் சுற்றி ஒரு சீனச் செல்வாக்கு வலையம் மெதுவாகவும்- உறுதியாகவும் உருவாகி வருவதை, இந்தியாவும் உணர்ந்துகொண்டுள்ளது. பர்மா, பங்களாதேஷ், தீபெத், நேபாளம், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், என்று இந்திய உபகண்டத்தின் மேற்கு, வட-கிழக்கு எல்லைகள் ஏற்கனவே சீனச் செல்வாக்கால் சூழப்பட்டுவிட்டன. எஞ்சியிருந்த தெற்குமுனையும் (சிறீலங்கா) இந்தியாவின் எதிர்பார்ப்பிற்குப் புறம்பாக சீனத்தின் மடியில் விழுந்து, இந்தியக் கொள்கைவகுப்பாளர்களுக்குத் தலையிடியைக் கொடுக்கத் தொடங்கியுள்ளது.

இதன் விளைவுகளில் சிலவற்றை இந்திய ஆளும்வர்க்கத்திடம் காணக்கூடியதாக உள்ளது. தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பான டி. பி. விஜேதுங்காவின் அணுகுமுறை சில இந்தியப் பத்திரிகைகளின் கண்டனத்துக்கு உள்ளாகியிருப்பதும், தமிழரின் விடுதலைப் போராட்டம் தொடர்பாக அண்மையில் திரு. டிக்சிற் தெரிவித்த கருத்தும், சீன-சிறீலங்கா உறவுகளின் நெருக்கத்தால் இந்தியத் தரப்பில் பிறந்த ஞானமாகவே கொள்ளப்படவேண்டும்.

புலிகள் இயக்கம் திரும்பத் திரும்பக் கூறிவந்துள்ளதைப் போல, தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் ஒரேயொரு நட்புசக்தியாக இருக்கக்கூடியவர்கள் ஈழத் தமிழர்கள்தான். ஆனால் இதை இந்தியா என்று உணருமோ தெரியவில்லை.

**நன்றி: 'விடுதலைப் புலிகள்-சித்திரை 1994'**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net

# நின்று நிலைக்கப் போகும் இரண்டு கலை வடிவங்கள்

புதுவை இரத்தினதுரை

கலைகள் யாவும் காலத்தின் பதிவாகும். மனதுக்கு இதம் தருவது மட்டும்தான் மகோன்னதமானவை அல்ல. அரங்கிற்கும் பார்வையாளருக்கும் இருக்கும் உறவானது, கலைஞருக்கும் சமூகத்துக்கும் உள்ள உறவைப் போன்றது. இரண்டும் பிரிக்கமுடியாதது. போராட்டம் நடைபெறும் வேளைகளிலெல்லாம் அப்போராட்டத்தை மக்களுக்கு உணர்த்தி போராடத் தூண்டுவதும், போராட்டம் நடைபெற்ற காலத்தில் அச்சமூகத்தின் எழுச்சி - உணர்வு - எண்ணம் எப்படி எப்படியெல்லாம் இருந்தன என்பதை வருங்காலத் தலைமுறைக்கு உணர்த்தி நிற்பதும் கலைவடிவங்களே. அன்றாடம் இன்னல்களுக்குள்ளும், இழப்புகளுக்குள்ளும் வாழும் ஈழத்தமிழினத்தின் அவலங்களையும், அதிலிருந்து மீளத் துடிக்கும் அதன் ஆத்மாவையும், அண்மையில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் அரங்கேற்றிய இரண்டு கலைப் படைப்புக்களில் காணமுடிந்தது. ஒன்று, முல்லை மாவட்டக் கலைஞர்களின் ‘ஆக்கிரமிப்பாளர் அவலம்’ என்ற தெருக்கூத்து; மற்றொன்று விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழக யாழ். மாவட்டத்தினர் உருவாக்கிய ‘சதியை வென்ற சாவுகள்’ ஆகும்.

கேணல் கிட்டுவின் தாயகம் நோக்கிய பயணத்துடன் ஆரம்பமாகி, நடுக்கடலில் இந்தியச் சதியால் கிட்டுவும் ஒன்பது வேங்கைகளும் தீயுடன் சங்கமிப்பதும், எங்கள் தாயகத்துக்கு அவர்கள் இடையூறின்றி வந்திருப்பார்களானால் இங்கு ஒரு ஆனந்த அலை அடித்திருக்கும் என்பதையும், ஆனால் கடலிலே அவர்கள் காவியமாகிவிட்டவுடன் எம் மண் படர் கொம்பிழந்த பச்சைக்கொடி போலாகிவிட்டதையும், பார்ப்பவர்களை அச்சொட்டாக உணரச்



‘சதியை வென்ற சாவுகள்’
நாடகக் காட்சிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்வதில் வெற்றிகரமான கலைப் படைப்பாகிவிட்டது. தாயகம் நோக்கிய தளபதி கிட்டுவுக்கும் ஒன்பது வேங்கைகளுக்கும் இடையில் என்ன நடந்திருக்கும்? அக்கோர சம்பவம் நடக்கும்போது ஆக்கிரமிப்பாளர்களுடன் அவர்கள் எப்படி நடந்திருப்பார்கள் என்பதை, பாடல்கள் மூலமும் அதற்கேற்ற ஆடல்கள் மூலமும், பார்க்கும் விழிகளில் கண்ணீரையும் கடுஞ் சினத்தையும் வரச் செய்ததில், இந்தக் கலைப்படைப்பு தன் பணியைச் செவ்வனே செய்துமுடித்திருந்தது. இசை நாடகத்துக்குரிய அசைவுகளையும் ஆட்டத்துக்குரிய அசைவுகளையும் இணைத்து, புதிய தேடலுக்கும், காலத்தின் ஒத்திசைவுடன் கையாளப்பட்டதிலும் இக் கலைப்படைப்பு வெற்றி கண்டுள்ளது.

முல்லை மாவட்டக் கலைஞர்களினால் வீதிகளில் ஆடப்பட்டு, பலராலும் விதந்துரைக்கப்பட்ட வீதிக்கூத்தான 'அரசின் தடுமாற்றம்' ஆட்டமுறையிலும் மக்களை உணர்வு நிலைக்கு உள்ளாக்கியதிலும், அற்புதமானதாக அமைந்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. சிங்களப் பேரினவாத அரசு தன்னின இளைஞர்களையும் தமிழினத்தையும் போரின் மூலம் எப்படி ஏமாற்றுகின்றது என்பதையும், அதன் போக்கு வருங்காலத்தில் என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் எடுத்துரைத்து, விடிவுக்கான ஒளிகாண வைத்ததில் இக் கலைவடிவம், முதன்மையும் முக்கியமானதுமான உச்சத்தைத் தொட்டு நிற்கின்றது. இதிலும் குறிப்பாக ஆட்டமுறையிலும், பாரம்பரியத்தை சமகால கருப்பொருளுடன் இணைத்ததிலும், முல்லை மாவட்டக் கலைஞர்கள் வெற்றிகண்டுள்ளனர் என்பது விதந்துரைக்கக் கூடியதாகும். தமிழின் பாரம்பரிய பழைமையான கலைவடிவங்களை எப்படி புதியன நோக்கி நகர்த்தி வெல்லலாம் என்ற கேள்விக்கு, முல்லை மாவட்டக் கலைஞர்கள் விடைகூறி நிற்கின்றனர்.

எமது தமிழீழ மண்ணின் பிரதேசங்களுக்குள் பாரம்பரிய கலை வடிவ முறைமைகளில் வித்தியாசங்களுண்டு. மட்டக்களப்பு, வன்னி, மன்னார், யாழ்ப்பாணம் என்று அரங்கேற்றலிலும் பாட்டுக்களின் தாளக்கட்டுகளிலும் ஆட்ட முறைகளிலும் வேறுபாடுகளுண்டு. தொடர் ஓட்டமாக வழிவழியான பாதச்சுவடுகளின் பின்பற்றலில் இவை அப்படியே இன்றும் பேணப்படுகின்றன. புதிய தேடலில் எல்லோரும் ஒன்றாக நின்றாலும், மேற்குறிப்பிட்ட கலையாக்கப்பண்பில் இவை வித்தியாசப்படுவது தவிர்க்கமுடியாததே. ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவும், அவரவர் கலைவடிவங்களை அறிந்துகொள்ளவும், ஒத்துமாற்றிக்கொள்ளும் வகையில் முல்லை மாவட்டக் கலைஞர்கள் ஒரு மாதமாக யாழ்ப்பாணத்தில் தங்கிநின்று, இங்கு பல இடங்களில் தங்கள் கலைப்படைப்புக்களை அரங்கேற்றியமை, இந்தக் கலைப் பரிமாற்றத்திற்கு வழிசமைத்துள்ளது. அவர்கள் பணி பாராட்டுதற்குரியது. அதுபோல, யாழ். மாவட்டக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட 'சதியை வென்ற சாவுகள்' என்ற கேணல் கிட்டுவின் இறுதிநேர சம்பவங்களை உள்ளடக்கிய கலைப்படைப்பு, வன்னிப் பிராந்தியங்களுக்குச் செல்லவுள்ளதும் வரவேற்கத்தக்கதே.

சதியைவென்ற சாவுகளும், அரசின் தடுமாற்றமும் அண்மைக் காலத்தில் தமிழ்ப்பகுதிகளில் அரங்கேற்றங் கண்டவற்றில் உன்னதமானவை என்பதில், எவருக்கும் அபிப்பிராயபேதம் ஏற்படமாட்டாது.

கலைகள் வெறும் இன்பமூட்டுவன அல்ல. மக்களின் விடிவுக்கான வெளிச்சங்களாக வேண்டியன. இன்று போராடும் பூமியில் விளையும் கலைகளாயினும் இலக்கியங்களாயினும், அம்மண்ணின் மக்களைத் தொடர்ந்தும் போர்க்குணம் மிக்கவர்களாக்கி, போராட்டத்தை வெற்றிக்கம்பம் நோக்கி விரைவுபடுத்தவேண்டும். ஒரு காலத்தின் பதிவாகப் பதியப்படும் கலைப் படைப்புக்கள், காலம் கடந்தும் நிலைத்து நிற்கும். அந்தவகையில், மேற்குறித்த இரண்டு படைப்புக்களும், நிறைவைத் தருகின்றன. இப்படைப்புக்களுடன் இணைந்த கலைஞர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெளிநாடுகளில் பரப்பப்படும் 'ஆயுதக் கலாச்சாரம்'

# நாசகார சக்திகள் குறித்து எச்சரிக்கை

**வளவன்**

தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான, சர்வ தேசரீதியான சதிவலையொன்று பின்னப்பட்டு வருவதை நன்கு உணரக்கூடியதாக உள்ளது. பிரச்சாரம், சதிநடவடிக்கைகள், வன்செயல்கள் என்பன இச்சூழ்ச்சித் திட்டத்தின் வழிமுறைகளாக உள்ளன. புலம்பெயர்ந்து தமிழர் வாழும் நாடுகளில் உள்ள அரசாங்கங்களையும், அரச சார்பற்ற நிறுவனங்களையும், மக்களையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகத் திருப்பிவிடுதலே இச்சதியின் நோக்கமாக இருக்கிறது. தமிழ் மக்களிடையே உள்ள ஒரு சிலராலேயே இச்சதித் திட்டம் அரங்கேற்றப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நிர்மூலம் செய்யும் நோக்குடனான, சிறீலங்கா முதற்கொண்டு ஏனைய பிராந்திய, சர்வதேச நாசகார சக்திகளே இச் சிலரைப் பின்னால் இருந்து ஆட்டுவிக்கிறார்கள். இந்த நாசகார சக்திகள், பண, ஆயுத, விநியோக (Logistics) பலமிக்கவையாக உள்ளன. இப்பலம் பொருந்திய நாசகார சக்திகளின் சதிகாரச் செயல்பாடுகள் அனைத்தும், தமிழரிடையே உள்ள இச் "சிலருக்குத்" தெரிவதோ, புரிவதோ இல்லை. சிலர் தெரிந்துகொண்டு விடுதலைக்கு எதிரான காரியங்களைச் செய்கிறார்கள். பல்வேறு சிறுசிறு குழுக்களாக உள்ள அச்சிலருக்குத் தெரியாமலேயே, புரியாமலேயே சில காரியங்கள் நிகழ்ந்துவிடுகின்றன. தனித்தனி நபர்களின் மூலமோ, ஒரு குழுவின் மூலமோ பின்னாலிருந்து இக்காரியங்கள் நடைபெறுவதால், இக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் ஒருவருக்கொருவர் அறிந்து கொள்ளாமலேயே சில சதி நடவடிக்கைகள் இடம் பெற்றுவிடுகின்றன. இவ்வடிப்படையிலேயே, பிரான்சில் நடைபெற்ற சம்பவங்களும், குறிப்பாக கனடா, ரொறன்ரோவில் "தேடகம்" நூல் நிலையம் எரிக்கப்பட்ட சம்பவமும் நிகழ்ந்துள்ளதாகக் கருத முடிகிறது.

இச்சிறு குழுக்களைச் சேர்ந்தவர்கள், புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழீழ விடுதலையை முறியடிக்கச் செய்த பிரச்சாரங்கள், பொய்கள், புனைவுகள் போதாது என்ற அடிப்படையில், வன்செயல்களைத் தமிழ் மக்களிடையே கட்டவிழ்த்து விடுவதன் மூலம் தமிழீழப் போராட்டத்துக்கு அபகீர்த்தியை உண்டு பண்ணுவதும், விடுதலைச் செயல்பாடுகளைத் தடைசெய்ய வைப்பதுமே நாசகார சக்திகளின் நோக்கமாக உள்ளது. தமிழ்நாட்டில், 85, 86ம் ஆண்டுகளில் இத்தகைய நடவடிக்கைகள் ஓரளவு வெற்றி பெற்றதைப் பிராந்திய ரீதியாக நாம் கண்டுகொண்டோம். தனிநபர்களும், குழுக்களும் திட்டமிட்டோ, திட்டமிடாமலோ செய்த குற்றச் செயல்கள் கச்சிதமாகவும், நாசூக்காகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது சுமத்தப்பட்டன. தமிழ்நாட்டு மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி, விடுதலைச் செயல்பாடுகளைத் தடைசெய்வதற்கான "சமூகப் பக்குவத்தை" ஏற்படுத்துவதற்கு இத்தகு தயார்படுத்தல்கள் தேவையாக இருந்தன. பொய்ப் பிரச்சாரங்கள் பிசுபிசுத்துப் போகும் போது அடுத்த கட்ட நிகழ்வாகவே இவ் வன்செயல்கள் அமைகின்றன.

சிங்கள, தமிழ்த் தொழிலாளர்கள் இணைந்து நடத்தும் அகில இலங்கை ரீதியான புரட்சி என்பது 70ம் ஆண்டுகளுடன் தீர்ந்துவிட்டது. தற்போது, இலங்கை ஒரு பல்லின, பல் கலாச்சார, பலமத பன்மைச் சமூகம் (Plural Society) அல்லது நாடு என்ற கருத்தும் வலுவிழந்து வருகின்றது. காரணம் சிங்கள இனவாதம், தனது தீவிரத் தேசியத் தன்மையை பச்சையாகவும், வெளிப்படையாகவும் காட்டி வருவதே. நீண்ட காலமாகப் புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினை என்ற உண்மையையே, இல்லையென சிறீலங்கா ஜனாதிபதி மறுப்பது, தமிழ் இனத்தையே இல்லாமல் செய்துவிடும் சிங்கள தீவிர இனவாதத்தின் விருப்பையே வெளிப்படுத்துவதாக அமைகிறது. தமிழ் மக்களின் எதிர்ப்பின் மூலம், தமிழின அழிப்பு சாத்தியமில்லாது போனால், பெரும்பான்மை சிறுபான்மை என்ற வரையறைக்குள், சிறீலங்காவின் அரசியல் யாப்பினுள் சிங்கள மேலாதிக்கத்தை தமிழ் மக்கள் மீது ஏற்படுத்துவதே சிங்கள அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளது. சிங்களவர்கள் மரம், தமிழர் உட்பட்ட ஏனைய மக்கள் செடிகொடிகள் என்ற ஜனாதிபதியின் உவமானமும் இதனையே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலப்படுத்தின. வடக்கு, கிழக்கை இணைத்தோ இணைக்காமலேயோ ஏற்படுத்தப்படும் இத்தகைய சமரசத்திற்குச் சார்பான கருத்துக்களைப் பரப்புவதையே இத்தமிழ்க் குழுக்கள் வெளிநாடுகளிலும் செய்து வந்தன. தமிழ் மக்களின் எதிர்ப்பு இல்லாது, ஆயுதப்போராட்ட வலு இல்லாது, பலச்சமநிலை இல்லாது இக்குழுக்கள் கூறுவது போல் சமரசத்திற்குப் போனால், இறுதியில், சிங்கள தீவிர இனவாதம் விரும்புவது போல், தமிழின அழிப்புக்கே இது இட்டுச் செல்லும் என்பதை தமிழ் மக்கள் நன்கு புரிந்து கொண்டனர். இதனால், கொழும்பிலும், புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் இக்குழுக்களும், தனிநபர்களும் செய்த பொய்ப்பிரச்சாரங்கள் எடுபடவில்லை.

அதேவேளை, தமிழ் மக்களின் தேசியப் பிரச்சனைக்கான தீர்வு குறித்து தெளிவான கருத்துக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் வைக்கப்பட்டன. இக்கருத்துக்கள் தமிழ்மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அமைந்தன. தேசிய சுயநிர்ணய உரிமை என்பது "ஒரு மக்கள் தங்கள் அரசியல் தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் உரிமை" என்பதோடு, "பிரிந்து சென்று சுதந்திரமான புதிய அரசொன்றை அமைக்கும் உரிமையையும்" கொண்டது என்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூறினர். தமிழ் மக்களுக்கு "சுயநிர்ணய உரிமை உண்டு, ஆனால் புதிய அரசமைக்கும் உரிமை இல்லை" என்று சித்து விளையாட்டுக் காட்டவில்லை. "பன்மைச் சமூக நாடான சிறீலங்காவில், தமிழ் மக்கள் ஒரு சிறுபான்மையினர்" என்ற கருத்தை வலியுறுத்தி சிங்கள ஆதிக்கத்துள் தமிழ் மக்களை அமிழ்த்த விடுதலைப் புலிகள் வழி சொல்லவில்லை. தமிழ் தேசிய இனம், தமிழ் மக்கள், தமிழ் தேசம் என்று கூறும்போது ஒரே கருத்தையே வலியுறுத்தினர். அதாவது தேசிய சுயநிர்ணய உரிமை உடைய தமிழ் மக்கள் என்பதையே கூறினர். "தமிழ் மக்கள்கள்" என்று கூறி குழறுபடி செய்யவில்லை. தமிழ்மக்கள் ஒரு தேசிய இனம் என்று கூறும்போது அது சிங்கள மக்களுக்கு எதிரான கருத்தாகச் சொல்லப்படவில்லை. சிங்கள மக்களுடன் தமிழ் மக்கள் சமமானவர்கள் என்ற கூட்டுரிமை (Collective Right) பற்றிய கருத்தே அங்கு வலியுறுத்தப்பட்டது. பன்மைச் சமூகம் என்ற கருத்துக்கும் விடுதலைப் புலிகள் எதிரானவர்களாக இருக்க முடியாது. தமிழ்த் தேசியம் உருப்பெற்று, வளர்ச்சி அடைந்து, நிலைபெற்றுவரும் இக்காலகட்டத்தில், தமிழ்த் தேசியம் பன்மைச் சமூகமாகவே அமையும் என்ற உண்மையையும் தெளிவாக உணர்ந்தே உள்ளனர். இத்தகைய அடிப்படைகளின் மீது தமிழ் மக்களின் விடுதலையை நோக்கமாகக் கொண்டே சுதந்திரத் தமிழீத்திற்கான போராட்டம் இடம் பெற்றுவருகின்றது. அதேவேளை, இராணுவத் தீர்வின் மூலம், எமது மக்களை அடக்க முனையாது, சமாதான ரீதியாக, பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனையைத் தீர்க்க விரும்பினால், தமிழர்களின் வடகிழக்குத் தாயகத்தை அங்கிகரித்து சமஷ்டி முறையிலான தீர்வொன்றை அரசாங்கம் முன்வைக்கும் பட்சத்தில், அதனைப் பரிசீலிக்கத் தயாராக உள்ளதாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். இது தேசிய இனங்களுக்கிடையிலான சமன்பாட்டையும், தீவின் சகல மக்களும் சுபீட்சமாகவும், விடுதலை பெற்றும் வாழும் இலக்கையும் அடிப்படையாகக் கொண்டது.

சாரமற்ற சமாதான வழி, அகிம்சை வழி ஆகிய வெற்று வார்த்தைகள் இராணுவ ஆக்கிரமிப்பின் முன்னும், மிருக பலத்தின் முன்னும் பயனற்றுப் போயின. ஆயுதங்களைக் களைந்துவிட்டு, ஜனநாயக வழியில் தமிழ் மக்களது உரிமைகளைப் பெறுவோம் என்றவர்கள், இருந்ததையும் தொலைத்துவிட்டு, வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் எறியப்பட்டுள்ளதை தமிழ் மக்கள் நேர்தரிசனமாகவே கண்டுள்ளனர்.

ஜனநாயக போர்வையில் நடைபெறும் கொடிய சிங்கள ஆட்சிக்கெதிராக, ஆயுதந்தாங்கிய எதிர்ப்பியக்கமே (Resistance Movement) சரியான மார்க்கம் என்று உய்த்து உணரப்பட்டுள்ளது. மக்களின் ஆதரவுடன் நடைபெறும், ஆயுதப் போராட்டத்தினூடு வரப்பெற்ற பலத்தின் தளத்திலேயே சமாதானப் பேச்சு பலன் அளிக்கக் கூடியது மாத்திரமல்ல, சமாதான பேச்சே சாத்தியம் என்பதும் உணரப்பட்டுள்ளது. தேசிய இனங்களுக்கிடையிலான' சமத்துவத்தின் அடிப்படையிலும், பலச் சமநிலையின் அடிப்படையிலும், சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தி, அரசியல் தீர்வுகாண சமாதானக் கதவுகளை விடுதலைப் புலிகள் எப்போதும் அகலத் திறந்தே வைத்துள்ளனர்.

தமிழீழத்தில் ஆயுதங்கள் மக்களின் பாதுகாப்புக்கும், உயிர் வாழ்க்கைக்கும், சுபீட்சமான எதிர்காலத்துக்குமான கட்டுப்பாடான பிரயோகத்தைத் தவிர்க்க முடியாதவாறு கொண்டுள்ளன. மேலும் ஆயுதங்கள் அல்லது ஆயுதப்படைகள் சட்டவரையறையையும், ஒழுங்கமைவையும் கொண்டதாக தமிழீழ தேசிய ஆயுதப்படைகளாக உருவாக்கம் பெற்றுவருகின்றன. "ஆயுதக் கலாச்சாரம்" என்பது கட்டுப்பாடற்ற, மக்கள் தளமற்ற சிறு குழுக்களால் ஆயுதங்கள் கையாளப்படும் போது ஏற்பட வாய்ப்புண்டு. இத்தகைய "ஆயுதக் கலாச்சார" நடவடிக்கைகளையே வெளிநாடுகளில் இத்தகு குழுக்கள் மூலம் பரப்ப நாசகார சக்திகள் முயன்று வருகின்றன. இலட்சியப் பற்றற்றவர்கள், கொள்கைப் பிடிப்பற்றவர்கள், மனித உணர்வற்றவர்கள், சுயநலவாதிகள், காக்காய் பிடிப்பவர்கள், அண்டிப் பிழைப்பவர்கள், காட்டிக் கொடுப்பவர்கள் ஆகியவர்களால் செய்யப்படும் ஆயுதக் கையாடல்களே வெளிநாடுகளில், தமிழீழப் போராட்டத்துக்கு எதிரான செயல்பாடுகளாக வளர்ந்துவருகின்றன. மேலும் சமூகத்திலுள்ளும் ஆயுத மோகம் என்ற வெறித்தனமாக, மனநோயாக "ஆயுதக் கலாச்சாரம்" பரப்பப்பட இச்சக்திகள் காரணமாய் அமைந்து விடுகின்றன. தமிழீழ விடுதலைப் போராட்டம், தாயகத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தில் வளர்ச்சி பெற்று வருகின்றது. விடுதலைப் புலிகளின் ஒழுங்கமைக்கப் பட்ட ஆயுத நடவடிக்கைகள் தாயகப் பகுதிகளை மீட்பதற்கு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. வெளிநாடுகளில் போராட்டத்துக்கு ஆதரவான அரசியல், கலாச்சார வேலைகளை ஆற்றுவதையே தமிழீழ போராட்ட ஆதரவாளர்கள் முன்னெடுத்து வருகின்றனர். வெளிநாடுகளில் குறிப்பாக தமிழ் மக்கள் தஞ்சம் அடைந்துள்ள மேற்கு நாடுகளின் அங்கீகாரத்தைப் பெறும் நோக்குடன் விடுதலைப் புலிகள் தமது அரசியல் நடவடிக்கைகளை வெளிநாடுகளில் ஆற்றி வருகின்றனர். தமிழீழத் தேசிய அரசு உருவாகி வரும்போது, அதற்கான கட்டுமானங்கள் எழுந்து வரும் நிலையில் சர்வதேச சமூகத்தின் தார்மீக மற்றும் சகலவிதமான ஆதரவைத் திரட்டுவதிலேயே விடுதலைப் புலிகள் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டு வருகின்றனர். எமது விடுதலைக்கு சர்வதேச அங்கீகாரம் என்ற அடிப் படை இலக்கு நோக்கி தமது முயற்சிகளைக் கூர்மைப்படுத்தி வருகின்றனர். மேலும் சிறீலங்கா அரசாங்கத்துக்கு சில நாடுகள் கொடுத்து வரும் நிதி மற்றும் ஏனைய உதவிகளையும் நிறுத்துவதற்கும் அயராது பாடுபடுகின்றனர். தமிழீழம் உருவாகும் ஸ்தூலமான மாற்றங்களைக் கவிழ்த்துக் கொட்டும் நோக்கம் எதிரிகளுக்கே உண்டு. அவர்களே குழப்பத்தை விளைவித்து சர்வதேச அங்கீகாரத்திற்கான பயணத்தைத் தடைபோட விரும்புவார்கள். அவர்களே சட்டவிரோத, குற்றவியல் செயல்களைப் புரிந்து, மேற்குலக அரசாங்கங்களினதும், மக்களினதும் வெறுப்பையும் கோபத்தையும் எழுப்பி எமது சட்டபூர்வ செயல்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு செய்ய விழைவார்கள். விடுதலைக்குக் குந்தகம் விளைவிக்க முனைவார்கள். விடுதலைக்கு ஆதரவான சர்வதேச சூழ்நிலைகளைக் குழப்பும் நோக்கத்துடன், நாசகார சக்திகள் திட்டமிட்டு சிறு தமிழ்க் குழுக்கள், தனிநபர்கள் மூலம் செய்யும் சதி நடவடிக்கைகள் குறித்து தமிழ் மக்கள் விழிப்பாக இருந்து விடுதலைக்காகச் செயல்படுமாறு வேண்டப்படுகிறார்கள்.

# நானுன்னை இனி எங்கு தேடுவன்?

கடல் கொந்தளித்து
ஜனங்களின் மனங்களைப் போல!
பனிக்காற்று உடலைத் துளைத்து
கூரிய ஊசிகளைப் போல!
மேகம் நிலவுக்கு விடை கொடுத்து
மூளியாய் இருண்டு கிடந்தது!
வலது கண் அடிக்கடி துடித்தது!
கனவுகள் திரைகளாய்
தூக்கத்தை மறைத்தது!
இதயம் தாய்மண்ணை
நினைத்து தவித்தது!
நாழிகள் மரத்தனமாய்
ஓட மறுத்தது!
மின்னல் கோடிட்டு
இடியொன்று முழங்கியது!
கம்பிகளூடாய் சேதிகள் வந்தது
களத்தில் அவன் காவியமானான் என்று!!

கடலும் காற்றும் பனியும் மேகமும்
நிலவும் உலக ஒலிகளும்
எங்கோவொரு அந்தத்தில்
அடைந்து போயின!
ஸ்தம்பித்த பூமியில், ஜில்லிட்ட குருதியில்
'சபா'...! என்ற கூவலின் நீண்ட கேவல்!
மௌனத்தின் விறைப்பில், ஏமாந்த கோபத்தில்
'மயூரன்'... என்ற விநோதமான விக்கல்!
என் இனிய உடன் பிறப்பே!
ஆசைத் தம்பியே!
அழகிய அந்த ஈழ பூமியில்
நீயெங்கே உறைந்து கொண்டாய்?

கடல் கடந்து, வான் பறந்து
மலை தாண்டி மண் குதித்து
படைமீறி வந்தாலும்
நானுன்னை இனி எங்கு தேடுவேன்?
தம்பி! நானுன்னை இனி எப்படித் தழுவுவேன்?

கொடிய பசியுடன்
கூடவே தோழருமாய்
திடுமென்று என் வாசலை
தட்டிய போதெல்லாம்
நானிட்ட சாதமும் சாதாரண குழம்பும்
ருசியென்று உண்பாயே!
ஒரு கையில் சுமையேந்தி
மறுகையால் உதவிசெய்வாய்!
பிறர் கஷ்டம் பொறுக்காத
தூயவனே! மயூரா!
நானுன்னை இனி எங்கு தேடுவேன்?
நானுன்னை இனி எப்படித் தேடுவேன்?

சந்திரா இரவீந்திரன்
(லண்டன்)

(11.11.1993ல் பூநகரித் தாக்குதலில் வீரமரணமடைந்த என் அன்புத் தம்பி சபா (மயூரன்) வுக்காக)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "ஆயுதமல்ல"

"என்னைத் துன்புறுத்துபவன்
என்னை வீரனாக்குகிறான்."
"அடக்கப்படும் மக்களுக்கு
புரட்சி செய்ய
முழு உரிமை உண்டல்லவா ?"

"ஒரு நேர்மையான போர்
கேடான போரை
தோற்கடிக்க முடியும்" - என்பார்
தோழர் மா. வோ

தமிழீழம் மலருது அதனால் தான்
சிங்கள் தோற்பது இதனால் தான்.

வதை முகாம்களில்
ஈழ இளைஞர்களை
பதைபதைக்க கொன்றொழித்தும்
எம்மினப் பெண்களை
பாலியல் வன்முறையால் சிதைத்தழித்தும்
புத்தனின் அரசென்று கதைகதைக்கும்
சிங்கள இனவெறி அரசை
வீழ்த்தும் விதைதான்
விடுதலைப் புலி மறவர்கள்.

தவளை பாய்ச்சலிலேயே
காய்ச்சல் கண்டது
சிங்கள கொடுநெறியாளர்களுக்கு.

"மூன்று முறை அறைந்தால்
புத்தனுக்கும் சினம் வரும்" என்பார்கள்
நாங்கள் புத்தன் அல்லர்
மூன்றுமுறை பொறுத்திருக்க.
"ஆம்"
அறைந்த கைகளையும்
அறைவதற்கு அணியமாகும்
கைகளையும் அறுத்தெறிவோம்.

எங்கள் அழிவில்தான்
உங்களின் வாழ்க்கை
மலரும் என்றீர்
நாங்களும் உடன்பட்டோம்
உங்களை அழிக்க, ஒழிக்க,
தமிழினம் செழிக்க.

என்னினிய எதிரிகளே !
நாங்கள்
எந்தக் கருவியை
ஏந்தவேண்டுமென்று
நீங்களே முடிவெடுத்தீர்.
உங்களின் முடிவை
நீங்களே உறுதி செய்தீர்.
"ஆம்"

83' யூலை கலவரம் அன்று
93' பூநகரி நிலவரம் அன்று
பத்தாண்டில் விடுதலைப் புலிகள்.

கடற்புலி, கரும்புலி, பெண்புலி
வரிப்புலியாக மாற்றியது
ஈழப்போர்
ஏனெனில்... ?
நாங்கள் ஏற்றி வந்த
வெண்கொடியை
செங்கொடியாக்கியது நீங்கள்தானே ?

எங்களின் உரிமைகளுக்காக
குரல் கொடுத்த போதெல்லாம்
குரல் வளையை நெறித்தது
உங்களின் அதிகாரக் கைகள் தானே !

அமெரிக்க கழுகிடமிருந்து
வியட்நாம் கோழி
தன் குஞ்சுகளை
இறைக்கைக்குள் காப்பாகக்காத்து
வீரமுடன் போர்புரிந்து
கந்தக நிலமான
வியட்நாம் மண்ணின் மேல்
மறந்தும் பிறந்துவிடாமல்
சிறகை மட்டுமல்ல
இறக்கையையும் இழக்கசெய்தனர்.

இரஷியக் கரடி
ஆஃப்கான் மண்ணை
செங்குருதியாக்க நினைத்தது
கனவாகி போனது
முஜாஹூதீன் கெரில்லாக்களால்.
பொறியில் மாட்டியபின்
கரடிக்கத்தாய் கத்தியும்
பயனின்றி
வாலிழந்த கரடியாய்
விரைந்தோடியது இரஷியக் குகைக்கு.
ஆஃப்கான் பொம்மை அரசின்
நஜிபுல்லாவை போல
தமிழீழ மண்ணிலிருந்து
விரட்டப்பட்டான் வரதராசப் பெருமாள்.

இப்படி... இப்படியாக...
இப்படித்தான்
வியட்நாமும்,
ஆஃப்கானும்,
கற்றுத்தந்த பாடத்தை
படிக்க மறந்த
சிங்கள இனவெறி கொடுநெறி அரசே !
யாழ் தேவியை
பாழ்தேவியாய் ஆக்கிய
புலிகளின் வலிமை
இனியாகில் உம் அறிவிற்கு எட்டுமா ?

"ஆயுதம் அல்ல
மக்களே உறுதியான ஆற்றல்"
மீண்டும் ஒருமுறை
பூநகரிப் போரால்
உறுதி செய்தது.

புதுவை- தமிழ்நெஞ்சன்,
புதுச்சேரி, தமிழ்நாடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறுகதை

# புயலாக மாறும் பிஞ்சுகள்

யன்னலினூடாகப் புகுந்த மாலை வெயிலின் உறைப்பு. எண்ணங்களை அலையவிட்டபடி தையல் வேலையில் மூழ்கிப் போயிருந்த மைதிலி, தன் நிலைக்குத் திரும்பினாள்.

"நேரத்தோடை போனால்தான் கடைகள் பூட்டமுந்தித் தையலுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு வந்திடலாம். பொங்கலுக்கு இன்னும் மூண்டு நாள்தானே கிடக்கு. அதுக்கிடையிலை கிடக்கிற சட்டையள் எல்லாம் தைச்சு முடிக்கவேணும். எல்லோரும் பொங்கலுக்குப் போகவேணும் எண்டு சொல்லித்தான் தந்தவை."

தனக்குள் சொல்லியபடி மைதிலி தையல் மெசினை மூடிவிட்டு எழுந்தாள்.

"அம்மா என்னையும் கூட்டிக் கொண்டு போறீங்களே கடைக்கு" என்றாள் தர்சினி.

"இல்லைக் குஞ்சு, நீங்கள் பக்கத்து வீட்டு வாணி அக்காவோடை விளையாடிக் கொண்டிருங்கோ. நான் டக்கெண்டு போயிட்டு வந்திடுறன். பிள்ளைக்குச் சொக்கா வாங்கிக்கொண்டு வாறன்." என்று சொல்லிக்கொண்டு அவசரமாகப் புறப்பட்ட மைதிலி, தர்சினியைப் பக்கத்து வீட்டிலை விட்டுவிட்டு, ஒழுங்கையில் இறங்கி விறுவிறென்று நடந்தாள். பொழுது சரிவதற்குள் தண்ணீரூற்றுக்குப் போய்த் திரும்பிவிட வேண்டுமென்ற அவசரம் அவளுக்கு.

தர்சினியும் வாணியும் 'பில்டிங் புளொக்ஸ்' ஸைப் பரப்பி, பல விதமான உருவ அமைப்புக்களைச் செய்து விளையாடிக்கொண்டிருந் தனர்.

இருந்தாற்போல் வாணிக்கு வற்றாப்பளைப் பொங்கல் ஞாபகம் வரவே, "தர்சினி அம்மாட்டைக் கேட்டிட்டுப் பொங்கலுக்குப் போறதுக்கு நீர் எங்களோடை வாருமன், எங்கடை மெசினிலை போகலாம். கனபேர் வருவினம், எங்கட மெசினிலை போறதுக்கு. உங்கட அம்மாதான் கோயிலுக்குப் போறதில்லையே"

ஆறு வயது நிரம்பிய தர்சினி சொன்னாள் "அம்மா சொன்னவா, அப்பாவும், அண்ணாவும் சாமியிட்டைப் போட்டினமாம். அதால அவையத்தான் கும்பிட வேணுமாம். நாங்கள் ஒவ்வொரு நாளும் அவையின்ரை படத்துக்குத்தான் பூவைச்சு, குத்துவிளக்குக் கொளுத்திக் கும்பிடற நாங்கள்."

இதைகே கேட்டுக்கொண்டிருந்த வாணியின் அம்மம்மா, "எடி விசரி, அவளை கோயிலுக்கு ஏன் கூப்பிடறாய்? போன வருசம் பொங்கலுக்கு எண்டு, போய்த்தானே மைதிலி புருசனையும் பிள்ளையையும் பறிகொடுத்தவள். பாவம்! அவளுக்கு இந்தமுறை போக மனம் வருமே?"

தர்சினி குறுக்கிட்டாள். "அம்மம்மா, அப்பாவும், அண்ணாவும் இந்தப் பொங்கலுக்கு வந்திடுவினமே; சாமி இனி விட்டிடுவரே"

வாணியின் அம்மம்மாவின் நிலை தர்மசங்கடமாகியது.

"பிள்ளை தர்சினி, உன்ரை அப்பாவும், அண்ணாவும் செத்துப் போட்டினம். செத்தவை திரும்பி வரமாட்டினம். இது தெரியாதே உனக்கு"

தர்சினி வெடுக்கென்று கேட்டாள்.

"ஏன் அம்மம்மா பொய் சொல்லுறியள். அப்பாவும் அண்ணாவும் சாமியிட்டைத் தானே போனவை. முந்தி, நீங்கள் தானே என்னைத் தூக்கிக் காட்டினனீங்கள். அப்பா சாமி மாதிரி கண்ணை மூடிக்கொண்டிருந்தவர். மாலையள் எல்லாம் போட்டு சாமியைத் தூக்கிற மாதிரித்தானே தூக்கிக் கொண்டு போனவை. எல்லாருந் தானே சொன்னவை அப்பா சாமியிட்டைப் போட்டார் எண்டு."

## மலரன்னை

"எடி பிள்ளை; நான் என்னெண்டு உனக்கு விளங்கப் படுத்துறது. போனவருசம் பொங்கலுக்கு, அப்பாவும் நீங்களும் போனனீங்களெல்லோ"

"ஓம் அம்மம்மா, போனனாங்கள்."

"அப்பத்தான் ஆமிக்காரன் காம்பிலை இருந்து ஷெல் அடிச்சவன். சனக்கூட்டத்துக்கை ஷெல் விழுந்து கனசனம் செத்துப் போச்சுதுகள். அதிலை கொப்பரும் கொண்ணையும் செத்துப் போச்சினமடி"

"அம்மம்மா ஷெல் எண்டால் என்ன? நாங்கள் கோயிலுக்கு வெளியாலை நிக்கேக்கை இடி முழக்கம் கேட்டுது. நான் பயத்திலை கண்ணை இறுக்கி மூடிட்டன்"

"எடி பிள்ளை. உன்னைத் தூக்கி எறிஞ்சுபோட்டுது. நீ மயங்கிப் போனாய். கனபேர் ரெத்தவெள்ளத்துக்கை கிடந்தவை. எக்கச்சக்கமான ஆக்கள் காயப் பட்டு அதுக்கை கிடந்தவை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அதிலைதான் கொம்மாவுக்கும், கையிலை காயம்பட்டு மூண்டு விரல் இல்லாமல் போயிட்டுது. கொம்மாவின்ரை கையைப் பாத்தனியல்லோ, எல்லா விரலும் இருக்குதோ?"

"அம்மம்மா நீங்கள் சொல்லுறது சரிதான். எண்டாலும் நீங்களும்



எனக்குப் பொய்தானே சொல்லிப் போட்டியள், அப்பா சாமியிட்டைப் போட்டாரெண்டு."

"நீ சின்னப்பிள்ளை. பயந்திடு வாய் எண்டுதான் அப்பிடிச் சொன்னது."

"அம்மம்மா, அப்ப எங்கட அப்பாவும் அண்ணாவும் வரமாட்டி னமோ"

இலேசான சிணுக்கத்துடன் கேட்டாள்.

"என்னெண்டு பிள்ளை வாறது. செத்தால் செத்ததுதான். பிறகு வரஏலாது"

அம்மம்மாவிற்குப் பெரியதொரு உண்மையை அந்தப் பிஞ்சு உள்ளத்துக்கு உணர வைத்துவிட்ட பெருமை.

"தர்சினி! தர்சினி!"

மைதிலி தண்ணீரூற்றுக்குப் போய்த் திரும்பிவிட்ட அறிகுறி.

"வாறன் அம்மா" என்று கூவியபடி ஓடினாள் தர்சினி. அம்மா, அன்போடு வாங்கிவந்து கொடுத்த சொக்லேட் அவளுக்குச் சுவைக்கவில்லை; அம்மம்மா புரியவைத்த உண்மை சுவையை மழுப்பிவிட்டது. இரவு சாம்பிடும் போது தரர்சினி அம்மாவிடம் கேட்டாள்.

"அம்மா காம்பிலையோ ஆமிக்காரர் இருப்பினம்? ஏன் அம்மா ஷெல் அடிக்கிறவை? ஆக்களைக் கொல்லவோ?"

திடுக்கிட்டாள் மைதிலி.

"தர்சினி ஆர் சொன்னது இதெல்லாம்?"

"வாணியின்ரை அம்மம்மாதான் சொன்னவ. எனக்கு எல்லாம் தெரிஞ்சு போச்சு. அப்பாவும் அண்ணாவும் இனி வரமாட்டினம். நீங்கள் பொய் சொல்லிப்போட் டியள்."

அம்மாவின் முகத்தைப் பார்த்த தர்சினி துணுக்குற்றாள். கண்ணீர் அருவியாய் வழிந்தோட - குரல் தழுதழுக்க - மைதிலி தன் மகளை இறுக அணைத்துக்கொண்டாள்.

❁

அன்று வைகாசிப் பொங்கல் நாள். ஊரே அமளிப்பட்டது. மைதிலிக்கு மனமே சரியில்லை. அவளுக்கு இருப்புக்கொள்ளவில்லை. கடந்த வருட நிகழ்வுகள் நினைவில் நிழலாடின.

வீட்டில் எல்லோருக்கும் கணவன் புது உடுப்புகள் வாங்கித் தந்தது; எல்லோரும் தடபுடலாய் வெளிக்கிட்டுக் கோயிலுக்குப் போனது; பிறகு தான் மயக்கம் தெளிந்து விழித்தபோது யாழ். போதனா வைத்தியசாலையில்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கையில் கட்டுப்போட்ட நிலையில் கிடந்தது; தனது கணவன், பிள்ளையின் சடலங்களைக் கூட காணக்கிடைக்காமற் போனது; தனது ஒரே பற்றுக்கோடாகிய மகள் தர்சினியை வளர்த்து ஆளாக்கி விடவேண்டுமெனத் தான் திடசங்கற்பம் பூண்டது; தன் எண்ணங்களை, கணவனையும், மகளையுமே நினைத்து நினைத்து அலைய விடாமல் ஒருநிலைப்படுத்தத் தனக்குத் தெரிந்த தையற்கலையைத் தேர்ந்தெடுத்தது- என்று எல்லாவற்றையும் அசைபோட்டவண்ணம் அமர்ந்திருந்தாள்.

அப்பொழுது "அம்மா, அண்ணா இனி வரமாட்டானெல்லே. அவன் விளையாடுற 'ஆமிசெற்'றை அலுமாரிக்குள்ள வைச்சிருக்கிறீர்கள். அதை எடுத்துத் தாங்கோம்மா, நான் விளையாடப் போறன்" என்று கெஞ்சினாள் தர்சினி.

பிஞ்சு உள்ளத்தை நோகவிடக் கூடாது என்ற நோக்குடன், அலுமாரியைத் திறந்து, அதைத் தேடி எடுத்துக் கொடுத்தாள் மகளிடம்.

"கவனமாய் வைச்சிருக்க வேணும் குஞ்சு, அண்ணையின்ரை கைபட்ட பொருளெண்டுதான் பக்குவமாய் வைச்சிருந்தனான்"

அவளது வார்த்தைகளை முந்திவிட்டன, கண்ணீர்த் துளிகள். தர்சினி அதைக் கவனிக்கவில்லை. 'ஆமிசெற்' கையில் கிடைத்த மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தபடி ஓடினாள்.

இடையில் அறுபட்ட நினைவுகள் மீண்டும் தொடர்ந்தன. நீண்ட நேரமாக அப்படியே சமைந்துவிட்டாள். ஏதோ எரிந்து கருகும் மணம் மூக்கைத் துளைக்கவே மைதிலிக்குத் தான் அடுப்பில் அரிசி வேகவைத்த நினைவு வந்தது. அவசரமாக குசினியை நோக்கி விரைந்தாள்.

குசினிக்குள் யாரோ கதைப்பது போல் குரல் கேட்டது. கிட்டப் போன பின்தான் அது தர்சினியின் குரல் என்று புரிந்தது. 'தர்சினி யாரோடு கதைக்கிறாள்' என்று எண்ணியவாறு குசினிக்குள் நுழைந்தவள், துணுக்குற்று அப்படியே நின்றுவிட்டாள்.

ஆமி செற்றில் இருந்த ஆமியின் உருவங்களை ஒவ்வொன்றாக எடுத்து ஒரு தடியினால் அடித்து, அடித்து எரியும் அடுப்புக்குள் போட்டுகொண்டிருந்தாள் தர்சினி.

"டேய்! ஆமிக்காரா நீதானே அடிச்சு ஆக்களைக் கொல்லுறது? இனிமேல் அடிப்பியா! சொல்லுடா! சொல்லுடா! உன்னை அடுப்புக்கை போட்டு எரிச்சால் தான் சரி; அப்பத்தான் இனி அடிக்கமாட்டாய்."

உரத்து ஏசியபடி, கருகி எரியும் அந்த உருவங்களை உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் தர்சினி.

நன்றி: வெளிச்சம்

# நீர்வளம் உண்டு; நிலவளம் உண்டு

காங்கேசன்துறை வீதி, மருதனாமடம் சந்திக்குச் சற்றுத் தள்ளி உள்ளது காமதேனு கால்நடை விவசாயப் பண்ணை. கண்ணுக்குக் குளிர்வாக... 1991 - ஐப்பசி மாதம் அடிக்கல் நாட்டப்பட்டுத் தொடங்கியது. விவசாயம், பழமரச் செய்கை, காடு வளர்ப்பு, கோழிப் பண்ணை, கால்நடைத் தீவன உறபத்தியாலை, பாற்பண்ணை, நல்லின ஆடுகள் மூலம் சினைப்படுத்துதல் என்பன உட்பிரிவுகளாக உள்ளன.

65 பரப்பு தோட்ட நிலம்- விரிந்து பரந்து கிடக்கிறது. வாழைகள் குட்டிகளும் குலைகளுமாக குளுமையளிக்கின்றன. கத்தரி, மிளகாய் நாற்று மேடைகள் ஒரு புறம் சோளம் (பத்ரா இனம் - 3 மாதப் பயிர்) சுமைதாங்கித் தலைசாய்ந்து வரவேற்கிறது. வீசிடும் காற்றில் வெங்காயப் பயிர் அலை அலையாக நெளிகிறது. பண்படுத்தப்பட்ட நிலங்கள் பயிர்ச்செய்கைக்காக காத்துக்கிடக்கின்றன. கால்நடைத் தீவனப் புல்லினங்கள் பயிர்ச்செய்கைக்கு பொருந்தாத நிலங்களில் (வேலியோரம், பனைவளவு) நடப்பட்டுள்ளன.

பழமரச் செய்கை மழலைப் பருவத்திலே உள்ளது. வளர்ச்சிக்கு அடிகோலும் செயற்பாடுகள் துரிதமாகவே உள்ளன. காடு வளர்ப்புப் பகுதி திறம்படச் செயலாற்றுகிறது. மாவீரர் தினத்தில் கோட்டங்களுக்கான மரக்கன்றுகள் விநியோகம் பிரதான இடம் பெறுகிறது.

கோழிப் பண்ணை மிகுந்த லாபகரமாக உள்ளது. மூன்று பெரிய கோழிக்கூடங்கள், அருகே விற்பனை அலுவலகம். நல்லின ஒரு நாட் குஞ்சுகளை வாங்கி 1 மாத வயது வரை தடுப்பூசிகள் ஏற்றிப் பராமரித்தல்; பின்னர் பொதுமக்களுக்கு விற்றல், நல்லின அடை முட்டைகள் விற்றல், இறைச்சி விற்றல் என்பன நடைபெறுகின்றன. இவை இக்கோழிப் பண்ணைக்குப் பொதுமக்களிடமிருந்து நிறைய வரவேற்பையும் கேள்வியையும் பெற்றுத்தருகிறது. எதிர்காலத்தில் மேலும் இரு கோழிக்கூடங்கள் நிறுவி 500 கோழிகள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

'பண்ணையில் குறிப்பிடவேண்டிய மிகமுக்கியமான அம்சம்- 1993- தையில் ஆரம்பிக்கப்பட்ட கால்நடைத் தீவன உற்பத்தி ஆலை.

கறவைத் தீன், வளர்பருவத் தீன், முட்டைத் தீன், குஞ்சுத் தீன் என நான்குவகைத் தீன்களும் உள்ளூர் உள்ளீடுகளைக் கொண்டு தயாராகிறது. மாத உற்பத்தி சராசரி 30 தொன் ஆக உள்ளது. கலவை இயந்திரம் ஒன்றில் தேவையான திருத்தங்கள் செய்து பொருத்துவதாலும் அரவை இயந்திரம் ஒன்றினைப் புதிதாக இணைப்பதாலும் உறபத்தியில் அதிகரிப்பு ஏற்படுத்த ஆலை நிர்வாகிகள் திட்டமிட்டுள்ளனர். கால்நடைத் தீவனத்தின் தரம், அதன் உயர்ந்தளவான விற்பனையில் தெரிகிறது. வழங்கலை விட கேள்வி அதிகமாக உள்ளது. வலிகாமம், யாழ்நகர், தென்மராட்சி என வாடிக்கையாளர் எல்லை விரிகிறது.

பாற்பண்ணையில் தற்போது பல நல்லின பசுக்கள் கன்றுகளுடன் பராமரிக்கப்படுகின்றன. புதிதாகப் பல தொழுவங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

நல்லின ஆடுகள் மூலம் சினைப்படுத்தலும் நடைபெறுகிறது.

மொத்தத்தில் விலங்குவேளாண்மையும் விவசாயமும் ஒன்றுக்கொன்று துணையானவை என்ற அடிப்படை உண்மையை உள்வாங்கி ஆரம்பிக்கப்பட்ட இக் கூட்டுப்பண்ணை தேச முன்னேற்றத்தின் சின்னமாக அமைகிறது. மக்களின் வரவேற்பைப் பெற்று மிகுந்த லாபகரமாக இயங்கும் இக்கூட்டுப்பண்ணை எதிர்காலத்தில் அமையப்போகும் கூட்டுப்பண்ணைகளுக்கு முன்னோடியாக விளங்குகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வேண்டுவது ஒன்று!

காலவெள்ளம்
ஓடிக்கொண்டிருந்தது.
பலதையும் அள்ளி உருட்டியபடி
அது ஓடிக்கொண்டிருந்தது!

காலப்பெருவெள்ளம்!
மனித சமுதாயங்கள், தேசங்கள்
எல்லாம்
உருண்டோடிக்கொண்டிருந்தன!

இவற்றைப் பார்த்தும்
பார்க்காததைப் போல வானம்
அமைதியாயிருந்தது. முகில்கள்
நின்றும் அசைந்தும்
நகர்ந்தும்கொண்டிருந்தன.

இரவு தோன்றுவதற்கு
முன்னதாக பறவையொன்று
தன் வீடு நோக்கிச்
சென்றுகொண்டிருப்பது
தெரிந்தது.

இதற்கு முன் வந்துவிட்ட
இன்னும் சில இனங்கள் அந்த
உச்ச மரக்கொப்புகளில்
அமர்ந்து குரல்
தந்துகொண்டிருந்தன.

காலவெள்ளம் ஓடுகிறது.

இன்று அங்கு மரங்கள் இல்லை.
ஓலை வீடுகள், வயல்கள்,
பின்னர் ஓட்டுக் குடிமனைகள்,
அதன் பின்னர் அவையும்
திக்கிரையாகி-

பரந்த வெளியொன்று
தெரிகிறது.

தமிழர் இந்த வாழ்விடத்தை
இழந்து இடம்பெயர்ந்து
விட்டனர்.

எங்கு?

அகதி முகாமில் இடித்து
நெருங்கி நலிந்து, நோயும் சொறி
சிரங்கும் கொண்டு தம்
குழந்தைகளுடன் நிற்கின்றனர்-
'அகதி முகாம்' என்ற
பெயர்கொண்ட அடைப்பில்!

காலம் செய்யும் கோலம்
தெரிந்தது. அதனை வைது
திட்டாது இருக்கமுடியவில்லை!

ஆனால் ஓடிகொண்டிருந்தது.

வானம் மேலே நின்று சிரிப்பது
தெரிந்தது!

"மனிதரைப் பார்" என்றது
அதே வானம்.

எனக்கு எம் அகதி முகாம்கள்
மீண்டும் தெரிந்தன. இங்கும்
பிறநாட்டிலும் அகதிகளாய்
நிற்கும் எம்மவர் தெரிந்தனர்.
"உன்னை மட்டுமல்ல!
பிறமனிதரையும் பார்!" என
அதட்டிற்று அது.

"அதோ!" என அதன் குரல்
மீண்டும் கேட்டது.

அங்கு சந்திர மண்டலம்
தெரிந்தது. அதில் ஒரு மனித
சின்னம் தெரிந்தது!
அங்கு 1969 யூலை என்ற
தேதியும் நீல் ஆம்ஸ்ரோங்
உட்பட மூவரின் பெயர்களும்
என் கண்ணுக்குத் தெரிந்தன.

"அவ்வளவுதானா?" என
ஏளனம் செய்தது வானம்!

உற்றுப் பார்த்தேன். தங்கள்
பெயருடன் தங்கள் நாட்டின்
பெயரையும் பதித்திருப்பதைக்
கண்டேன்!
"தம் நாடுதான் அவர்களின்
வாழ்வு!"

"சரி, இன்னும் பார்!" என
அதிர்ந்தது ஒலி.

முன்னைய 'அராபியப்
பாலைவனம்' இன்று
எண்ணெய் வள நாடுகளாய்த்
தெரிந்தன! அதில் சவூதி,
யேமன், ஓமான், குவைத்,
துபாய் எல்லாம் தெரிந்தன.
அங்கும் எம்மவர் கூலிதேடிப்
போவதே தெரிந்தது.
"இன்னும் அகலப் பார்!"

முன்பு 'இருண்ட கண்டம்' என
அழைக்கப்பட்ட ஆபிரிக்கா
தெரிந்தது!

இன்று 1950 ஆம் ஆண்டின்
பின், போர்க்கொடியும்
பட்டொளியும் பறக்கும் புத்தம்
புது நாடுகள் பல, அந்த
ஆபிரிக்கக்கண்டத்தில் எழுந்து
நிற்பது தெரிந்தது.
"இன்னும் பார்!" எனத்
தொடர்ந்தது குரல்.

காலவெள்ளம் பதித்த பல
சுவடுகள் தெரிந்தன.

200 வருடத்திற்கு முன்னைய
பிரெஞ்சுப் புரட்சி தெரிந்தது.

1776- பிரித்தானியரிடமிருந்து
தன்னை விடுவித்த அமெரிக்க
சுதந்திரப் பிரகடனம் தெரிந்தது.
அதன்பின் அது கண்ட
முன்னேற்றம் தெரிந்தது.

இதற்கும் அடிகொடுத்து
தன்னைப் போர்மூலம் மீட்பித்த
வியட்னாம் தெரிந்தது. யப்பான்
தெரிந்தது. மக்கள் சீனா, கியூபா
தெரிந்தன. சோமாலியா
தெரிந்தது. கிழக்கு ஆசியக்
கண்டம் தெரிந்தது.
"எதற்கும் மூலவளம் வேண்டும்.
அயராத உழைப்பு வேண்டும்"
என்றது என் மனம்.

"அவை எதுவும் போதாது"
என்றது ஒலி!

"பின்?"

"நின்று நிலைத்து நிமிர்ந்து வாழ
ஒரு நிலம் வேண்டும். நீ வாழ
வேண்டின், உனது நாடு
உனதாக வேண்டும்.

இதை அடுத்து வருவதே
அனைத்தும்!"-

❁

- நாக. பத்மநாதன்-

www.tamilarangam.net

# யாழ் தேவி 93

புயலுடன் மோத - ஓர்
பூதம் புறப்பட்ட கதையிது
புண்ணிய யாகத்தின் புகைமூட்டத்தில்
நிலக்கரிப் புகையின் நிறம்
தெரியாமல் போனதுவே

பச்சைக் கொடி காட்டி
உனக்குப் பிரியாவிடை தந்தவன்
தமிழர்தம் செங்குருதியால்
அதனைச் சிவப்பாக்க நினைத்திருப்பான்.
மகா பாரதத்தின் பார்த்தசாரதி
என்று சிசிலுக்கு ஓர் எண்ணம்.

எமது தண்டவாளங்கள் - வெறும்
ஜடங்களின் சேர்க்கையல்ல.
வேள்வித் தீயினில் வெதுப்புண்டாக்கிய
வேங்கைகளின் சேர்க்கைகள்.
நீ நகரும் போது - இல்லை
நகர நினைத்த போதெல்லாம்
எத்தனை தடவைகள் - உன்
அபாயச் சங்கிலி இழுக்கப்பட்டது - இது
ஏனோ உனக்குத் தெரியாமல் போனது
ஆச்சரியம்தான் !

உன்னை நகரவிட்டதெல்லாம்
ஒவ்வொரு தண்டவாளப் பலகையிலும்
எழுதப்பட்டிருக்கும் - எமது
போர்ப்பரணியைப் படித்துவரத்தான்.

இதென்ன கார்காலத்து
காதல் உலா என்றா நினைத்தாய்?
போர்முரசு கொட்டும்
போர்க்கால நேரமிது.

மறம் கொண்ட எமது
மைந்தர்கள்
தமது திறம் கொண்டு - உனக்கு
தீயை மூட்டிய செய்தி
எமது வீர வரலாற்றின்
ஒரு காவியப் பதிவு.

- திலகா -

*பங்குனி 94 இதழில், ஓவியர் மகாவினால் 'யாழ்தேவி 93' என்று தலைப்பிட்டு வரையப்பட்டிருந்த ஓவியத்திற்கான கவிதை.*

## தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் புனர்வாழ்வுப் பணிகளும்

தமிழீழத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் நிவாரணம், புனர்வாழ்வு ஆகிய சேவைகளை ஆற்றும் அரசசார்பற்ற நிறுவனமாக விளங்குகிறது.

இம்மாவட்டங்களில், தென் தமிழீழத்திலிருந்து ஏதிலிகளாக வந்த மக்களைப் பராமரிப்பதோடு, தென்தமிழீழத்தில் ஏனைய நிறுவனங்களூடாக மறைமுகமான நிவாரணப் பணிகளையும் புரிகிறது.

புனர்வாழ்வுக் கழகத்தின் பணிகளாவன:

1. இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயரும் மக்களுக்கு உடனடி தங்குமிட, உணவு வசதிகளைச் செய்துகொடுத்தல்,
2. தற்காலிக வதிவிடங்களில் வசிப்போருக்குக் குடியிருப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதோடு, தொழில் வாய்ப்புக்கான வழிகாட்டுதல்,
3. விதவைகள், கைவிடப்பட்ட பெண்கள், ஊனமுற்றோர் ஆகியோருக்கான நிவாரணங்களை வழங்குதல், தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொடுத்தல்.
4. ஆதரவற்ற குழந்தைகளைப் பொறுப்பேற்று, 2 சிறுவர் இல்லங்களில் வைத்து வளர்த்தல்; ஒரு குறிப்பிட்ட தொகைப் பிள்ளைகள் உறவினர்களால் பராமரிக்கப்படுவதற்கான உதவிகளை வழங்குதல்.
5. போஷாக்குணவுத் திட்டத்தின் மூலம், தாய்மார், குழந்தைகளின் போஷாக்கினைப் பேணுதல்.
6. பாடசாலை மாணவர்களூடாக, 10,000 மரங்களை நடும் திட்டத்தைச் செயற்படுத்தல்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

